1181

சரும வியாதிகளுக்கு
சிராய்ப்புகள், வெட்டுகள், படை, சொரி, கரப்பான், கட்டிகள், கடி, விஷக்கடி, சதைத் தடிப்பு, முகப்பரு போன்ற இதர சரும உபாதைகளுக்கு
எக்ஸிமா
கட்டிகள்
பருக்கள்
வெட்டுக்காயம். புண்கள்
OINTMENT
Germex
CHLOROPHYLL
ஜெர்மெக்ஸ்
குளோரோபில் கலந்தது
லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம் & பார்மசூடிகல்ஸ் லிட். மதராஸ்-

ஆகஸ்டு 3உ முதல்
சென்னை
வெலிங்டன்
பிரபாத்
சரஸ்வதி
மற்றும் தென்னாடெங்கும்
V.கோவிந்தராஜன் அளிக்கும்
ஜுபிலி பிலிம்ஸ்
மர்ம
வீரன்
இசை
வேதாசலம்
வசனம்
A.L.நாராயணன்
ஸ்டுடியோ
வாஹினி



எமது சிறந்த
தயாரிப்பான
நான்கு நன்மணிகள்
ZAMA INHALER
ஜாமா இன்ஹேலர்
ஜலதோஷத்திற்கு
ZAMA RUB
ஜாமா றப்
ஜலதோஷம் தலைவலி முதலியவைகளுக்கு
ஜாமா ஆயில்
ஜலதோஷம் தலைவலி முதலியவைகளுக்கு
AMARCOSE
அமர்கோஸ்
அசல் குளுகோஸ் பவுடர்
அமர்சந்த் சோபாசந்த்
கபால் பெட்டி 518 --- சென்னை-3
போன் 2182
தந்தி "ஜாமா"

For

QUALITY DIAMONDS
EXQUISITE JEWELLERY
ARTISTIC SILVER WARES





M/s. T. GOVINDARAJULU NAIDU
DIAMOND MERCHANTS & JEWELLERS
28, NETAJI ROAD :: MADRAS-1.

★

Phone: 4818 **T.G.N.** Grams: "ALANKAR"

இந்தியன் பாங்க்
லிமிடெட்

(ஸ்தாபிதம் :  1907)

தலைமை ஆபீஸ்:

இந்தியன் பாங்க் கட்டிடம், வடக்கு பீச்ரோடு,
மதராஸ்-1

சென்னை நகர கிளைகள் :

எஸ்பிளனேட், சௌகார்பேட்டை, எழும்பூர், சேத்துப்பட்டு, திருவல்லிக்கேணி, மவுண்டு ரோட், ராயப்பேட்டை, ஆள்வார் பேட்டை — தேனும்பேட்டை, மைலாப்பூர், காந்திநகர், கோடம் பாக்கம், தியாகராயநகர், நுங்கம்பாக்கம், புரசைவாக்கம், பெரியமெட், ராயபுரம் & தாம்பரம் (சுற்றுப்புறம்)

தென்னிந்தியா முழுவதிலும், பம்பாய், கல்கத்தா மற்றும் புதுடில்லியில் கிளை ஆபீஸ்களும் சப்-ஆபீஸ்களுமிருக்கின்றன.

வெளிநாட்டு பிராஞ்சுகள் :

கொழும்பு, கோலாலம்பூர், மலாக்கா, பினங்கு & சிங்கப்பூர்.

மூலதனம்

அதிகாரம் பெற்ற மூலதனம்	...	ரூ.	1,00,00,000
வாக்களிக்கப்பட்ட மூலதனம்	...	ரூ.	72,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	...	ரூ.	62,02,615
ரிசர்வ் & இதர நிதிகள்	...	ரூ.	79,75,000
டிபாசிட்டுகள் (30-6-56உ அன்றுள்ளபடி)		ரூ.	32.08 கோடி

லண்டன் ஏஜண்டுகள் :— வெஸ்ட்மின்ஸ்டர் பாங்க் லிமிடெட்
நியூயார்க் ஏஜண்டுகள் :— பஸ்ட் நேஷனல் சிடி பாங்க் ஆப் நியூயார்க்.

வெளிநாட்டு பரிவர்த்தனை வியாபாரம் உள்பட சகலவிதமான பாங்கு அலுவல்களும் கவனிக்கப்படும்.

D. P. பார்த்தசாரதி, M.A., B.L.
ஆக்டிங் செக்ரடரி.

எனது இனப்பெயர்—தமிழன் எனது கொள்கை—சமதர்மம்
எனது தாய்நாடு — தமிழ்நாடு எனது குடும்பம்—இந்திய சமுதாயம்
எனது கோரிக்கை—தமிழரசு எனது பண்பு—தெய்வீகக் கலாசாரம்
எனது சமரசநெறி — சர்வதேச சகோதரத்துவம்

உமா

ஆசிரியர். ஐ. உமாபதி

துணை ஆசிரியர்:
பூவை எஸ். ஆறுமுகம்

செடி 4 மலர் 5	செப்டம்பர், 1956	துன்முகி ௵ புரட்டாசி ௴

பொருளடக்கம்

சிலம்புச் செல்வரே! வருக!		(தலையங்கம்)	 9
இலங்கையில் அறப்போர்		—	 10
போராட்டமும், உண்ணாவிரதமும்!		—	 11
நீதியும் அநீதியும்		—	 13
தம்பிக்கு	(கடிதம்)	'பதி'	 14
உங்களுடன் ஒரு கணம்		—	 18
பாரதியார்		அ. சீனிவாசராகவன்	 19
அட்டைப்பட விளக்கம்	(போட்டி)	—	 22
"கண்ணே, சுசீலா!"		'ரஜனு'	 23
வாடா விளக்கு	(புதிய தொடர்கதை)	'மாயாவி'	 24
இயற்கை–நியதி	(உருவகக் கதை)	'பாலா'	 28
இறை தானே?	(கவிதை)	'துறைவன்'	 29
ஏன் இந்தப் புனைபெயர்?		வல்லிக்கண்ணன்	 36
நடமாடும் தெய்வங்கள்		பி. எஸ். ஏ.	 38
பாட்டி ஒன்று நினைக்க....!		சு. ரா.	 39
ரங்கூன் ராமதுரை		சித்தார்த்தன்	 42
மதிப்புரை		'பிறைசூடி'	 47
மகிழம்பூ	(பரிசுக்கதை)	ச. கலியாணராமன்	 48
ஜாதி ரோஜா	(தொடர் கதை)	'பூவை'	 54
நல்லவர்–கெட்டவர்!		'அகிலன்'	 63
மர்ம வீரன்	(பட உலகம்)	'பைரவி'	 68
நாடக உலகம்		—	 69
எவ்விதம் நான் மறப்பேன்?		பண்டரிபாய்	 70
கண்டறியாதன கண்டேன்!		பி. கே. சரஸ்வதி	 71
கா. அப்பாத்துரை	(பேட்டி)	பூவை எஸ். ஆறுமுகம்	 72
தமிழன் வேண்டுவது	(கவிதை)	பரலி நெல்லையப்பர்	 75
உள்ளது உள்ளபடி!		—	 77

'உமா'வில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

Pilot
WORLD FAMOUS
PILOT INK
PILOT INK
FOUNTAIN PEN
AND INK
THE PILOT PEN CO., (INDIA) LTD.
OFFICE: CATHOLIC CENTRE, ARMENIAN ST, MADRAS-1. FACTORY: RED HILLS. MADRAS.

ஆஸ்த்மாவா?
ஒரு நொடியில் அதை ஒழிப்பது
மல்ட்டிமிக்ஸ்
தாராளமாக மூச்சு வரச் செய்து,
தொண்டைக்கு இதமாக இருந்து,
மூச்சடைப்பையும் இருமலையும்
போக்குகிறது.
MULTIMIX

197216

உமா

சிலம்புச் செல்வரே! வருக!

தமிழகத்திலிருந்து இடைவேளைச் சிறு பிரிவு இது என்றாலும், மிக நெருக்கடியான சிக்கல்கள் பலவற்றையல்லவா இப்போது தமிழகம் சமாளிக்கவேண்டிய நிலையிலிருக்கிறது! தமிழகத்தின் நல் வாழ்வுக்கான வழிவகைகளைப் பற்றித்தான் நம் தலைவர் அவர்கள் பர்மா நாட்டிலும் சிந்தித்துக் கொண்டிருப்பார் என்ற உண்மையைத் தமிழ் கூறும் நல்லுலகம் பரிபூரணமாக அறியும்.

கடல்கடந்த தமிழரும்—ஏன், இந்தப் பரந்த உலகத்தில் தமிழர்கள் எங்கெங்கு வாழ்கிறார்களோ, அங்கெல்லாம் நடமாடும் தமிழ்ச் சக்தியை வரவேற்கத்தான் செய்வார்கள். ம. பொ. சி. ஒரு தனி மனிதராக இருந்து, மறந்துபோன தமிழன் வீரத்தையும், குறைந்துபோன தமிழன் எல்லையையும், அழிந்துவரும் கலாசாரத்தின் குறையையும் எடுத்துக் காட்டினார். குறைந்துபோன எல்லைகள் சிலவற்றை மீட்டுக் கொடுத்தார். தமிழ்ப் பண்பாட்டினை வளர்த்து, மீண்டும் வீரத்தைத் தட்டி எழுப்பினார். தமிழகத்தின் தலைநகர் சென்னையை ஆந்திர ஆதிக்கத்துக்கும் செல்லாமல் காப்பாற்றித் தந்தார்.

தமிழகத்திலே பிறந்து தமிழனாக வாழ்ந்து தமிழில் பேச வெட்கப் பட்டவனை, இன்று தமிழ் பேசினால்தான் சமுதாயத்திலே மதிப்பு கிடைக்கும் என்று உணரும்படி மாற்றியமைத்தார். கிடைக்கயிருந்த மாபெரும் பதவிகளையெல்லாம் உதறித் தள்ளிவிட்டு, தன் சுகவாழ்வை குறைத்துக்கொண்டு தமிழினத்துக்காகப் பாடுபட்டார். உண்மையைப் புரிந்து கொண்ட தமிழகம், யாரும் கண்டறியாத புதுமையோடு அண்மையிலே பொன்விழா கொண்டாடி பொற்கிழி தந்தது. அந்தப் புனிதத் தலைவனைத்தான் ரங்கூன் நகரத்தில் வாழும் தமிழர்களெல்லாம் ஒன்றுகூடி, விமானத்தளமே திருவிழா களம்போல் காட்சியளிக்க வரவேற்றார்கள். செந்தமிழ்ச் செல்வருக்கு மலைமலையாக மாலைகளை அணிவித்தார்கள். குமரியை மீட்டு, வேங்கடத்தை மீட்கவிருக்கும் அந்தத் தோள்கள் மாலைகளின் சுமையைத் தாங்குவதில் என்ன ஆச்சரியம்!

'யாதும் ஊரே யாவரும் கேளிர்'; 'நான் பெற்ற இன்பம் அடைக இவ்வையகம்!' என்ற உயர்ந்த கற்பனையை எண்ணும் தமிழர் இதயம் இந்தக் காட்சியை மனக் கண்முன் கண்டு ஆனந்தமடையும். இந்த உத்தமத் தலைவனின் உழைப்பை உணர்ந்த பர்மாத் தமிழர்களையும், அங்குள்ள நல்ல இதயம் படைத்த யாவரையும், பண்பு கொண்டு பாராட்டிய பத்திரிகைகளையும் நாமும் வாழ்த்துகிறோம்; வரவேற்கிறோம். சொல்லின் செல்வரின் கம்பன் கவிதையையும், சிலப்பதிகாரத்தின் சிறப்பையும், புறநானூற்றின் வீரத்தையும், குறளின் குணத்தையும் புதுமையோடு போற்றி, அங்குள்ள தமிழர்களையும் மகிழ்வித்து, விடை பெறும் சிலம்புச் செல்வரை, 'தாயகத்தை நோக்கி வருக, வருக'வென்று வரவேற்கின்றோம்.

இலங்கையிலே அறப்போர்

இலங்கை முதலமைச்சர் திரு பண்டார நாயகாவின் அரசாட்சி தமிழ் மக்களுக்கு இழைத்து வரும் அநீதிகள் சொல்லத் தரமன்று. ஆட்சி பீடத்திலே சிங்கள மொழிக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் சமநிலை மதிப்பு தமிழ் மொழிக்கும் ஏற்பட வேண்டுமென்ற தமிழர்களின் கோரிக்கை யாதொரு பலனையும் சொல்லவில்லை. கொதித்தெழுந்து விட்டனர் இலங்கை வாழ் தமிழர்கள். தங்கள் உரிமையைக் காக்கவும், தமிழ்மொழி சம நிலையுரிமை பெறவும் அறப்போர் தொடுப்பதென முடிவாகி யிருக்கிறது.

தமிழரின் இவ்விடுதலைப் போராட்டம் எப்பொழுது தொடங்கும், எந்த உருவங்களில் புறப்படும் என்பதைப் பற்றிய விவரங்களை விரைவில் தெரிவிப்பதாக திருகோணமலையில் நடந்த தமிழரசுக் கட்சி மாநாட்டிலே திரு வன்னிய சிங்கம் தெரிவித்தார்.

இனியாவது திரு பண்டாரநாயகா தம் பெயருக்குக் களங்கம் ஏற்படாத வகையில், வருமுன் காக்கும் பண்புடன், தம் ஆட்சியில் நல்ல மாற்றம் செய்தால்தான், இலங்கைத் தமிழர் நெஞ்சங்களில் அவர் இடம் பெற முடியும்!

புத்துலகக் கவி மன்னன்!

தேமதுரத் தமிழ் வளர்த்த செல்வர்களுக்கு நன்றிக் காணிக்கை செலுத்தும் வகையில் அவர்களின் நினைவு விழாக்களைத் தமிழகம் சிறப்பான முறையில் கொண்டாடி வருவது மகிழ்ச்சிக்குரிய செய்தியேயாகும். வான் மறை தந்த தெய்வப் புலவர் திருவள்ளுவர், முத்தமிழ் விரவிய நாடகக் காப்பியம் புனைந்த இளங்கோவடிகள், 'பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திட வேணும்' என்று கனவு கண்ட பாரதி, அறம் வளர்த்த இராமலிங்க சுவாமிகள், புனை நெடுங்கதையின் தந்தை வித்தகர் வேதநாயகம் முதலிய தமிழ்ப் பெரியார்கள் நம் நெஞ்சிலும் நினைவிலும் நீக்கமற நிறைந்துள்ளனர். இப்பெரியார்களின் தொண்டினையும் பெருமையையும் நினைவுகொள்ளும் வண்ணம் நம் தமிழ்நாடு அவ்வப்போது விழாக்களைக் கொண்டாடி வருகிறது.

பாட்டுக்கொரு புலவன் பாரதியின் விழா நாளது செப்டம்பர் 11-ஆம் தேதி வருகிறது. தமிழ்ப் பற்றுக்கொண்ட சகல பகுதிகளிலும் பாரதிக்கு அஞ்சலிகள் செலுத்தப்படும். செய் நன்றியை மறக்காம லிருப்பதோடு தமிழகம் நின்றுவிடலாகாது; பாரதியின் லட்சியக் கனவுகளை முரசு கொட்டி முழங்கும் அன்னாரது தித்திக்கும் பாடல்களை தமிழ் இல்லங்கள் தோறும் எதிரொலிக்கச் செய்ய வேண்டுவது நம்முடைய தலையாய கடமையாகும்.

அமரகவி பாரதியாரின் கவியுள்ளம் தனித் தன்மையுடையது. விடுதலை வேட்கை, நாட்டுப்பற்று, தமிழ்ப் பாசம், பெண்கள் விடுதலை போன்ற எல்லா வகைப்பட்ட லட்சியங்களையும் கவிதை மலர்களாக்கித் தமிழன்னைக்கு மாலையாக அணிவித்தவர். அந்தத் தெய்வ மலர்மாலையின் சுகந்தம் நமக்கு வழிகாட்டி வருகிறது; நாம் பாக்கியம் செய்தவர்கள்; பாரதி நமக்குக் கிடைத்திருக்கிறார்!

'மங்காதாம் பாரதியார் நினைவைப் போற்றி,
மறவாமல் தமிழ்நாட்டார் வாழ்த்த வேண்டும்!

(நாமக்கல் கவிஞர்)

போராட்டமும், உண்ணுவிரதமும்!

பாரத புண்ணிய பூமியில் மற்றுமொரு சுதந்தர விழா வெற்றிகரமாகக் கொண்டாடப் பட்டது. அந்த வெற்றி விழாவின் கோலாகலம் இன்னமும் மாற வில்லை; அதற்குள் ஆமதாபாத் கிளர்ச்சி எல்லை கடந்து விட்டது.

இந்திய ஜனநாயகத்திற்கும் அடிப்படை ஒற்றுமைக்கும் குந்தகம் விளைவிக்கும் ரீதியில், பெரும் இருமொழி பம்பாய் மாகாண அமைப்பு உருவாகியுள்ளதென்று, அம்முடிவை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தார்கள் குஜராத்திய மக்கள். மொழிவழி ராஜ்யம் கோரி மராட்டியர்கள் நடத்திய போராட்டங்கள் இன்னும் அமைதி காண வில்லை; அதற்குள் குஜராத்தியர்களின் உரிமைப் போராட்டங்கள் உச்சநிலை அடைந்து விட்டன.

"குஜராத்தின் கண்யம் மிகுந்த பரம்பரை அழிந்து போவதைவிட நானே அழிந்து போவது மேலானதாகும். என்னுடைய மரணம் காரணமாக குஜராத் பாரததேசத்தின் வலிமை மிக்க பகுதியாக விளங்கட்டும்!" என்ற 'உருக்கமான' பிரசங்கத்துடன் தம் உண்ணு விரதத்தை மேற்கொண்டு முடித்துள்ளார் பம்பாய் பிரதமர்.

ஜனநாயக உரிமை பூண்ட மக்களுடைய மொழிப் பற்றையும், நாட்டுப்பற்றையும், இனப்பற்றையும் அழித்துவிடும் அளவுக்குச் சட்டங்கள் பிறக்கும்போது, இத்தகைய விபரீத விளைவுகள் ஏற்படுவதில் ஆச்சரியமில்லை.

"இருமொழி மாகாணம் மராட்டிய-குஜராத்திய மக்களுக்கு நல்லது" என்ற நேருஜியின் உபதேசம் இனியும் பலன பெருது.

இப்புதிய அமைப்பை தனித்தனியே எதிர்த்துப் போராட மகா குஜராத் பரிஷத்தும், சம்யுக்த மகாராஷ்டிர சமிதியும் தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ளன. அவ்விரு பிரிவினருக்கும் ஜனநாயகத்தில் நம்பிக்கை ஏற்படும் வழிகளை எச்சரிக்கையுடன் செய்ய வேண்டியதே தலைமை ஆட்சியாளரின் அவசர அலுவலாக அமையவேண்டும்.

உலக அரங்கிலே நாஸர்!

அரசியல் உலக அரங்கில், சூயஸ் பிரச்சினை உலகப் போர் ஒன்றைத் துவக்கி வைக்கும் பயங்கர நிலைக்கு வளர்ந்து வந்தது. சூயஸ் குழப்பத்திற்குத் தீர்வு காண, திரு வி. கே. கிருஷ்ண மேனன் ஐந்து அம்ச சமரசத் திட்டம் ஒன்றை அண்மையில் நடந்து ஒருவாறு முடிந்துவிட்ட லண்டன் மாநாட்டில் அதிகார பூர்வமாகச் சமர்ப்பித்தார்.

"இத்திட்டம் இல்லாமல், வேறு எம்முறையிலும் சூயெஸ் கால்வாயைக் கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்துவதென்பது எகிப்தின் அரசுரிமையை மறுப்பதாகும்; சூயஸ் பிரச்சினைக்கு நியாயமான முறையில் விடிவு காணு விட்டால், அதன் காரணமாக மிகப் பயங்கர விளைவுகள் ஏற்படும்" என்றும் திரு மேனன் எச்சரித்துள்ளார்.

இந்தியத் திட்டம் எகிப்து ஜனுதிபதி நாஸருக்குத் திருப்தியளிக்குமென்று செய்திகள் கூறுகின்றன. ஆனல், அமெரிக்கத் திட்டமோ புதிர் மயமாக இருக்கிறது. இவ்விரு திட்டங்களின் விளைவும் முடிவும் என்ன ஆகுமென்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்!

ஆட்சி மொழி – தமிழ்

"தமிழை ஆட்சி மொழியாக ஆக்க சென்னை அரசாங்கம் உத்தேசித்திருக்கும் விஷயம் அறிந்து மகிழ்ச்சி யடைகிறேன். மற்ற மாகாணங்களில் வழக்கிலிருக்கும் பிரதேச மொழிகள் ஆங்கிலத்தின் இடத்திற்கு வந்து கொண்டிருப்பதைப் போல, சென்னை ராஜ்யத்திலும் ஆங்கிலத்தின் இடத்தை தமிழ் அலங்கரிக்கும் என்றும் நம்புகிறேன்," என்று இந்தியக் குடியரசுத் தலைவர் தமிழை வரவேற்றும் வாழ்த்தியும் இருக்கின்றார்.

கவர்னர் திரு ஸ்ரீ பிரகாசா, தமிழ் ஆட்சி மொழியாகத் திகழுமெனப் பிரகடனப் படுத்தியிருக்கிறார்.

கல்லூரிகளிலே தமிழே போதன மொழியாக ஆகவும் ஆவன செய்யப் போவதாகத் தெரிவித்திருக்கிறார், கல்வி அமைச்சர் திரு சி. சுப்பிரமணியம் அவர்கள்.

யார் சொன்னாலும், சொல்லா விட்டாலும், தமிழ் ஆட்சி மொழியாக ஆகத்தான் போகிறது. இது உலக உத்தமர் மகாத்மா காந்தியடிகள் கண்ட இன்பக் கனவு. இப்படி எல்லா மொழி வழி மாகாணங்களும் தம் சொந்த மொழியிலேயே ஆட்சி புரிய ஆவன செய்ய வேண்டியது மத்திய ஆட்சியின் மகத்தான கடமை. ஆனால், தமிழர்களையும் வேதனைக்குள்ளாக்கினால், குஜராத்திய சம்பவங்களோ, மகாராஷ்டிர சம்பவங்களோ இங்கும் நடைபெற்று விடுமோ என்ற அச்சத்தில் எழுந்ததுதான் இந்த வாழ்த்துக் குரல்களோ என்று எண்ண வேண்டியிருக்கிறது.

ஆகவே, தமிழர்களை குஜராத்தியர்களாகவோ, மராட்டியர்களாகவோ அரசினர் மாற்றிவிடாமலிருப்பார்களென்று நம்புகிறோம்.

தலைவர்களுக்கு தமிழ் மொழி மீது 'புதிய அக்கறை' ஏற்பட்டிருப்பதற்கு நெருங்கிக் கொண்டிருக்கும் தேர்தல்தான் காரணமோ என்று பொது மக்கள் ஐயம் கொள்ளுவதும் நியாயமே அல்லவா?

பத்திரிகைத் தர்மம்...!

திருச்சித் தமிழ் எழுத்தாளர் சங்கம் திரு அ. வெ. ரா. கிருஷ்ணசாமி ரெட்டியார் தலைமையில் கீழ்கண்ட தீர்மானத்தை நிறைவேற்றி யிருக்கிறது:

"அண்மையில் 'அமுதசுரபி' யில் ஆரம்பமாகியிருக்கும் 'அன்பு அலறுகிறது' என்ற தொடர்கதையில், திரு அகிலன் அவர்களை நேரடியாகத் தாக்கி யிருப்பதையும், அவரது 'சிநேகிதி' என்னும் நவீனத்திற்கு எதிராக கேவலமான முறையில் எழுதப்பட்டிருப்பதையும் இச்சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது. தகுந்த நடவடிக்கை எடுக்க இச்சங்கம் தீர்மானித்து, அதற்கு திரு ரெட்டியார் தலைமையில் ஒரு செயற்குழுவை நியமித்துள்ளது."

இலக்கியத்தின் ஒழுக்க வரம்பை மீறியும், எழுத்துரிமையின் சட்ட வரம்புக்கு எதிராகவும் ஒரு எழுத்தாளரை இன்னொரு எழுத்தாளர் தாக்கி யிருக்கும் செயல் இலக்கிய வளர்ச்சிக்கே விடும் சவால் போன்றதாகும். ஆகவே, இந்நிலையைக் கண்டு வருந்துகிறோம். புதுமாதிரியான விளம்பரம் தேடிக் கொள்ள இப்படிப்பட்ட விசித்திரமான வழி கையாளப்பட்டிருக்குமேயானால், "இது பண்பல்ல!" என்று பத்திரிகைத் தொழில் தர்மத்தின் பெயரால் நம் சகோதரப் பத்திரிகைக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

பெங்களூர் ரங்கவிலாஸ் கொலை வழக்கில் கொலையாளிகளின் சார்பிலே, சென்னையிலும் மைசூரிலும் உள்ள பெரிய வக்கீல்கள் சிலர் ஆஜராகியிருக்கிறார்கள்.

இங்கிலாந்தில் ஷெபீல்ட் நகரில் கறுப்பர்களுக்கு வேலை கொடுப்பதை எதிர்த்து வெள்ளைக்காரத் தொழிலாளிகள் கிளர்ச்சி செய்து வருகிறார்கள்.

“இராமாயணம் நடத்தினால் குத்துவோம்; வெட்டுவோம்” என்று பொதுஜன எதிரொலி கிளம்பியது. “ஈ. வே. ரா பெரியார் தலைமையில் தேவாசுர யுத்தம் நடத்தி விட்டுத்தான் திருப்பூரிலிருந்து கிளம்புவேன்!” என்று நடிகர் எம். ஆர். ராதா சவால் விடுத்தார்.

ஆகஸ்ட் 13-ல், ஹிந்துக்களல்லாதார் திருப்பதி மலைக் கோயிலுக்குள் நுழையக்கூடாதென்று திருப்பதி தேவஸ்தான டிரஸ்டிகள் தடையுத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள்.

ஆமதாபாத் குழப்பத்தில் குஜராத்திப் பெண்கள் மீதும் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசித் துரத்தியடித்தார்கள் போலீஸ்காரர்கள்!

இருமொழி பம்பாய் ராஜ்ய அமைப்பை எதிர்த்து பார்லிமெண்ட் முன் இந்துமகாசபைக் காரியதரிசி இந்திர பிரசாத் உண்ணாவிரதம் இருந்தது தற்கொலை முயற்சியெனக் கைது செய்யப்பட்டார். ★

சௌராஷ்டிர ராஜ்யத்தைச் சேர்ந்த பிராமண குலத்தினரில் சிலர், தீபாவளி சமயத்தில் தங்களுடன் விருந்துண்ண ஹரிஜனங்களுக்கு அழைப்பு அனுப்பியிருக்கிறார்கள்.

பிச்சைக்காரர்கள் பிரச்சினையைத் தீர்க்க ‘ஏழைகள் கஷ்ட நிவாரண வரி’ ஒன்று விதிக்குமாறு முனிஸிபல் காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு எம். ராதாகிருஷ்ணன் யோசனை கூறினார்.

அலஹாபாத் ரயில் வழியில் அருண்குமார் பிரகாஷ் என்பவரிடம் இருபத்தையாயிரம் ரூபாய் கஞ்சா கண்டு பிடிக்கப்பட்டது. மிகவும் நாகரிகமாகக் காட்சியளித்த அவர் கைது செய்யப்பட்டார்.

ஏழைகளின் பணத்தைக்கொள்ளையடித்து, கோவில்கள் ஏராளமாகச் சொத்து சேர்ப்பதாக பூமிதான இயக்கத்தலைவர் வினோபாஜி சமீபத்தில் குறிப்பிட்டார்.

போலி என்று ருசுவாகாததால் பறிமுதல் செய்யப்பட்ட 118 மைதா மாவு மூட்டைகளை சென்னையில் ‘க்ரைம் பிராஞ்ச்’ போலீஸார் திரும்பக் கொடுத்து விட்டனர்.

“மிரட்டலுக்குப் பணிய மாட்டேன்; எதிர்த்துப் போராடுவேன்!” என்று நாஸர், பிரிட்டிஷ் பிரதமருக்கு எச்சரிக்கை செய்தார். ★

தியாகம் விலை பொருள் அல்ல!

அன்புள்ள தம்பி!

அன்றே நான் படித்துப் படித்துச் சொன்னேன்—தியாகம் என்ற விலை மதிப்பற்ற பொருளை விலை கூறும் நிலை கூடாதென்று! அதன் சக்தியின் உருவங்களை — அது சாதித்த மாபெரும் செயல்களை வெவ்வேறு கோணங்களிலிருந்து பார்த்தால் தான் உனக்கு நன்றாகப் புரியும். தேசவிடுதலைக்காகவும், சமுதாயத்தின் உயர்வுக்காகவும் தியாகத் தீயிலே குதித்தவர்களின் ஒரு சில வரலாறுகளைக் கூறுகின்றேன், கேள். எத்தனையோ மாணவர்கள் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும் போதே, தேசவிடுதலைக் கிளர்ச்சியிலே பங்கெடுத்துப் பணியாற்ற இறங்கினார்கள். அவர்களில் சில பேர் குடும்பத்தின் எதிர்ப்புக்கு ஆளானார்கள்; பல பேர் கல்லூரிகளை விட்டு வெளியேற்றப்பட்டார்கள். அவர்களில் எத்தனையோ பேர்கள் பட்டதாரிகளாகவும், நாவலர்களாகவும், நல்லறிஞர்களாகவும், வழக்காடுபவர்களாகவும், இன்னும் பலபல துறைகளிலே சிறந்து விளங்கியிருப்பார்கள். அத்தகைய உயர்ந்த நிலையை அடைய வேண்டியவர்கள் சிறையிலே வாடியதோடு, வாழ்க்கையிலும் வறுமையிலும் வேதனைக்கு உள்ளாகி, அத்தோடு சமுதாயத்தின் கேலிச் சொற்களுக்கு வேறு ஆளாகியிருக்கிறார்கள். காரணம்—அவர்களிடம் உள்ள ஒரே பொருளான விலை மதிப்பற்ற தியாகத்தை வறுமை தாளாது விலை பேச ஆரம்பித்து விட்டார்கள்.

புதிதாக மணமான இளம் மனைவியை விட்டுப் பிரிந்தவர்கள், சக்தியற்ற தாய் தந்தையர்களைத் தவிக்க விட்டுப் போனவர்கள், திருமணம் செய்யும் பக்குவம் பெற்ற சகோதரிகளை அனாதைகளாக்கிச் சென்றவர்கள், தொழிற்சாலையில் உத்தியோக உயர்வு ஏற்படும் தருணத்தில் உதறிப் போனவர்கள், கர்ப்பிணியாகிய மனைவி மக்களையும் ஆதரவற்ற நிலையில் நிறுத்திச் சென்றவர்கள், தான் துவக்கிய வியாபாரம் பக்குவ நிலை அடைந்து வரும் நேரத்தில் சிறைக்குச் சென்றவர்கள், தாய் தந்தையற்ற இளம் சகோதரர்களைத் தவிக்க விட்டுப் போனவர்கள் — இப்படி எத்தனையோ அல்லலுக்கிடையே அரசியல் போராட்டத்தில் குதித்து, குண்டாந் தடிக்கும் துப்பாக்கிக் குண்டுக்கும் ஆளாகி குருடனாகவும் செவிடனாகவும் நொண்டியாகவும் முடவனாகவும் ஆனவர்கள் எத்தனை எத்தனையோ பேர்! அதோடு மட்டுமல்லாமல், சிறைச்சாலையிலே நயவஞ்சகமாகவும் அநியாயமாகவும் சாகடிக்கப் பட்டவர்களும் உண்டு.

விடுதலைக்குப் பின்னே வெளியேறியவர்களில் சிலர் தம் குடும்பங்களுக்குச் சென்றபோது, கல்லூரியில் தோழர்களாக இருந்தவர்கள் கடை முதலாளியாகவும், உயர்ந்த உத்தியோகஸ்தனாகவும் வாழ்ந்து கொண்டிருக்கும் நிலையைப் பார்க்க முடிந்தது. மணம் செய்தவுடன் மனம் துடிக்க விட்டுச் சென்ற இளம் மனைவியை வீடு கூட்டும் வேலைக்காரியாகக் கண்டார்கள். சக்தியற்ற சில தாய் தந்தையர்கள் புழுதியிலே கலந்துவிட்ட செய்தி கிடைத்தது. அனாதைகளாக விட்டுச் சென்ற சகோதரிகளில் ஒரு சிலர் வறுமையினால் வாடி, 'சறுக்கி விழுந்த' விடுதியில் சேர்க்கப்பட்டு இருப்பதை அறிய முடிந்தது. உத்தியோக உயர்வு கொடுக்கக் காத்திருந்த தொழிற்சாலையில் உள்ளே நுழையக்கூட அனுமதி கிடைக்காமல்போய்விட்டது. கர்ப்பிணியான

மனைவி மக்களைக் காணத் துடித்தவர்களுக்கு, மனைவி கர்ப்பச் சிதைவு ஏற்பட்டு மாண்டு போனதாகவும், மக்களில் ஒருசிலர் சோம்பேறித் திருக்கூட்டத்திலும் அனாதை ஆசிரமத்திலும் அங்கம் வகிக்கிறார்களென்பதையும் தான் கேட்க முடிந்தது. வியாபாரத் துறையில் பொருளும் புகழும் கிடைக்க வேண்டியதற்குப் பதிலாக அப்படி ஒரு வியாபார ஸ்தலமே அங்கு நடந்ததா என்று அடையாளம் தெரியாமல் ஆகியிருந்தது.

இது என்ன தம்பி? இவர்களைவிட கண்ணுக்குத் தெரியாத களங்கமற்ற தியாகிகள் நம் நாட்டுத் துரோகிகளால் காட்டிக்கொடுத்து, நாடு கடத்தப்பட்டு காடுகளிலே மறைந்து மிருகங்களாக வாழ்ந்து மாண்டு போனவர்கள் எத்தனையோ பேர்! இவர்களின் தியாகத்தால் கைப்பற்றப்பட்டதுதான் காங்கிரஸ் ஆட்சி.

தியாகத்தின் நிறம் தெரியாதவர்கள் கூட பொருளாதார வசதி பெற்றிருந்தால், தியாகத்தை விலை போட்டு வாங்கிவிடவும் முடிகிறது. அப்படிப்பட்டவர்கள் பட்டியல்தானே இப்போது அதிகமாகக் காணக்கிடக்கிறது! இவர்களிலே வசதி பெற்ற தியாகிகள் ஆட்சி பீடம் ஏறியிருக்கிறார்கள்! இவர்கள் பதவி கிடைக்கும் என்ற பற்றுதலுடனே தியாகம் புரிந்தவர்கள்!

ஆனால், நீயோ மாற்றானிடத்திலே நாடு அடிமைப் பட்டிருக்கிறதே என்ற மனக் கொதிப்பில் நான்மேலே குறிப்பிட்ட எந்த ஒரு நினைவையும் எண்ணிப்பாராமல் தியாகத் தீயிலே இறங்கிவிட்டாய்; அத்தகைய மாசற்ற தியாகத்திற்கே மக்கள் சமுதாயத்தில் மதிப்பில்லாமல் போய் விட்டதே? ஒழுக்கமாக வாழ்ந்து கொண்டிருக்கும் உன்னிடத்திலே உணர்ச்சியைத் தட்டி எழுப்பி, மீண்டும் உன்னைச் சமுதாயச் போராட்டத்திலே தள்ளப் பார்க்கிறார்கள்! இவர்கள் குரல்களிலே எந்தக் குரலில் சமுதாயத்தின் உண்மையான உயர்வும் இன உணர்ச்சியும் இருக்கிறது என்று சிந்தித்து, இந்தப் போராட்டத்திலே கலந்து கொள்ள நமக்குத் தகுதி இருக்கிறதா, நம்மால் பிறர் பாதிக்கப்பட மாட்டார்களே என்று எண்ணி, பிறகு நாமே இந்தத் தியாகத்தை விலை கூற மாட்டோமல்லவா என்ற உறுதி உன் நெஞ்சிலே இருந்தால், உற்சாகத்தோடு அமைதியான அறிவுப் புரட்சியிலே நீ கலந்து கொள்வதை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன்.

ஆனால் இன்றைய ஆட்சியில் உள்ளவர்களோ மக்களால் மதிக்கப் பெறாதவர்கள். அதுமட்டுமல்ல; தேர்தலிலே தோற்றுப் போனவர்களும் ஆட்சி பீடத்திலே இருப்பதால், மக்களுக்கு அச்சம் குறைந்து விட்டது. அதன் மூலமாக அநீதிகள் தாண்டவமாட ஆரம்பித்து விட்டன.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் ஒரு சிலர், பாவம் கற்றறிந்தும் தொழில் செய்து சம்பாதிக்க வழியின்றி, அப்பதவியை துர்வினியோகம் செய்து கைக்கூலி வாங்கிப் பிழைக்கும் இழி நிலையையும் இன்று நாம் காண்கின்றோம்.

இப்போது சொல் தம்பி! உனக்காக, உன் வாழ்விற்காக, உன் குடும்பத்தின் உயர்வுக்காக தொழிலையோ வியாபாரத்தையோ கவனித்து, அது உங்கள் வாழ்விற்குப் போதுமானது என்று புரிந்து, அதன் பின்னே சமுதாயத்தை உயர்த்த தியாகத் திருக்கூட்டத்திலே நீயும் ஒருவனாக மாறி, அதன் வெற்றிக்கு பின்னே தியாகத்திற்கு விலை கேட்கும் சூழ்நிலையில் வாழாமல், சமுதாயத்தில் மதிக்கும் தியாகியாக வாழ நீ ஆசைப்படுகிறாயா? அல்லது, உன் குடும்பத்தின் நிலையை உயர்த்தாமல் வியாபாரம், தொழில் முதலியன செய்து உன்னையே நீ காப்பாற்றிக் கொள்ள நினைக்காமல், தியாக வீரனாக மாறி, பிறகு அதன் வெற்றியிலே உன் தியாகத்தை விலைபேசி, சமுதாயத்தின் கேலிச் சொற்களுக்கு ஆளாகி நீ வாழப் போகிறாயா?

இதில் நீ எந்த வாழ்வைத் தேர்ந்தெடுக்கப் போகிறாய் என்பதை உன் முடிவிற்கே விட்டுவிடுகிறேன்.

உன் அன்புள்ள தமையன்.

எங்கள் இதயங்கள் பேசுகின்றன

'திருக்குர் ஆன் காலாவதியாகி விட்டது; அது குறிப்பிட்ட ஒரு இனத்தவருக்கு மட்டுமே ஒழுக்கத்தைப் போதிக்கும் நூலாகும்; மற்றவருக்கு ஏற்றதல்ல' என்று கூறும் ஒரு சில நிறுவனங்கள் நம்மிடையே தலைதூக்கியுள்ள இற்றை நாளில், அந்நூலின் போதனை யாவருக்கும் பொதுவே என்பதை தாங்கள் 'உமா' வின் வாயிலாக வெளியிட்டுக் காட்டி விட்டீர்கள்.

தொடர்ந்து இம்மாதிரிப் பல தரப்பட்ட போதனைகளை 'உமா' வில் வெளியிடுவீர்கள் என்று எதிர் பார்க்கிறேன். நடுநிலைமையாகச் செயலாற்றி நல்லபல கருத்துக்களைத் தாங்கி வரும் 'உமா'வை வாழ்த்துகிறேன்.

எம். பாதிமா, கீழக்கரை.

....ஜயலக்ஷ்மி எழுதிய 'பயணமும் பணயமும்' என்ற சிறுகதை நல்லதொரு கதை. திரு ஆறுமுகம் அவர்களின் 'இதயம் வேண்டும்'– வானொலி நாடகம் பிரமாதம். அவருக்கே உரிய நடை; உயர்ந்த கருத்து. 'பூவை'யின் 'ஜாதி ரோஜா' தொடர் கதை விறு விறுப்புடன் வேகமாக வளர்கிறது.

கோ. அனந்தகிருட்டினன்
தேவகோட்டை.

....திரு பதியின் 'தங்கைக்கு' நம் தமிழ் நாட்டு நங்கைமார்கட்கு மிகவும் அவசியமானது. தமிழ் வாணனின் பேட்டியில் சிரிப்பும் சிறந்த கருத்தும் கலந்து அள்ளி ஊட்டுகிறார் 'பூவை'. நவீனனின் புனை பெயர் விளக்கம் நவீனமாகவே யிருக்கிறது. 'நீதியின் ஆணை', 'இதயம் வேண்டும்' நல்ல முயற்சி. பேராசிரியர் ந. சஞ்சீவி நம்மை இலக்கிய வுலகுக்கு இழுத்தேகுகிறார். 'ஜாதி ரோஜா'வின் நடையமைப்பு மலருக்கு மலர் உயர்கிறது. 'மெய்வேல்' குரல் தரும் கோலத் தமிழை 'உமா' உலகுக்கு உணர்த்துகிறது. மொத்தத்தில் மலர் சிறப்புடையது.

டி. எம். எம். தாஜுத்தின்
அபிவிர்த்தீஸ்வரம்.

....'பூவை'யின் உவமை நயத்திலே நவீனம். கருத்தோ கலங்கரை விளக்கம். 'தங்கைக்கு' 'இதயம் வேண்டும்' நாட்டு நடப்புகளை நன்றாக நவின்று, நல்லறிவு நல்குகின்றன.

கூத்துச் செல்வன், வடசேரி

....குழந்தை எழுத்தாளர் தமிழ்வாணனின் பேட்டியைக் கண்டேன்; கொண்டேன் என்றுமில்லாத பரமானந்தம். 'நீதியின் ஆணை' படிக்க மிக நன்றாக யிருக்கிறது.

மு. பாரூக், கண்டி.

...உமாவின் ஒவ்வொரு ஏட்டையும் புரட்டும் போது ஒவ்வொரு விதமான எண்ணம் உண்டாகி, அந்த நினைவிலே மனம் தமிழினத்தையும் தமிழையும் தமிழரையும் போற்றுகிறது. 'தங்கைக்கு' பகுதியும் 'தமிழ்வாணன் பேட்டி' யும் ஒரே தித்திப்பு.

வேல்–பார்த்தசாரதி, விழுப்புரம்.

....என் கட்டுரையை சில நல்ல திருத்தங்களுடன் வெளியிட்டுப் பரிசு அளித்த உங்களது நல்ல மனத்துக்கு வணக்கம் செலுத்தக் கடமைப்பட்டவள்; என் சந்தாவையும் என் தோழிகள் நால்வரது சந்தாவையும் இன்று அனுப்பியிருக்கிறேன். 'தங்கைக்கு' என்ற கடிதம் பெண் குலம் தழைக்க உதவும்.

விஜயாசுகுமாரன், பாளையங்கோட்டை.

....'தங்கைக்கு' என்ற பகுதியினால் மாணவ – மாணவிகள் பலர்

பெரும் பயன் எய்துவார்கள் என்று எண்ணுகிறேன். தமிழ்வாணனின் பேட்டி விவரத்தை ரசித்தேன். 'இதயம் வேண்டும்' என் இதயத்தில் இடம் பெற்றது.

சொ. ஈசுவரமூர்த்தி, சென்னை.

...அன்புள்ள உமா! நீ உனக்குரிய தனித் தன்மையிலே பவனி வருகின்றாய். உன் நண்பர்கள் உலகம் செய்யத் தவறி விட்ட சில புதுமுறைகளைச் செய்து, அதனால் உனக்குரிய நன்மதிப்பைப் பெற்று விட்டாய். ஏன், சில பத்திரிகைகள்கூட உன்னால் 'விழிப்பு' அடைந்து வருகின்றன.

நிற்க, புனைபெயரினுள் மறைந்திருக்கும் எழுத்தாளர்கள் 'ஏன் இந்தப் புனைபெயர்?' என்ற கேள்விக்குவிடையளிக்கும்போது, தயவு செய்து அவர்களின் சொந்தப் பெயரையும், விலாசத்தையும் வெளியிடும்படி வேண்டிக் கொள்கிறேன்.

வெ. பெருமாள், புதுவை

ஓவியர் திரு மாதவனின் கைவண்ணம்பட்டு அழகு தெறிக்கும் 'உமா'வின் முகப்பிலிருந்து எல்லாமே இந்த இதழில் நன்கு அமைந்துள்ளன. இதழுக்கு இதழ் 'உமா'வின் தரம் உயர்ந்து வருவதாலோ என்னவோ, லயோலா ஹாஸ்டலில் அதிகம் பேர் 'உமா' படிப்பதைக் காண்கிறேன்.

எஸ். என். பழனிச்சாமி, சென்னை

ஆகஸ்ட் மாத 'உமா' இதழ் ஓர் இலக்கிய ஏடாகவே திகழ்ந்தது. பரிசுக் கதையில் சிறந்த கருத்து புதைந்துள்ளது. இம்மாத 'ஜாதி ரோஜா'விலே புதுமை மிளிர்கிறது. இலக்கிய வளர்ச்சிக்குப் பாடுபடும் உமாவின் நிலை கண்டு பெருமைப்படுகிறோம்.

வெள்ளையன்–சுந்தரம், அறந்தாங்கி.

...'உமா'வில் தாங்கள் புத்தம் புதிய சுவையான அம்சங்கள் அநேகத்தை அநாயாசமாகப் புகுத்தி விடுகிறீர்கள். அவற்றைப் பாராட்டி எழுதப் புதிதாக வார்த்தைகள் அகப்படாது நான் திணறுகிறேன்.

கௌசல்யா சம்பத், திருச்சிராப்பள்ளி

...அன்னை மொழியாம் அழகுத் தமிழை — ஜீவத்தமிழை — அழித்து விடவும் சிதைத்துவிடவும் கயவர்களும், 'சின்னது'களும் கங்கணம் கட்டிக்கொண்டு காரியம் ஆற்றும் இந் நேரத்திலே, 'உமா'வின் சேவை மிகவும் உவகையளிக்கிறது. குறிப்பாக, தமிழகத்திலே கணக்கற்ற பத்திரிகைகளிருந்தும், அவற்றால் நாட்டுக்கோ மொழிக்கோ ஒன்றும் பயனில்லை. இந்த இழி நிலையை மாற்றியமைக்கும் இன்பணியில் 'உமா' பல்லாண்டு காலம் நீடு வாழ வாழ்த்துகிறேன்.

கா. தமிழ்த் தம்பி, சின்னாளப்பட்டி

...நீதிமன்றங்களிலும் கல்வி நிலையங்களிலும் எங்கும் தமிழ் முழங்கவேண்டும். தமிழ் வளரத் தமிழகத்தில் எல்லா உத்தியோகங்களிலும் தமிழர்களையே நியமிக்கவேண்டும்; குறிப்பாகக் கல்வி இலாக்காக்களில் தமிழ் அதிகாரிகளையே நியமிக்க வேண்டும்! மங்களூர்க்காரர்களையும், கன்னடக்காரர்களையும் மலையாளிகளையும் கல்வி இலாக்காக்களில் நியமித்தால், வாங்கும் சம்பளத்திற்கு யந்திரங்களைப்போல வேலை செய்வார்களே தவிர, தமிழ் உணர்ச்சியுடன் வேலை செய்யவே மாட்டார்கள்! இதனால் மற்ற மொழிக்காரரிடம் எனக்குத் துளிகூட வெறுப்புக் கிடையாது. தமிழகத்தின் எதிர்கால நன்மைக்காகவே இதைக் கூறுகிறேன்.

டி. ராஜன், திருச்சிராப்பள்ளி.

உங்களுடன் ஒரு கணம்...

தாமிர பர்ணி மண்ணில் விளைந்து, பொதிகைத் தென்றலில் மிதந்து வரும் நெல்லைத் தமிழ் புதுமைப்பித்தன், சோமு, சுகி, வல்லிக்கண்ணன் போன்ற பிரபல எழுத்தாளர்களுக்குக் கதைகள் — நவீனங்கள் புனைய உயிர் கொடுத்தது; அதே நெல்லைத் தமிழில் 'வாடா விளக்கு' என்ற அற்புதமான தொடர்கதையை இப்பொழுது ஆரம்பித்திருக்கிறார், பிரபல நாவலாசிரியர் 'மாயாவி' அவர்கள். பொருநை நாட்டின் நடைமுறைப் பேச்சுத் தமிழ் மூலம் ஆசிரியர் சித்திரிக்கும் சம்பவப் பின்னல்கள் மிகுந்த சிறப்புப் பெறுகின்றன.

சென்ற இதழ் அட்டைப்படப் போட்டியில் நாங்கள் கையாண்டிருந்த மாற்றத்தைப் போற்றியிருக்கிறார்கள் பலர். போட்டியில் கலந்து கொண்டவர்கள் இரண்டாயிரத்து நானூற்றென்பது பேர். பரிசு விளக்கம் பற்றி வேறொரு பக்கம் சொல்லக் காத்திருக்கிறது. ஓவிய மன்னர் திரு கே. மாதவன் அவர்கள் தீட்டிய இவ்விதழ் அழகியும் அழகனும் நீரோடையும் முடிச்சிட்டுக் காட்டும் எண்ணங்களை இரண்டே இரண்டு வரிகளில் ஓர் அஞ்சல் அட்டையில் வடித்து எங்களுக்குத் தூதனுப்புங்கள். பரிசு: **அரையாண்டுச் சந்தா.** பரிசுக்குரியவர் எண்ணிக்கை: **ஐம்பது.** முடிவு நாள்: **20-9-56.**

பாட்டுக்கொரு புலவனைப் பற்றி பேராசிரியர் அ. சீ. ரா. அவர்கள் சுவையாகச் சொல்லியிருக்கிறார். திரு வல்லிக்கண்ணன் அவர்களுடைய புனைபெயர் வரலாற்றை வெளியிட்டிருக்கிறோம்.

பன்மொழிப் புலவர் திரு அப்பாத்துரை அவர்கள் இம்முறை பேட்டி தந்திருக்கிறார்.

நண்பர் திரு அகிலன் அவர்கள் எழுதிய 'நல்லவர் — கெட்டவர்' என்ற கதை 'கங்கா'வில் இடம் பெற்றது. இன்னும் பெருவாரியான வாசகர்களின் கண்களிலே மேற்படி கதை படவேண்டுமென்ற எண்ணத்தில், கதாசிரியரின் உரிமையுடன் அதை மீண்டும் வெளியிட்டிருக்கின்றோம்.

சிலம்புச் செல்வர் திரு ம. பொ. சி. அவர்களுக்கு ஓய்வு கிடைக்கவில்லை — ஓய்வு தரவில்லை பொது மக்கள். தமிழர்களின் அன்பையும் பாசத்தையும் என்றும் மதிப்பவர் நம் தலைவர்! இந்நிலையில், பர்மாப் பயணம் வேறு. ஆகவே, 'மாதவியின் மாண்பு' அடுத்த இதழில் தொடரும் என்று உறுதியளித்திருக்கிறார்கள்.

தமிழ் இலக்கியத்தில் ஈடுபாடு கொண்டவர்களின் ஆர்வத்தைக் கிளறி விட்டிருக்கும் 'இலக்கியப் பட்டி மண்டபம்' என்ற புத்தம் புதிய பகுதியை வரும் இதழிலேயே தொடங்கிவிட முடிவு செய்திருக்கிறோம். இப்பகுதியில் பங்கு பெற வேண்டி நாங்கள் அனுப்பிய அழைப்பை உவகையோடு ஏற்றுக் கொண்ட தமிழன்பர்கள்: பன்மொழிப் புலவர் **தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்;** சிலம்புச் செல்வர் ம. பொ. சி; பேராசிரியர்: **அ. சீனிவாசராகவன்;** 'கலைமகள்' ஆசிரியர் செந்தமிழ்ச் செல்வர் **கி. வா. ஜகந்நாதன்;** பன்மொழிப் புலவர் **கா. அப்பாத்துரை;** பேராசிரியை **ஆ. ரா. இந்திரா;** 'ஈழகேசரி' ஆசிரியர் **இராஜ அரியரத்தினம்;** அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் **லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார்;** 'கலைக்கதிர்' **போ. குருசாமி.**

வணக்கம்.

ஆசிரியர்.

பாரதியார்

அ. சீனிவாசராகவன்

தமிழ் இலக்கிய வரலாற்றில், இக்காலத்தை, 'பாரதி சகாப்தம்' என்று குறிப்பிடலாம். இலக்கியத் துறைகள் பலவற்றில், பாரதியார் அவர்கள் புதிய பாதைகள் பல வகுத்தார்.

'ஜகத் சித்திரம்', 'விடுதலை' போன்ற கவிதை நாடகத் துணுக்குகள், 'நவதந்திரக்கதை' என்ற நீதிக் கதைத்தொடர், 'ஞானரதம்' என்ற வசன காவியம், 'வேதரிஷிகளின் கவிதை', 'பகவத் கீதை', 'கற்பனையூர்' போன்ற அற்புதமான மொழி பெயர்ப்புக்கள், 'தராசு' என்ற சிறந்த தன்மயக் கட்டுரை, 'சந்திரிகை' என்ற நாவல்–பாரதி வழி காட்டாத இலக்கியத்துறை ஏது? என்றாலும், அவருடைய சாதனையின் சிகரமாக விளங்குவது அவருடைய கவிதையே.

கவிதை கவிதையாக மலர வழி தெரியாமல் தடுமாறியது–இந்தச் சூழ்நிலையில் பாரதி பிறந்தார். தமிழ்க் கவிதையைப் போலிப் புலமைக் கோணங்கியிலிருந்தும் திருகலில் இருந்தும் விடுவித்தார். தத்துவ விசாரம் என்ற தகுதியிலாப் பெயரால், குருடர் அமைத்த இருட்கோட்டையிலிருந்து அதைச் சிறை மீட்டார். இம்மண்ணுலக வாழ்க்கையின் நட்டநடுவில், கேணியருகில், தென்னை மரக்கீற்றின் பட்டொளியில், இதய ஒலியின் அரவணைப்பில், கவிதையை வாழ வைத்தார். மனித வாழ்வின் இன்ப துன்பங்கள் என்ற அனுபவமாகிய உணவை ஊட்டினார். கவிதைக்கு உயிரான உண்மையை, நேர்மையை, அதற்குத் தந்து, எல்லையற்ற உலக வாழ்க்கைப் பொருள்களின் இதய எதிரொலியாக, சத்தியதர்சனமாக அதை வளர்த்து, அந்த வழியாக—வேறு வழிதான் ஏது?–வாழ்க்கையின் அடிப்படைத் தத்துவமாகி நிற்கும் மெய்ப் பொருளைத் தொடவும் முயன்றார். யாப்பருங்கலவாய்ப் பாட்டுக்குப் பதிலாக, அனுபவத்தைக் கவிதைக் கருவியாக்கினார். சொல்–அணி அடுக்குகளுக்குப் பதிலாக, உள்ளத்தொளியை வாக்கின் தெளிவாக்கும் வனப்பைக் கொணர்ந்தார். சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளைப் பேச்சிற்குப் பதிலாக, உண்மைப் பாவலருக்குத் தோன்றும் தன்மய தர்சனத்தைத் தனி முறையில் வகுக்கும் ஆற்றலைச் சமைத்தார். பொருளற்ற சொற் குவியல்களை, வண்ணமும் ஒளியும் வீசும் கோலப்பாடல் மணிகளாகக் கடைந்தெடுத்தார். தமிழ் நாட்டிலே, கவிதை தெளிந்த விழியோடு ஆழ்ந்த உணர்வோடு, ஆற்றலோடு, புனர்ஜன்மம் எடுத்தது. இதுவே பாரதியின் சாதனை.

'குப்பையிலே மலர் கொஞ்சும் குருக்கத்திக் கொடி'யிலிருந்து, 'முத்துச் சுடர்போல' முன்னே வரும் நிலவு வரையில், பார்க்கும் பொருள் ஒவ்வொன்றையும் அழகின் ஒரு திவலையாக பாரதி கண்டார். அழகின் அலைகள் நடனம் புரிகின்ற பேரரங்கமாகவே பிரபஞ்சம் முழுவதும் அவருக்குத்தோன்றியது. ஆகவே,

இவ்வுலகம் இனியது. இதிலுள்ள வான்
இனிமையுடைத்து; காற்றும் இனிது;
தீ இனிது, நீர் இனிது; நிலம் இனிது;
ஞாயிறு நன்று; திங்களும் நன்று;
வானத்துச் சுடர்களெல்லாம் மிக இனியன;
மழை இனிது; மின்னல் இனிது; இடி இனிது.

என்று பேசிக்கொண்டே போனவர், 'எத்தனை கோடி இன்பம் வைத்தாய், இறைவா, யாரால் இவற்றைக் கணக்கிட முடியும்?' என்று அந்த அழகு வெள்ளத்தில் தன்னை மறந்தார். காக்கை 'கண்ணுக்கினிய கருநிறக்காக்கை' ஆயிற்று. மனப்பருந்து வட்டமிட்டுப் பின் நெடுந்தொலை ஏகியது;

அதோடு பாரதியின் உள்ளமும் சென்றது. 'சின்னஞ் சிறிய குருவி அது, சிவ்வென்று விண்ணிடை'ப் பாய்ந்தது. பாரதியின் மனமும் சௌந்தர்ய ஆகாசத்தில் துள்ளியது. அவர் நின்ற இடத்திலிருந்து, எதைத் தொட்டாலும் அங்கே அழகு தோன்றியது. கற்பனை என்ற தரிசன வேதியால் மண்ணை யெல்லாம் அழகின் மாமாயமாக அவர் அமைத்தார். இதனல் புல்லிலே வயிரப் படை பிறந்தது. பூதலம் முழுவதும் அமுதமாகி மாறியது. அவர் போன வழி தெரிகின்றதல்லவா? அது அழகு என்னும் பாதை.

ஆனல் இப்பாதை கவிஞன் விரும்பும் போதெல்லாம், விரும்புகின்ற இடத்தில் எல்லாம் இவ்வுலகின் ஊடே வளைந்து செல்கிறது என்ருலும், அதன் தொடக்கமும், முடிவும், அது பாதையாக இயங்குகின்ற பான்மையும், கவிஞன் உள்ளத்தில் தான். 'அழகே உண்மை' என்று ஆங்கிலக் கவிஞன் கீட்ஸ் சொன்னுன், அதைக் கவிஞர்களாலேயே அனுபவ பூர்வமாக ஒப்புக்கொள்ள முடிகிறது. இராமலக்ஷ்மணர்களுடைய பாதம் பட்டவுடன் "காயெரி கனலும் கற்கள் கள்ளுடைய மலராக" மாறி விடுகின்றன என்று கம்பர் சொல்லவில்லையா! அதுபோல, கவிஞனுடைய பார்வை விழுந்தவுடன் பொருள்கள் அழகு பெற்று விடுகின்றன. கவிஞனுடைய மனத்திலிருந்து பெருக்கெடுத்தோடும் அழகுணர்வு, அவன் காணும் பொருள்களுக்கு சௌந்தர்ய முலாம் பூசி விடுகிறது. பிரபஞ்சத்தின் அழகுதான் கவிஞன் பாடுதற்குக் காரணம் எனறு சொல்வதைவிட, அவன் மனமே காரணம் என்று சொல்லி விடலாம்; அதாவது, காரணம் காணுமல் மயங்கலாம்.

உள்ளதெலாம் ஓர் உயிரென்று தேர்ந்தபின்
உள்ளம் குலைவதுண்டோ ?– மனமே
வெள்ளமெனப் பொழி தண்ணருள்
ஆழ்ந்தபின்
வேதனை யுண்டோடா ?

என்ற வேதாந்த முடிவையும், சாந்தியையும் நோக்கி அவரால் செல்ல முடிந்தது.

நாட்டு மக்கள் நலமுற்று வாழவும்
நானிலத்தவர் மேனிலை எய்தவும்
பாட்டிலே தனி இன்பத்தை நாட்டவும்
பண்ணிலே களி கூட்டவும் வேண்டி, நான்
மூட்டும் அன்புக் கனலொடு வாணியை
முன்னுகின்ற பொழுதிலெலாங் குரல்
காட்டி அன்னை பராசக்தி ஏழையேன்
கவிதையாகவும் தனக்கெனக் கேட்கின்ருள்.

இங்கே மனித அனுபவத்தின்மேல் படிந்து செல்லும் பரிவுப்பாதை ஞானத்தை நோக்கித் திரும்புகிறது.

பாரதி மெய்ப்பொருட் கவிஞனுகவும் முடிந்தது. கவிதை என்பது மனிதப் பண்பின் பல்வேறு அம்சங்களை, வண்ணங்களை, வார்த்தை வலையில் தேக்குவது தானே! மனிதனுக்கு மனிதன் உள்ள உறவையும், மனிதனுக்கும் மனித வாழ்க்கையின் அரங்கான இப்பிரபஞ்சத்திற்கும் உள்ள உறவையும், பொய் என்று அகற்றி விட்டால், கவிதை ஏது? இவ்வுறவுகளை உண்மையென்றும், உண்மைக்கு உண்மையான மெய்ப்பொருளை அடைய உதவும் சாதனங்கள் என்றும் பாரதி கருதியதால்தான், அவர் கையில், மெய்ப்பொருள் அறிவு நிலை கவிதையாகிறது. இந்த நிலையை, காதலனை அடைந்த ஒருத்தி பேசுவதுபோல் பாரதி வெளியிடும்போது, அதன் சொல்லுக் கடங்காத் துரியானந்தம், அவர் சொற்களில் ததும்புகிறது:

உச்சி குளிர்ந்ததடி – சகியே
உடம்பு நேராச்சு.
மச்சிலும் வீடுமெல்லாம் – முன்னைப்போல்
மனத்துக் கொத்த தடி.
இச்சை பிறந்த தடி – எதிலும்
இன்பம் விளைந்ததடி!
அச்ச மொழிந்ததடி – சகியே
அழகு வந்ததடி.

எண்ணும் பொழுதிலெல்லாம் — அவன் கை
இட்ட விடத்தினிலே
தண்ணென் றிருந்ததடி — புதிதோர்
சாந்தி பிறந்ததடி!

மெய்ப்பொருள் அனுபவம் இங்கே வர்ணிக்கப்பட்டிருக்கிறது. வேறு எத்தனையோ விதங்களில் அதை வெளியிடலாம். பாரதியும் அதைச் செய்திருக்கிறார். கடவுளைத் தோழனாகவும், குருவாகவும், சீடனாகவும், தாயாகவும், தந்தையாகவும், குழந்தையாகவும், வேலைக்காரனாகவும், ஆண்டவனாகவும் நமக்குக் காட்டியிருக்கிறார். இம்மாதிரியான கற்பனைகளின் மூலமாகத்தான் மனவாக்குக்கெட்டாத அகண்ட சைதன்ய அனுபவத்தைப் பற்றிப் பேச முடியும். தூண்டிற் புழு, சுடர் விளக்கு, கூண்டுக்கிளி, குழந்தையின் விளையாட்டுப் பொம்மை, பெண்மைக் குணம், தழல், எத்தனை எத்தனையோ பொருள்கள் மனித அனுபவங்கள், எல்லையில்லாத பேரின்பத்தைச் சுட்டிக் காட்டும் ஸங்கேதங்களாகப் பாரதிக்கு அமைகின்றன. மெய்ப்பொருள் இலக்கியத்தின் தவிர்க்க முடியாத இலக்கணம் இது. ஆனால், ஸங்கேதங்களாக பாரதி உபயோகிக்கும் பிரபஞ்சப் பொருள்களும், சாதாரண மனித வாழ்க்கைச் செய்திகளும், அனுபவங்களும், அவருக்குக் கேவலம் ஸங்கேதங்கள் அல்ல. ஏனென்றால் அவற்றிலேயே மெய்ப்பொருள்கள் தங்கியுள்ளது என்பதல்லவா அவருடைய சித்தாந்தம்? கயிற்றைக் காட்டிப் பாம்பை அவர் உணர்த்தவில்லை. அணுவைக்காட்டி அகண்டத்தைத் தெளிவாக்கவில்லை. அணுவைக் கொண்டு, அதனுள்ளேயே கிடக்கும் அகண்டத்தை நமக்குத் தர முயல்கிறார்.

பொய்கை ஆழ்வாரும் பூதத்தாழ்வாரும் கடவுளைக் கண்டார்கள். இந்த வையகத்தைத் தகளியாகவும், கடலை நெய்யாகவும், கதிரவனைச் சுடராகவும் அமைத்து, அந்த விளக்கொளியில் பரம்பொருளைக்கண்டதாகப் பொய்கை ஆழ்வார் சொல்லுகிறார். பூதத்தாழ்வாரோ, அன்பே தகளியாகவும், ஆர்வமே நெய்யாகவும், இன்புருகு சிந்தை இடு திரியாகவும் ஞானச்சுடர் விளக்கேற்றி, இறைவனை அறிந்தார். பாரதியைப் பற்றி நினைக்கும்போது இவ்விரண்டு ஆழ்வார்களின் ஞாபகமும் வருகிறது. பிரபஞ்சத்தின் சௌந்தர்ய விசாலமே பாரதியின் விளக்கு; மனிதப் பண்பின் மலரான அன்பே சுடர். இந்த ஒளியிலே அவர் கண்டது என்ன? எல்லாப் பொருளையும் ஊடுருவி நிற்கும் ஒருமை; மனித வாழ்க்கையின் குறைகளை நிறைவாக்க எப்போதும் இயங்கி வரும் பெருங்கருணை; அண்டகோளச் சுழல் நடுவிலே, அசையா நெஞ்சுடன் வாழ்வதற்காகப் பரம்பொருளைத் தொட கை நீட்டும் மனிதனுடைய பெருமை—இவையே, இந்த உலக நனவின் வழியாக, முன்னிய கவிதை ஒளியில், பாரதி என்ற கவிஞருக்குத் தோன்றிய பேரின்பப் பெரு நனவு.

பாரதி கவிஞர். மனமென்னும் எல்லையற்ற வெளியிலே செல்லும் அழகு, பரிவு, அறிவு ஆகிய மூன்று பாதைகளின் வழியாகவும் ஒரே காலத்தில் பாரதி நடந்தார். தம் அனுபவங்களையெல்லாம் தெளிந்த, உயிர்த் தமிழிலேயே வடித்துக் கவிதாமண்டபம் ஒன்றை அமைத்தார். அதனுள்ளே மனிதனுடைய பண்பு வளர்கிறது; அவன் சிறுமையெல்லாம் மறைகிறது; அவனுடைய ஆற்றல் பெருகி, ஆனந்தக் கடலில் சங்கமம் ஆகிறது. ❀

கடந்த ஆண்டு சென்னையில் பாரதியார் சங்கம் கொண்டாடிய பாரதி விழாவுக்குத் தலைமை தாங்கிய பேராசிரியர் திரு அ. சீ. ரா. அவர்களின் பேச்சிலிருந்து தொகுக்கப்பட்ட கட்டுரை.

வாசகர்கள் பக்கம் :

அட்டைப்படப் பரிசு

பேசிடுமோ கருங்கல்?
—நா. அனந்த கிருஷ்ணன், சென்னை—16.

சுட்டும் விழிச்சுடர்!
—க. மு. சந்தானம், பூவாளூர்.

சிலை பெண் ஆயிற்று;
பெண்ணே சிலை ஆனாள்!
—எஸ். சகுந்தலா, பம்பாய்—29.

ஏந்திய கரத்திலே உளி இல்லை;
தூண்டிய கையிலே ஒளி உண்டு!
—பூ. ச. ராமசாமி, பண்ருட்டி.

கலையின் சிரிப்புக்குக் காதலின்
சிரிப்பு போட்டியோ?
—எஸ். எம். மீரான், இலங்கை.

கற்சிலையும் காந்தச் சிலையும்!
—'இளங்கோ', மரவக்காடு.

இயற்கையை வென்றவன்!
—'அமுதன்', பாலக்காடு.

சிற்பி செதுக்கிய பொற்சிலை!
—எ. கே. அழகேசன், தேவகோட்டை.

'நங்கை கூறும் நவீனங்கள்
கேட்டீரோ!'
—பாரதிப் பித்தன், பி.ஏ. பி.டி. சிதம்பரம்

பேசாத சிலையே! நீ மெய்!
—புலவர் கருப்பையா, கோவை.

புனையா ஓவியத்தின் புனைந்த சிலை!
—எல். சாந்தா—சென்னை—7.

நகலுக்கு ஓர் அசல்!
—காமினி பத்மநாபன், சென்னை—1.

தூண்டாமணி விளக்கு!
—வி. ஐ. சந்திரன், திருப்பதி.

காவியப் பாவையா?
ஓவியச் சிலையா?
— ஏ. மாத்ருபூதம், கல்கத்தா—10.

கைமேல் பலன்!
—பாக்கியம் ராமசாமி, சென்னை—14.

கனவும் நனவும்!
— ஏ. ஹேமா, திருச்சிராப்பள்ளி.

தூங்காத விளக்கல்ல;
தூண்டாத விளக்கு!
—பி. ஏ. வஹாப், அதிராம்பட்டிணம்.

எது நிஜம்?
—எம். பாரதி, காக்கினடா.

'முகம் நோக்கின், தரை நோக்கும்!'
—இரணியல் சரோஜா, நெய்யூர்.

அழியும் அழகை அழியா
அழகாக்கிய அமரன்!
கே. எஸ். அண்ணாமலை அம்மாள்,
பட்டுக்கோட்டை.

உயிர்க்கலையின் தத்துவம்!
கி. சாரதா, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

சிலை சமைத்தவன் சிலையானானோ?
—சு. மாணிக்கம், பரமக்குடி.

'வாழுநமென்னுஞ் செருக்கு!'
—மீ. சு. கந்தையா, யாழ்ப்பாணம்.

குல விளக்கும் குல விளக்கும்!
—மே. மெய்யப்பன், புதுப்பட்டி.

சிலை உயிர் பெற்றதோ?
— திருவளர் வெள்ளையன், அறந்தாங்கி.

சிற்பி காண் அழகின்
அற்புதச் சின்னம்!
எஸ்.என். பழனிச்சாமி, லயோலா கல்லூரி

எல்லையிலே தமிழச்சிமகள்!
—இரா. சுந்தராம்பாள், அண்ணாமலைப்
பல்கலைக்கழகம்.

வாழும் காதல்!
—கல்பனா ரங்கசாமி, மதுரை.

சிந்தனைக் கர்ப்பத்தில்
சிலை ஜனித்தது!
—எஸ். சபாபதி, அறந்தாங்கி.

இரண்டாவது கடவுளும்
முதற் படைப்பும்
—நா. சோமநாதன், கண்டனூர்.

எல்லைச் சக்தி!
—பூ. நெல்லையப்பன், பாளையங்கோட்டை.

சிலையே, நீ பேச வல்லாயோ?
—சின்னப்பா தாசன், புதுக்கோட்டை.

ஆடாத பொற்பாவை!
- ஹென்றி சூசைநாதன், சென்னை—11.

உளியிடைப் பிறந்த உயிர்!
—போ. குணசாலி, சோழபுரம்.

பார்த்தான்; பார்த்தாள்!
—டி. ரத்தினம், தஞ்சாவூர்.

தேடி வந்த தெய்வத் தமிழ்!
—தமிழரசி, சுழிபுரம், இலங்கை.

இறப்பின் பிறப்பு!
—சந்துலால் பாஸ்கர், பாண்டிச்சேரி.

'சிருஷ்டிப் புதிர்!'
—'இதயன்', பூனா.

மோனத் தவம் புரியும்
ஞானக் கற்சிலை!
—'அறவாணன்', சேலம்-2.

கன்னித் திரு நோக்கு!
—டி. எஸ். வேங்கடரமணி, திருச்சி-2.

தெய்வச் சிலைக்குத்
தெய்விக உள்ளம்!
—பி. வேலாயுதம், பூவைமாநகர்.

'ஏடுகள் சொல்வதுண்டோ?'
- கே. பூமிநாதன், பெங்களூர்.

கலை சிரிக்கிறது;
காதல் பேசுகிறது!
-மு. நி. கோமளம், ராமநாதபுரம்.

சிற்பியின் உளி எங்கோ?
ஆனால், சிலை இங்கே!
—ப. நா. கோவிந்தன், நன்னிலம்.

ஜோடிப் புன்னகை!
—ஏ. சாரதம், முண்ணூர்.

போதையின் போதம்!
—நா. கந்தசாமிப் பத்தர், இரங்கூன்.

காதல் தூங்குகிறது!
— கமலக்கண்ணன், பழனி.

கல்லழகி! —எல். கருணாநிதி, திருமயம்.

மாற்றுச் சிரிப்பல்ல,
போட்டிச் சிரிப்பு!
—'சிற்பி', வ. உ. சி. கல்லூரி, தூத்துக்குடி.

"கண்ணே, சுசீலா!"

'ரஜனு'

அன்று ஞாயிற்றுக்கிழமை.

மணி ஒன்று.

ராகவன் வேகமாக எழுதுகிறன் இப்படி:

"கண்ணே சுசீ!

காலையிலே நடந்த சம்பவத்தால் உனது ரோஜா இதயம் வாடி விட்டதா....? என்மேல் ரொம்பக் கோபமா....? 'காப்பிக்கு இவ்வளவு நேரமா?' என்ருல், அப்படியா காப்பி டம்ளரை 'டக்'கென்று முகத்தில் அடிப்பது போல் வைப்பது....? அந்த ஆத்திரத்தில்தான் ஏதேதோ சொல்லி விட்டேன். எங்கே, கண்ணைத் துடைத்துக் கொள்....! சற்றே நீ முல்லை நகை புரி....!

உன்,
ராகவன்."

ராகவன் சிந்திக்கிருன்:

'சேச்சே, இப்படியா அவளுக்குக் கொஞ்சிக் கொஞ்சி எழுதுவது....? ஆணவக்காரி!....கூடாது.... ஆமாம், கூடவே கூடாது!'

*

மணி இரண்டு:

ராகவன் மீண்டும் எழுதுகிருன்:

"சுசீலா அவர்களுக்கு,

தாங்கள் காலையில் நடந்து கொண்டது அகம்பாவத்தனம்; எனக்கு அடங்கி நடக்கக் கூடிய, மனமொத்த ஒரு நல்ல மனைவி தான் தேவை – என்னை அடக்கியாள ஒரு எஜமானி அல்ல....! இன்று இரவு மெயிலுக்குத் தங்கள் பிறந்தகத்திற்குச் செல்லத் தயாராக இருக்கலாம்.

ராகவன்."

ராகவன் யோசிக்கிருன்:

'ஐயோ, பாவம்! இவ்வளவு கடுமையாகவா எழுதுவது? சேச்சே, கண் கலங்கி விடுமே....? கூடாது!'



*

மணி மூன்று:

ராகவனின் பேஞ கடுதாசியில் வேகத்தோடு ஓடுகிறது:

"சுசீ! காலையில் நடந்த சம்பவத்தில் நீ செய்தது தவறு என்று இதற்குள் நீ உணர்ந்திருப்பாயென நம்புகிறேன். தவறுக்காக மன்னிப்புக் கேட்டுக் கொள்ளும் வரை நிச்சயமாக நான் உன்னோடு 'டு'தான் – இது போன்று எதிர் காலத்தில் நடக்காத வண்ணம் பார்த்துக் கொள்ளுவாய் என்று நம்புகிறேன்.

ராகவன்."

*

மணி நாலு:

"இந்தாங்கோ, உங்களைத்தான்! மத்தியான்னம் ஒரு மணியிலிருந்து என்னமோ எழுதி எழுதிக் கிழிக்கிறீர்களே?.... அப்படியென்ன விஷயமாம்....?"

"ஹி....ஹி....அதுவா? அது வந்து.... சுசீ...."

"நன்ருகத்தான் இருக்கிறது, முதலில் பேஞவை மடக்கிவைத்து, மூக்குக் கண்ணுடியைக் கழற்றி விட்டு ஓய்வு கொள்ளுங்கள். சூடான காப்பியைச் சாப்பிடுங்கள். பிறகு என் பிடில் கச்சேரி!"

"அடே, ஏது இவ்வளவு சீக்கிரம் இன்று....? பரவாயில்லையே, சுசீ!"

"ஏன் தெரியுமா? இன்று மினர்வாவில் ஒரு புதுப்படம் ஆரம்பம். அதற்குத் திருமதி சுசீலா விஜயம் செய்யப் போகிருள், திருவாளர் ரா....க....வ....னுடன்."

மணி ஐந்து. ★

வாடா விளக்கு

மாயாவி

அத்தியாயம் – 1

கோலம் அழிந்தது

சங்கு—ஊதி சதாசிவப் பண்டாரம் சங்கரன் கோவில் வாசலில் நின்று, கையிலிருந்த சங்கை வாயில் புதைத்து, 'பூம் – பூம்' என்று ஊதினர். நின்றவாறே நித்திரை செய்து கொண்டிருந்த சங்கரன் கோவில் குட்டியானை, அந்தச் சங்கொலியால் விழிப்படைந்து, முறம் போன்ற காதுகளையும், விசிறி வாழை போன்ற வால் நுனியையும் ஆட்டிக் கொண்டு இரண்டு தடவை பிளிறிற்று.

திருநெல்வேலிக்குச் செல்லும் முதல் பஸ், போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய்க் கையெழுத்தைப் போட்டு விட்டு, சங்கரன் கோவில் வாசல்

வழியாக வந்து, போஸ்டாபீஸ் ரஸ்தாவில் திரும்பிச் சென்றது. பஸ்ஸுக்கு ஆள் சேர்க்கும் படலத்தில் ஒத்துழைத்த டிரைவர், ஹார்னை அடிப்பதில் தனக்குள்ள திறமையைக் காட்ட, கண்டக்டர் தனது தொண்டையின் வலிமையைக்காட்டி, "அத்தியுத்து,

ஆலங்குளம், தின்னேவலி, தின்னேவலி,'' என்று கூவினன்.

அப்பொழுது 'சீஸன்' சமயம். ஆதலால், ஸ்டேஷன் ரோடு வழியாகவும், 'மாசித் தெரு' என்ற தெற்கு மாசி வழியாகவும், போஸ்டாபீஸ் ரஸ்தாவின் வழியாகவும், ஜட்காக்களும் மாட்டு வண்டிகளும் குற்ருலத்தை நோக்கிச் சாரி – சாரியாகச் சென்று கொண்டிருந்தன. அவை சங்கரன் கோவிலை அடுத்த 'ஆணைப்பால'த்தின் மீது சென்றபோது எழுந்த 'கட கட' வென்ற ஓசை, வானம் உறுமுவது போன்றதொரு விசித்திரச் சத்தத்தை உண்டாக்கிற்று.

ஆணைப் பாலத்துப் படித்துறையில், ஆண்கள் பிரிவிலும் பெண்கள் பிரிவிலும் துணிகளைப் 'பளார் பளார்' என்று துவைக்கும் ஒலியும், 'சள சள' வென்ற பேச்சுக் குரலும் எழுந்தன.

> அறிவாளிகள் புகழைச் சுவீகரிப்பார்கள்; ஆனல் அவமானந்தான் முட்டாள்களின் மேம்பாடாயிருக்கும்.
>
> — கிறிஸ்துவ வேதம்

மேல மாசி வீதியும் தெற்கு மாசி வீதியும் கூடும் இடத்தில் இருக்கும் உற்சவ மண்டபத்தில், பலவேசம் பிள்ளை பலகாரக் கடையில் தோசை வார்க்கும்போது எழும் 'சுரீர்' என்ற ஒலியும், தோசையின் 'கம்'மென்ற மணமும், போவோர் வருவோரின் மூக்கைத் துளைத்து, நாக்கைச் சப்புக் கொட்ட வைத்தன.

பொழுது விடிந்துவிட்டது–தென்காசியில்!

சைவ வேளாளர்கள் வசிக்கும் வடக்கு மாசித் தெருவில் ஒரு காரை வீடு. அதன் வாசலை மெழுக்கிக் கோலம் இட்டுக் கொண்டிருந்தாள் ஓர் இளம் பெண். அவளுக்குப் பதினைந்து அல்லது பதினறு வயது இருக்கலாம். சிறந்த அழகி என்பது அவள் ஆடை அணிகளில் மாத்திரமல்ல, உடலின் ஒவ்வொரு அங்கத்திலும் தெளிவாகத் துலங்கிக் கொண்டிருந்தது.

புள்ளி வைத்து, இழை இழுத்து, கன்யாக் கோலம் போட்டுக் கொண்டிருந்தாள் அவள். அந்தக் கோலத்தை அவள் புதிதாகக் கற்றுக் கொண்டிருந்ததாலோ, அல்லது அவளுடைய மனம் கோலம் போடுவதில் கவியாமல், வேறு நினைவில் ஈடுபட்டிருந்ததாலோ தெரியாது–இழை சரியான புள்ளிகளைச் சுற்றி வராமல், மாற்றுப் புள்ளிகளையே வட்டமிட்டுக்கொண்டிருந்தது. நினைத்துப் பார்த்து, இழையை அழித்துப் போட்டுப் போட்டுச் சலித்துப்போன அவள், இறுதியில் கோலம் முழுவதையுமே காலால் அழிக்க ஆரம்பித்தாள்.

அச்சமயம், எதிர்ச் சாரியில் நாலைந்து வீடுகளுக்கு அப்பாலிருந்த ஒரு வீட்டிலிருந்து, இடுப்பில் குடத்துடனும், தோளில் சில பழந்துணிகளுடனும், வெள்ளைச் சேலையுடுத்திய வயதான பெண்மணி ஒருத்தி, காதிலுள்ள 'பாம்படங்கள்' ஆடி அசைய அவ்வழியே வந்து கொண்டிருந்தாள். அப்பெண் கோலத்தைக் காலால் அழித்துக் கொண்டிருப்பதைக் கண்ட அவள், ''இந்தா, ஏ காந்தி! என்ன வேலை செய்யுதாட்டி? விடியாம, வீட்டு வாசல்லே போட்ட கோலத்தை அளிப்பாகளா?'' என்று கடிந்து கொண்டாள்.

எங்கோ நினைவாக இருந்த அப்பெண் காந்திமதி திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள். அருகில் நின்ற மூதாட்டியைக் கண்டதும் கலக்கம் தீர்ந்தவளாய், ''பின்னே, என்ன ஆச்சி! நாலு நாளியாப் போட்டுப் போட்டுப் பாக்கேன், எள்வு கன்யாக் கோலம் கோணிக்கிட்டே போகுது. மூதியை அளிச்சுப் போட்டு இன்னேண்ணு

போட்டுக்கிடலாமின்னு....''
என்று சலித்தவாறு கூறினள்.

''அதுக்காவ விடியாமப் போட்ட கோலத்தை அளிப்பாளா? மூதி சதியா வராட்டாப் போகுது. வந்தவரைக்கும் சதின்னு நாலு இளுப்பு இளுத்துட்டுப் போகாம....''

''அதெப்படி ஆச்சி? கோலம்னு போட்டா, பாக்கறவங்க வக்கணை சொல்லாம இருக்க வேணும்?''

''அது சதிதான்ட்டி! ஆனா, கன்னி களியாத பொண்ணு நீ, விடியாம வீட்டு முத்தத்திலே கோலம் போட்டு அளிச்சேன்னா, கட்டிக்கிடப் போறவன் கூரில்லாதவனுயின்னா போயிடுவான்?''

''என்ன ஆச்சி, என்ன சொன்னிக?'' என்று அதிர்ச்சியோடு கேட்டாள் காந்திமதி.

''அதுதான்ட்டி; ஒன்னைக் கட்டிக்கப் போகுதில்லே, ஒங்க அத்தான். அவன் நீ இப்படி வீட்டு வாசல்லே கோலத்தைப் போட்டு அளிச்சுக்கிட்டிருந்தேன்னா, கூரு கெட்டவனப் போயிடுவான், தெரிஞ்சுக்கிட்டியா?''

இந்தப் பேச்சைக் கேட்டதும், ''ஆச்சி!'' என்று குமுறினள் காந்திமதி.

'ஆச்சி' என்று காந்திமதி அழைத்த சவுந்திரத்தாச்சி அவள் முகத்தைக் கூர்ந்து நோக்கினள். கண்கள் இடுங்கி, முகம் கனத்து இருந்த அப்பெண்ணின் தோற்றத்தைக் கண்டு திகைத்தவளாய், அருகில் வந்து அவள் காதோடு காதாக, ''என்னட்டி நடந்திச்சு? ஏன் அளுதிருக்கே?'' என்று கேட்டாள்.

''என் தலையெளுத்து ஆச்சி....'' என்று மேலே பேச வராமல் விசித்தாள் காந்திமதி.

''ஒன் தலையெளுத்துக்கு என்னட்டி? ராசாத்தி மாரிதி இருக்கே; ராசா கணக்கா அத்தான் ஒன்னைக் கட்டிக்கிடப்போகுதான்; தலையெளுத்தாமே, தலேலே களுத்து!''

''ஆச்சி!'' என்று மீண்டும் தேம்பினள் காந்திமதி; ''இந்த வாரியலுக்கு (விளக்குமாறு) அந்தப் பட்டுக் குஞ்சலம் இல்லேன்னு ஆயிப்போச்சு, ஆச்சி!''

''ஏட்டி...! என்னட்டி பேசுதே? ஒனக்கு மொறைப்புள்ளே நெல்லையப்பன்; அவனைத் தள்ளிப் போட்டு, இன்னொரு பயலுக்கு ஒன்னெக் கட்டிக் கொடுத்திடுவாளா ஒங்க அம்மை?''

''அம்மையும் ஆச்சு; பொம்மையும் ஆச்சு! அந்த எளவெடுத்தவ தான் நான் கட்டிக்கிட்டிருந்த கோட்டையையெல்லாம் நேத்து ராவு இடிச்சுத் தள்ளிப்போட்டா!''

> நற்குண நற்செய்கையுடையவன் சந்தன மரத்துக்கு ஒப்பாவான். கீழ்ப்புத்திக்காரர்கள் நிறைந்து விட்டால் குடும்பம் குட்டிச்சுவர் ஆகும்; தேசம் நாசமடையும்.
>
> —விவேகசிந்தாமணி

—இதைச் சொன்னபோது காந்திமதியின் கண்கள் பொலபொலவெனக் கண்ணீரை உகுத்தன.

''நீ என்னட்டி சொல்லுதே? ஒங்கம்மையா மொறை மாப்புள்ளையை விட்டுப் போட்டு....? எவளேம் நம்புவாளாட்டி இதே?''

''நம்பத்தான் மாட்டாக, ஆச்சி. நாங்கூட, நேத்து ராவு அத்தானே ஏங்கிட்டே சொல்லுத வரையிலும் நம்பலையே!''

''இது என்னட்டி அதிசயமாயிருக்குது!'' என்று கன்னத்தில் விரலை வைத்து வியந்து நின்றாள் சவுந்திரத்தாச்சி. பின்னர், இன்னும் இதை நம்ப மாட்டாதவளாய், ''ஏட்டி காந்தி; மெய்யாத்தான் சொல்லுதியா? என்னட்டி சொல்

உருவகக்கதை வரிசை : 4

இயற்கை—நியதி!

'பாலா'

அமுத சுரபி — அந்த மண்பாண்டம் — அந்தப் பிச்சை ஓடு கேட்டது : "ஒரு முழக்கயிறே! நீ இதயத்தைக் களவு கொடுத்து விட்டாயா ? அல்லது, நீ கால பாசத்தின் பிரதிநிதியேதானு ?.... நீ பாவி!...நான் வாழவைத்தேன்; நீ நொடி நேரத்தில் அவனை வீழ்த்தி விட்டாய். அதோ, அந்தப் பிச்சைக்காரன் மண்ணோடு மண்ணுகி விட்டான் !..."

கயிறு ஊசலாடிச் சிரித்தது : "காயமே இது பொய்யடா என்ற பாட்டை அனுதினமும் அயராமல் பாடினுன் இவன். உன்னையே கதியென நம்பினுன். நீ அவனுக்குச் சோற்றுப் பிண்டத்தை அள்ளி அள்ளி வழங்கினுய். ஆனுல் நீயோ மணிமேகலை காலத்தை விட்டு இந்தக் கலியுகத்தில் தோன்றி விட்டாய். அவனுக்கு அபயம் அளித்த அமைதியில் நீ ஆனந்தப்பட்டாய்! ஆனுல், அவனே அமைதி யிழந்த மனத்தோடு என்னைத் தேடிக் கண்டெடுத்தான். அவனுக்கு ஊர், உலகம், உற்ருர் எதுவும் சதமில்லையாம். பாவம், அவன் பரதேசி. வாழ்க்கையை வெறுத்தான். என்னிடம் புகல் கேட்டான். பிரம்மாவின் பிடியில் பிறந்த உயிர் என் பிடிக்குள் தஞ்சம் அடைந்ததில் எனக்குக் கர்வம் ஏற்பட்டது. நான் வெற்றி பெற்றேன் !....நான் சாமான்யமல்ல ! அழிக்கும் சக்தி நான் !"

அடுத்த கணம், மரக்கிளை ஒன்று முறிந்து விழுந்தது. மண் ஓடு சுக்கல் சுக்கலாக உடைந்தது. கயிறு கைகொட்டிச் சிரித்தது.

மறு விஞடி, எங்கோ பிடித்த காட்டுத் தீ அந்தக் கயிற்றையும் அரவணைத்துக் கொண்டது.

இயற்கை சிரித்துக் கொண்டிருந்தது!

லிச்சு அந்தப் புள்ளே ?" என்று கேட்டாள்.

"ஏன்ன சொல்லணும் ஆச்சி? என்ன சொல்லணுமோ அதைச் சொல்லிச்சு : 'காந்தி; ஒனக்கு வேறே மாப்பிள்ளை பாக்கச் சொல்லி அத்தை சொல்லிடிச்சு !' இன்னு சொல்லிச்சு. இன்னம் என்ன சொல்லணும், ஆச்சி ?"

"அடி ஆத்தே ! இது என்னட்டி, நாட்டிலே நகரத்திலே இல்லாத வளமையா யிருக்குது ! ஏனும் ? ஏன்னு கேட்டியாட்டி நீ ?"

"அதேம் கேட்டுப் போட்டேன், ஆச்சி. 'எல்லாம் அத்தையே கேட்டுக்கிடு'ன்னு சொல்லிடிச்சு."

"கோமதிட்டே நீ கேக்கலையாட்டீ ?"

"கேட்டேன்."

"என்னட்டி சொல்லுதா அவ ?"

"சொல்லுதா, சோத்துக்கு உப்பில்லேன்னு. அவ முசிருக்கொணம் ஒங்களுக்குத் தெரியாதா, ஆச்சி ? சொன்ஞ எனக்கு வெளங்காதாம் !"

"என்னட்டி வெளங்காதாம் ? நீ என்ன கொளந்தைப் புள்ளையா, வெளங்காமப் போகுதுக்கு ?"

"அதான் என் தலையெளுத்து ஆச்சி ! பாப்பாத்தி கணக்கா வேதாந்தம் பேசுதா—எவ எவங்களுக்கு எங்ஙனே எங்ஙனே முடி போட்டிருக்குதோ, அங்ஙனே தான் இருக்கக் கெடைக்குமாம். 'பேசாம இருட்டி; என் வவுத் தெரிச்சலே நீ ஓரண்டை கௌப்பாதே'ன்னு சள்ளுன்னு விளுதா !"

"சதி, சதி. இப்போ வெளங்கிப் போச்சு !" என்று தலையைப் பலமாக அசைத்தாள் சவுந்திரத்தாச்சி.

"என்ன ஆச்சி வெளங்கிப் போச்சுது ஒங்களுக்கு ?"

"அட புத்திகெட்ட புள்ளே ! இது தெரியலியா ஒனக்கு ? ஒங்க அத்தான் நெல்லையப்பன் தான்..."

சவுந்திரத்தாச்சி பேச்சை முடிக்கு முன்னர், அவ்வீட்டிற்குள்ளேயிருந்து, "ஏட்டி காந்தி! இன்னமாட்டி வாசமொளுகி ஒரு கோலம் போடுதே?" என்று அதட்டலாக ஒரு குரல் வெளிப்பட்டது.

அதைக் கேட்டதும் ஆச்சி, "நான் வாரேண்டி, காந்தி; மதியத்திலே வீட்டுக்கு வா, பேசிக்கிடலாம்," என்று கூறிவிட்டு அவசரம் அவசரமாக ஆற்றை நோக்கி நடையைக் கட்டினுள்.

அழிந்த கோலத்தையும், ஆச்சியையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டு நின்ற காந்திமதியை, முன்பு கேட்ட அதே குரல் இப்பொழுது அருகில் கேட்டு அதிர வைத்தது. "அறிவு கெட்ட மூதி; இவகிட்டெயா விடியாமப் பேசிக்கிட்டு நின்னே? என்னட்டி பேச்சு வேண்டிக்கிடக்குது இவகிட்டே?" என்று இரைந்த காந்திமதியின் தாய் கோமதியாச்சி, மகள் அழுதிருப்பதை அவள் கண்களிலிருந்து வழிந்த கண்ணீரைக் கொண்டு உணர்ந்து, இன்னும் அதிகக் கோபம் அடைந்தவளாய், "சீ, துப்புக் கெட்டவளே! ஒன் மூஞ்சிக்கு அளுகை வேறயா வெச்சிருக்குது? போட்டி உள்ளே!" என்று விரட்டினுள்.

"இல்லேம்மா......." என்று ஏதோ சொல்ல முயன்ருள் காந்திமதி.

ஆனால் கோமதியாச்சி ஆத்திரம் வழிய, "ஆச்சிகிட்டே ஓதிட்டேயில்லே ஒன் அவலக் கதையே? இனிமே அவ ஒண்ணே நாலாக்கி, தெருத்தெருவாப் போய் மோளம் அடிச்சுடுவா. கூருகெட்ட மூதி! ஒன் தலையெளுத்தைப் போலே இருக்குதே, ஒன் புத்தி போற போக்கும்," என்று மகளின் கன்னத்தில் இடித்துவிட்டு, அவள் கையிலிருந்த கோலப்பொடிக் கொட்டாங்கச்சியைப் பிடுங்கிக் கொண்டு, அழித்திருந்த கோலத்தைத் தான் போட ஆரம்பித்தாள்.

ஏடெடுத்தேன் பாட்டெழுத : 1

இறைதானே...?

'துறைவன்'

எனதென்றெண்ணவும் அஞ்சுகிறேன்-என்
 இனிய வாழ்வும் பசுமைகளும்!
 (எனதென்றெண்ணவும்)

மெல்லிய தென்றற் பூங்காற்று—இள
 மேனி தழுவிடும் அமுதூற்று ;
செல்லங் கொஞ்சும் காலைவெயில்—அதன்
 சிரிப்பே என்றன் செய்யதுகில்!
 (எனதென்றெண்ணவும்)

கதிரொளி ஆடுதல் என்வேலை—நெஞ்சம்
 கனவுகள் பின்னுதல் என்வேலை ;
அதிர நகைத்திடல் என்வேலை—மேனி
 அழகு மினுக்குதல் என்வேலை!
 (எனதென்றெண்ணவும்)

கானம் பரவிடும் விண்ணன்றி—இரு
 கண்ணுற்பாரேன் மண்ணென்றும் ;
வானவாழ்வென் வாழ்நாள் காண—இது
 வழங்கியதார் என்றறியேனே!
 (எனதென்றெண்ணவும்)

ஒளிரும் பசுமை எனதன்று—நிதம்
 உழைத்துச் சேர்த்த பலனன்று!
குளிரில் இருளில் மோதுண்டு—பிறர்
 குவித்த செல்வம் யானுண்டேன்!
 (எனதென்றெண்ணவும்)

பசுமை தந்ததும் யாரேயோ ?—என்றன்
 பசுமை காப்போன் யாரேயோ ?
விசும்பிலிருக்கும் இறைதானே ?—அன்றி
 வேறிங்கொருவன் உள்ளானே ?
 (எனதென்றெண்ணவும்)

அத்தியாயம் – 2

'கு'னா விலாசம்

சுமார் அரை நூற்றாண்டுக்கு முன்பு தென்காசி ஊரில், "'கு'னா விலாசம்" என்றால் தெரியாதவர்கள் இருக்க மாட்டார்கள். "'கு'னா விலாசத்துக்குப் போனா, 'இ'னா விலாசமே இராது" என்பது அவ்வூரில் ஒரு பழமொழிபோல் வழங்கி வந்தது. திருநெல்வேலி பாஷையில் 'இ'னா விலாசம் என்றால், 'இல்லை' என்ற பொருள். அதே போல் 'கு'னா விலாசம் எனும் சொல் ஓர் உண்டியல் கடையைக் குறித்தது.

திருநெல்வேலிச் சீமையில் அன்றெல்லாம் எந்த வியாபார ஸ்தலமும் அதன் சொந்தக்காரர் பெயரின் முதலெழுத்தைக் கொண்டு குறிப்பிடப்படும். வே. ச. பி. மளிகைக் கடை, சி. கி. ஷாப்புக் கடை, கை. மீ. கு. நூல்க் கடை, மூ. சை. மீ. ஜவுளிக் கடை என்று இவ்வாறு அது அதன் முதலாளிகளின் விலாசங்களைத் தாங்கியிருக்கும். இருந்தாலும், சாதாரணமாக மக்கள் பேசிக் கொள்ளும்போது, இந்த மளிகைக் கடை, ஷாப்புக் கடை, அந்தக் கடை, இந்தக் கடை என்பதைத் தள்ளிவிட்டு, "வே.னா. ச.னா. பி.னா. விலாசம்," "சி.னா. கி.னா. விலாசம்" என்றுதான் குறிப்பிடுவார்கள். இப்படிப் பெயர் பெற்றதுதான் 'கு'னா விலாசமுமாகும்.

இன்றைய பாங்குகள் எந்த எந்த அலுவல்களைச் செய்து வருகின்றனவோ, அதே அலுவல்களைத்தான் அன்றைய உண்டியல் கடைகள் செய்து வந்தன. கோடிக் கணக்கில் பணத்தை முடக்கி, பல இடங்களில் கிளைகளைத் திறந்து, பல்வேறு பாங்குகளுடன் செலாவணித் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டு தொழில் நடத்தி வருகின்றன இன்றையப் பாங்குகள். கிட்டத்தட்ட அதே நிலையில்தான் தனிப்பட்ட நபர் ஒருவரால் நடத்தப்பட்டு வந்த உண்டியல் கடையும் இருந்ததென்றால், அதை நடத்தி வந்தவர் எவ்வளவு பணக்காரராக, எவ்வளவு பிரபலமானவராக, எப்பேர்ப்பட்ட நாணயஸ்தராக இருக்கவேண்டும் என்பதை நீங்களே ஊகித்துப் பாருங்கள்.

'கு'னா விலாசம் உண்டியல் கடை முதலாளி குத்தாலிங்கம் பிள்ளையும் அப்படிப்பட்டவர்தான். இந்த உண்டியல் கடை அவருடைய பாட்டனார் காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டது. குத்தாலிங்கம் பிள்ளையின் பாட்டனார் பெயரும் குத்தாலிங்கம் பிள்ளைதான். அவருடைய பெயரிலிருந்து உண்டாகி நிலைத்ததுதான் 'கு'னா விலாசம். இடையே குத்தாலிங்கம் பிள்ளையின் தகப்பனார் வேலாயுதம் பிள்ளை நடத்தி வந்தபோதும் உண்டியல் கடை 'கு'னா விலாசத்துடன்தான் இருந்தது. இப்பொழுதும் அதே விலாசத்தில்தான் இருக்கிறது.

குத்தாலிங்கம் பிள்ளையின் குடும்பம் பரம்பரைப் பணக்காரக் குடும்பம். அதோடு, ஒவ்வொரு தலைமுறையிலும், தந்தைக்கு ஒரு மகன் ஒரு மகளுக்கு அதிகம் தோன்றாத குடும்பம். குத்தாலிங்கம் பிள்ளையின் பாட்டனார் குத்தாலிங்கம் பிள்ளை, அவருடைய தந்தை உலகநாத பிள்ளைக்கு ஒரே ஆண் வாரிசு. அவருக்கு ஓர் அக்காள் மாத்திரமே இருந்தாள். அந்தக் குத்தாலிங்கம் பிள்ளைக்கு வேலாயுதம் பிள்ளை ஒரு மகனும், உலகம்மை ஒரு மகளும். வேலாயுதம் பிள்ளைக்கும் அப்படித்தான் – குத்தாலிங்கம் பிள்ளை ஒரே மகன்; கோமதி என்று ஒரே மகள். இந்த மகள்கள்தாம் மகன்களுக்கு அக்காளாகவோ, தங்கையாகவோ பிறந்தார்களேயன்றி, சென்ற நான்கு தலைமுறைகளாக ஒரு பிள்ளை, ஒரு பெண் என்ற முறையில் மாறுதலே ஏற்படவில்லை.

இப்படி ஒரே ஆண் வாரிசுடன் வளர்ந்து வந்ததால், அந்தக் குடும்பத்தின் புராதன சொத்து பாகப்

பிரிவினையால் சிதறுண்டு போகவில்லை. தவிர, இந்த நான்கு தலைமுறைகளிலும் ஒருவராவது சொத்தை அழித்துவிடும்படியான 'மைனர்' விளையாட்டுக்களிலோ, வியாபாரப் பேரங்களிலோ ஈடுபட்டு விடவில்லை. மாறாக, ஒவ்வொருவரும் தங்கள் தலைமுறையில் சொத்தை முன்னை விடப் பெருக்கத்தான் செய்தனர். அதிலும் பாட்டனார் குத்தாலிங்கம் 'கு'னா விலாசம் உண்டியல் கடையை ஆரம்பித்ததிலிருந்து, நஞ்சை–புஞ்சை வரும்படிகளினால் மாத்திரம் பெருகி வந்த குடும்பச் சொத்து, இந்தக் கடையின் மூலம் வந்த லாபத்தினாலும் பெருகலாயிற்று. இப்பொழுது குத்தாலிங்கம் பிள்ளைக்கு முப்போகம் விளையும் முக்கூடல் புரவில் முப்பது கோட்டை விதைப்பாடு நன்செய் இருந்தது; குடியிருப்பு வட்டாரத்தில் நாற்பது 'ஏக்ரா' புன்செய் 'வெள்ளங்காடு' இருந்தது; தவிர, உண்டியல் கடையில் போட்டிருந்தது போக, கையிலும் ஏராளமான ரொக்கம் இருந்தது.

அந்தக் குடும்பத்தில் ஒவ்வொரு தந்தையும் தமது மகன் தலையெடுத்துக் குடும்ப பாரத்தை ஏற்றுக்கொண்ட பிறகு, மகனுக்கும் மகளுக்கும் கல்யாணம் – கார்த்திகைகள் நடத்தி அவர்களுக்குக் குழந்தை குட்டிகள் பிறந்த பிறகு, அதாவது தங்களது அறுபது எழுபதாவது வயதில்தான் கண் மூடுவது வழக்கம். ஆனால் இந்த விதிக்குச் சற்று விலக்காகி விட்டார் குத்தாலிங்கம் பிள்ளையின் தகப்பனார் வேலாயுதம் பிள்ளை. அவருக்குக் குத்தாலிங்கம் பிள்ளை முதல் குழந்தை. மகனுக்குப் பதினைந்தாவது வயது நடந்து கொண்டிருந்த போதுதான் மகள் கோமதி பிறந்தாள். கோமதிக்கு ஏழு வயதானபோது வேலாயுதம் பிள்ளை இறந்து விட்டார். அப்பொழுது குத்தாலிங்கம் பிள்ளைக்குக் கல்யாணம் ஆகி, ஒரு மகனும் பிறந்து விட்டான். எனினும் மகள் வழிப் பேரன் – பேத்திகளைக் காணக் கொடுத்து வைக்காமல் வேலாயுதம் பிள்ளை போய் விட்டார். அவர் மனைவி மூக்கம்மாள்கூட அந்தப் பாக்கியத்தைப் பெறவில்லை. கோமதி மணப் பிராயத்தை அடையு முன்பே அவளும் சிவலோகப் பிராப்தி அடைந்து விட்டாள்.

குத்தாலிங்கம் பிள்ளைக்கும், அவர் மனைவி அழகம்மைக்கும் கோமதியின்மீது உயிர். ஆகையால், சிறு வயதில் பெற்றோரை இழந்துவிட்ட காரணத்தால் கோமதி எதுவும் குறைவு பெற்று விடவில்லை.

கோமதி 'பெரிய மனுசி' ஆனதும், குத்தாலிங்கம் பிள்ளை அவளுடைய 'சடங்கை' நடத்திய விமரிசையை இன்றுங்கூடத் தென்காசி புகழ்ந்து கொண்டிருக்கிறது. "பொட்டி மகன், தஞ்சாவூர்க்காரன் பாண்டு இல்லா கொண்டு வந்தான் தங்கச்சி சடங்குக்கு!" என்றும், "ஏளு ஊரு கூட்டியில்லா சோறு போட்டான்!" என்றும் இப்படிப் பலபல பேசிக்கொள்ளும் பாட்டிமார்கள் இன்றளவும் தென்காசியில் உள்ளனர்.

தங்கச்சி 'பெரிய மனுசி' ஆனதும் தாமதியாமல் அவளுக்கு மாப்பிள்ளையும் வந்து குதிர்ந்து விட்டது. திருநெல்வேலியைச் சேர்ந்த கொக்கர்குளத்தில் சுப்பையாப் பிள்ளை என்று ஒருவர் இருந்தார். குத்தாலிங்கம் பிள்ளையின் அளவுக்குப் பணக்காரர் இல்லையெனினும், சுப்பையாப் பிள்ளையும் அப்படி ஒன்றும் 'சச்சாப் பிச்சா'ப் பேர்வழி இல்லை. நிலபுலன்கள் என்று சொல்லும்படியாக அதிகமாக எதுவும் அவருக்கு இல்லை என்பது ஒன்றுதான் குறையே தவிர, கையில் 'எக்கச்சக்க'மாக ரொக்கம் சிக்கியிருந்தது. கொள்ளை கொள்ளையாக லாபம் தரும் 'ஏத்துமதி' வியாபாரம் ஒன்று நடந்து கொண்டிருந்தது. இந்தச் சுப்பையாப் பிள்ளையின் மகன் சொக்கலிங்கம் பிள்ளை என்ற சொக்கையாவுக்குக் கோமதியைப் பெண் கேட்க அவர்கள் வீட்டுப் பெரியவர் ஒருவர் வந்த

அப்பா: கண்ணிலே தூசி விழுந்திருச்சு; கண்ணுக்குள்ளே ஏதாவது இருக்கா, பாருடா கண்ணே!

பிள்ளை: இருக்கப்பா, பெரிசா ஒரு கருமணி இருக்கே?.... டாக்டரைக் கூட்டியாரட்டுமா?....

போது, குத்தாலிங்கம் பிள்ளை 'அட்டி' சொல்லாமல் சம்மதித்து விட்டார். கோமதிக்கும் சொக்கையாவுக்கும் கொக்கர்குளத்தில் கோலாகலமாகக் கல்யாணம் நடந்தேறிற்று.

கோமதிக்குக் கல்யாணம் ஆனபோது அழகம்மை, மூத்த மகன் நெல்லையப்பனுக்கு அடுத்ததாகக் கருத்தரித்திருந்தாள். அந்தக் குடும்ப வாகுப்படி இக்குழந்தை பெண் குழந்தையாகத்தான் பிறக்கும் என்று எல்லோரும் நிச்சயித்திருந்தனர். ஆனால், குத்தாலிங்கம் பிள்ளை தலைமுறையில் அவர் குடும்ப நடைமுறை மீண்டும் ஒருதடவை மாறுதல் அடைந்தது. அழகம்மை இரண்டாவதாகவும் ஆண் குழந்தையையே பெற்றெடுத்தாள்.

ஆணோ, பெண்ணோ, எதுவானாலும் பெற்ற தாய்க்குத் தன் குழந்தை குழந்தைதான். இருந்தாலும் அழகம்மைக்குத் தன் இரண்டாவது குழந்தை பெண்ணாய்ப் பிறக்காமல் ஆணாய்ப் பிறந்தது குடும்பத் தொடரில் ஏதோ சீர் கெட்டுப் போய்விட்டது போன்றதொரு தோற்றத்தை ஏற்படுத்தி விட்டது. அதை அவள் அடிக்கடி கணவரிடம் சொல்லுவாள். ஆனால், குத்தாலிங்கம் பிள்ளைக்கு இம்மாதிரி பைத்தியக்கார நினைவு ஒன்றும் கிடையாது. நான்கு தலைமுறைகளாக ஒரே மாதிரி சந்தான பாக்கியம் ஏற்பட்டதால், அதுவேதான் ஒவ்வொரு பரம்பரைக்கும் ஏற்பட வேண்டும் என்பதை ஒரு விதியாகக் கருதும் அளவுக்கு அவருக்குப் பைத்தியம் பிடித்திருக்கவில்லை. அவர் சொல்லுவார்: "நீ என்னளா கிறுக்குப் புடிச்சுப் போயி ஒளறுதே! கொளந்தை பொறக்கதுலே கூடவா அப்பனுக்கும் மகனுக்கும் 'லயன்' புடிச்சு வச்சிருக்கும்? போளா, போ!"

"இல்லே, இருந்தாலும் நமக்கின்னு பாவாடை கட்டிக்கிட ஒண்ணு வேணுமா?" என்று தன் உள்ளத்து ஏக்கத்தை வெளியிடுவாள் அழகம்மை.

"அதுக்கென்ன? வேணுன்னு இன்னொண்ணைத்தான் பெத்துக்கிடேன். நீயும் நானும் என்ன, அதுக்குள்ளவா கௌடாயிட்டோம்?" என்று சிரிப்பார் பிள்ளைவாள்.

"அதுக்குத்தான் ஒங்க வளியிலே ரெண்டுக்கு மேலே மூணுமத்தது இல்லைன்னு விதிச்சு வச்சிருக்குதே!" என்று அழகம்மை வருந்துவாள்.

"பாத்தியா இது பேசுத பேச்சை? ஏளா! நான் தான் சொல்லுதேனே, வளி-வாய்க்கா எல்லாம் இந்த விசயத்திலே வளமையில்லேயின்னு. அது என்னமோ நாலு தலைமுறையா வாச்சுக்கிட்டுது, அவ்வளவுதான்," என்று கூறிவிட்டு இந்த அசட்டுப் பேச்சுக்களைக் கேட்கப் பிடிக்காமல் வெளியே போய்விடுவார் குத்தாலிங்கம் பிள்ளை.

அது என்னவோ, அழகம்மையின் மனம் நாளுக்கு நாள் ஒரு பெண் குழந்தைக்காக ஏங்கலாயிற்று. அவளுடைய ஏக்கத்துக்குச் சோதனைபோல் இன்னொரு காரியமும் நடந்துவிட்டது. இரண்டாவது மகனை திருமலையைப் பெற்றதிலிருந்து அழகம்மையை 'இழுப்பு' நோய் பிடித்து வாட்டத் தொடங்கியது. வீட்டு வேலைகளைக் கூடச் செய்யவிடாமல் அந்நோய் அவளை அல்லல் படுத்திற்று. மாதம் பதினைந்து நாள் படுக்கையில்—மீதிப் பதினைந்து நாள் இழுப்பால் உருக்குலைந்த உடல் வலுப்பெற வேண்டி ஓய்வு—என்று இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் பிள்ளையவர்களுக்கும் அழகம்மைக்கும் தாம்பத்திய உறவு மட்டுப்பட்டு, ''இனிமேல் நமது பெண் குழந்தை ஆசை நிறைவேறினாற் போலத்தான்!'' என்ற நிராசையில் அழகம்மையைக் கொண்டு வந்து விட்டது.

இது இப்படியிருக்க, குத்தாலிங்கம் பிள்ளையின் குடும்பத்தை இன்னொரு சோதனையும் பயமுறுத்திற்று. மணமாகி எட்டு வருடங்கள் சென்றும் கோமதி வயிறு திறக்கவில்லை! கொக்கர்குளம் சுப்பையாபிள்ளை முணுமுணுக்க ஆரம்பித்தார். அவருக்கு வயதாகிக் கொண்டு வந்தது. இருந்ததெல்லாம் ஒரே ஒரு மகன். அவனும் இப்படி ஒரு மலடியைக் கட்டிக்கொண்டு மாரடிக்க நேர்ந்தால் அவருடைய குலம் தழைப்பது எப்படி? சுப்பையாப்பிள்ளை, கோமதியைத் தள்ளி வைத்துவிட்டு வேறு கல்யாணம் செய்துகொள்ளும்படி மகன் சொக்கையாவுக்குப் போதிக்கத் தொடங்கினார்!

இந்த விஷயம் குத்தாலிங்கம் பிள்ளைக்குத் தெரிய வந்ததும், அவர் அதிர்ந்துபோய் விட்டார். அப்பொழுது பாளையங்கோட்டையில் பிரபலமாயிருந்த மிஷன் ஆஸ்பத்திரி வெள்ளைக்கார டாக்டரிடம் கோமதியைக் கூட்டிச் சென்று காட்டினார் அவர். டாக்டர் கோமதியைப் பரிசோதித்துவிட்டு அவளுடைய கருப் பையிலோ, உடலிலோ எவ்விதக் குற்றமும் இல்லையென்று கூறிவிட்டார். குழந்தை பிறக்காததற்குக் காரணம், ஒருகால் அவள் கணவன் உடலில் உள்ள கோளாறு ஏதேனுமாக இருக்கலாம் என்று அவர் சந்தேகம் தெரிவித்தார்.

குத்தாலிங்கம் பிள்ளை, சுப்பையாப் பிள்ளையைக் கெஞ்சி, மச்சினப்பிள்ளையையும் அதே டாக்டரைக் கொண்டே பரிசோதிக்கச் செய்தார். ஆனால், டாக்டர் அவர் உடல்நிலையும் சரியாகவே இருப்பதாக அறிவித்து விட்டதும், பிள்ளைவாளுக்கு என்ன செய்வதென்றே விளங்கவில்லை.

சுப்பையாப் பிள்ளைக்குக் கொஞ்ச நஞ்சம் இருந்த நம்பிக்கையும் போய் விட்டது. உண்மையில் கோமதியின் உடலில்தான் ஏதோ கோளாறு இருக்க வேண்டும் என்றும், குத்தாலிங்கம்

''இன்னிக்குத்தானா ஒனக்கு விடுதலை? ம்.... என்னவோ, ஒன்னோடு பத்து வருஷம் பழகிட்டு, இப்படித் திடீர்னு பிரியறது இன்னா, மனசுக்கு கஷ்டமா இருக்குது!''

''நீ ஒண்ணும் கவலைப்படாதே அண்ணாச்சி! அநேகமா நாளைக்கே ஒன்னை இங்கே சந்திக்கிறேன், பார்!''

பிள்ளை டாக்டருக்குக் 'கைக்கூலி' கொடுத்து அதை மறைத்து விட்டார் என்றும், அவர் கருதி விட்டார். ஆகவே, அவர் இப்பொழுது ரகசியமாக மகனுக்குப் பெண் தேடும் படலத்தில் இறங்கினர்.

குத்தாலிங்கம் பிள்ளைக்குத் தென்காசியில் நெருங்கிய நண்பர் ஒருவர் இருந்தார். விறகுக் கடை காசி ஐயர் என்பவர் அவர். அவரிடம் ஒரு தடவை பேசிக் கொண்டிருந்தபோது, பிள்ளை இந்த விஷயத்தைச் சொல்லி, என்ன செய்வதென்று ஆலோசனை கேட்டார்.

"என்னவே, குத்தாலிங்கம் பிள்ளை! நீர் ஒலகம் தெரியாத மனுஷராயிருக்கேரே? வே! புருஷனும் பொண்டாட்டியும் சரியா இருந்து கொழந்தை பொறக்கலேன்னு, ஒங்க மாப்பிள்ளை குடும்பத்திலேதான் ஏதாவது தோஷம் இருக்கும். அவா ரெண்டுபேர் ஜாதகத்தையும் கொண்டு போய் நம்ப மேலகரத்து ஜோஸியரிட்டே காட்டும். அவர் பார்த்து, என்ன தோஷம் இருக்கு, என்ன பரிகாரம் செயயணும் இங்கறதைச் சொல்லுவார். அந்த மன்னன் சொன்னச் சொன்னதுதான். அவன் சொல்லற பரிகாரத்தைச் செய்துட்டேர், அப்பறம் ஒம்ம தங்கச்சி வீடு கொள்ளாமப் பெத்துத் தள்ளிடுவா!" என்று வழி காட்டிக் கொடுத்தார் காசி ஐயர்.

ஆம், குத்தாலிங்கம் பிள்ளைக்கும் மேலகரம் ஜோஸியரைப் பற்றித் தெரியும். அவர் அத்தொழிலில் புலி என்றும், எதையும் ஒளிக்காமல் சொல்லக் கூடியவர் என்பதையும் பிள்ளை அறிவார். ஆகவே, புது நம்பிக்கையுடன் மறுநாளே மேலகரம் சங்கர ஜோஸ்யரிடம் அவர் சென்ருர்.

அங்கே என்ன நடந்ததோ? ஜோஸ்யர் என்ன சொன்ருரோ? —தெரியாது; பிள்ளை, போன போது இருந்த உற்சாகம் குன்றி முகவாட்டத்துடன் வீடு திரும்பினர்!

"சோசியரு என்ன சொன்ருரு?" என்று ஆவலோடு கேட்ட அழகம்மையிடம், "எல்லாம் தானே பொறக்குமின்னு சொல்லிட்டாரு!" என்று எரிந்து விழுந்தார் பிள்ளை.

"என்ன, வெறுத்தாப்போலே பேசுதிக? சோசியரு மெய்யாத்தான் அப்படிச் சொன்ருரா, இல்லாட்டி....?" என்று கேட்டாள் அழகம்மை.

"ஆமாங்கேனே!"

"பின்னே ஒங்க மொகத்திலே சொரத்தைக் காணுமே?"

"சொரத்துக்குச் சொல்லி விட்டிருக்கேன்ளா, சொக்கப்பட்டிச் சந்தைக்கு. மூதி! கேட்டே, கேட்டதுக்குப் பதிலுச் சொல்லிட்டேன். இன்னம் என்னமோ, சொரத்தைக் காணுமாம்.... சொகுசைக் காணுமாம்! போளா, ஒன் சோலியைப் பாத்துக்கிட்டு!" என்று மறுபடியும் எரிந்து விழுந்துவிட்டுக் கடைக்குப் போய் விட்டார் குத்தாலிங்கம் பிள்ளை.

இந்தச் சம்பவம் நடந்த மறு மாதத்தில், கொக்கர்குளம் சுப்பையாப் பிள்ளை திடீரென்று ஒருநாள் சீதபேதி கண்டு நாலே மணி நேரத்தில் பரமபதம் அடைந்து விட்டார். தன் தங்கச்சியின் வாழ்வை எங்கே பாழ்படுத்தி விடுவாரோ என்று கதி கலங்கிக் கொண்டிருந்த குத்தாலிங்கம் பிள்ளைக்கு, சுப்பையாப் பிள்ளையின் மரணம் எல்லையற்ற சந்தோஷத்தை அல்லவா அளித்திருக்க வேண்டும்? ஆனல், இந்தச் செய்தியைக் கேட்டதும், அவருக்குத் தூக்கி வாரிப் போட்டது!

சம்பந்தகாரரின் இழவை கூடயிருந்து விமரிசையாக நடத்தி வைத்துவிட்டுத் தென்காசிக்குத் திரும்பி வந்தார் பிள்ளை. வரும் போது, தங்கச்சி கோமதியை இரண்டொரு மாதங்கள் தம்மோடு வைத்துக்கொள்ள, மச்

சினரிடம் சம்மதம் பெற்று அழைத்து வந்தார்.

பிள்ளையின் போக்கே இப்பொழுது முற்றிலும் விசித்திரமாக இருந்தது. முன்பெல்லாம் தங்கச்சி தன் வீட்டுக்கு வந்தால் அவருக்குத் தலைகால் தெரியாத களிப்பு ஏற்படும். ஆனால், இத்தடவை அவர் என்னவோ அவளோடு கலகலப்பாகவே பழகவில்லை. ஏதோ ஒன்று அவர் உள்ளத்தைப் பிடித்து உலுக்கிக் கொண்டிருக்கிறது என்பதை அழகம்மை புரிந்து கொண்டாள். ஆனால், எத்தனை கேட்டும், அந்த வாட்டத்தின் காரணம் அவர் வாயிலிருந்து வரவில்லை.

இரண்டு மாசத் தவணை கழிந்ததும் மனைவியை அழைத்துப்போக வந்தார் சொக்கையாப் பிள்ளை.

''கோமுவைக் கூட்டிக்கிட்டுப் போக வந்திருக்காரு மச்சினப் புள்ளே. நாளையே போகணுமாம். பண்டம் பணியாரம் ஏதேம் சுட்டுக் கொடுத்து அனுப்புளா,'' என்று அழகம்மையிடம் கூறினார் பிள்ளை.

''தங்கச்சியை இப்பொம் கூட்டிக்கிட்டுப் போக முடியாது!''

''ஏன்ளா?''

''அது முளுகி மூணு மாசம் ஆகுது. மூணும் மாசத்திலே தலைப்புள்ளைக்காரியைப் புருசன் வீட்டுக்கு அனுப்புவாகளா?''

இந்தக் குத்தாலிங்கம் பிள்ளைக்கு என்னதான் வந்துவிட்டது? துள்ளிக் குதிக்க வேண்டிய இந்தச் சந்தோஷச் செய்தியைக் கேட்டு அவர் ஏன் இப்படித் திடுக்கிடுகிறார்?

மாதங்கள் உருண்டன. அப்பொழுது கோமதிக்குப் பேறுகாலம். தலைப்பிரசவம் ஆதலால், பிறந்த வீட்டில்தான் இருந்தாள் அவள். பெற்ற தாய்க்கும் மேலாக அவளைப் பேணி வந்தாள் அழகம்மை. பிறக்கப் போவது தன் வீட்டில் விளக்கேற்றி வைக்கும் மருமகளாக இருக்க வேண்டும் என்பது அவளுடைய பேராவல். தனக்குப் பெண் குழந்தை பிறக்காத வயிற்றெரிச்சலை, நாத்தியின் பெண்ணை வளர்த்துத் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் அவள் திட்டம் வகுத்திருந்தாள்.

அன்று பிற்பகலில் குத்தாலிங்கம் பிள்ளை உண்டியல் கடையில் இருந்தபோது வீட்டுப் பண்ணைக்காரன் (வேலையாள்) மாடசாமி வந்து, ''சின்னத்துக்கு நோவு எடுத்திருக்குது. அம்மா ஒங்களைக் கூட்டியாரச் சொல்லிச்சு,'' என்று அழைத்தான்.

பிள்ளை துண்டை உதறித் தோளில் போட்டுக்கொண்டு வீட்டுக்கு நடந்தார். சூதாட்டத்தில் கையிலிருந்ததையெல்லாம் தோற்றுவிட்டுக் கடைசிப் பந்தயத்துக்குக் கடன் வாங்கிப் பணம் கட்டியிருப்பவன், ஆட்ட முடிவை அறிய எவ்வளவு ஆவலோடு பறப்பானோ, அத்தகையதொரு ஆர்வமும் வேகமுந்தான் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த பிள்ளையின் நடையில் பிரதிபலித்தன.

அவர் வீட்டில் நுழைவதற்கும், உள்ளேயிருந்து 'குவா' குரல் வெளிப்படுவதற்கும் சரியாக இருந்தது.

நடையில் நின்று, ''ஏளா!'' என்று குரல் கொடுத்தார் குத்தாலிங்கம் பிள்ளை.

பிரசவ உள்ளிருந்து அழகம்மை ஓடி வந்தாள். ''நம்ம நெல்லையப்பனுக்குப் பொஞ்சாதி பொறந்திருக்குது!'' என்றாள் அவள், வாயெல்லாம் பல்லாக.

பிள்ளை இதைக் கேட்டதும் கல்லாய்ச் சமைந்துவிட்டார்!

(தொடரும்)

இந்தப் புனைபெயர்

வல்லிக்கண்ணன்

தமிழ் எழுத்தாளர் முதலாவது மகாநாடு கோவையில் கூடியிருந்தது. 1944-ம் வருஷம் என்று நினைக்கிறேன். வெற்றிகரமாக நிகழ்ந்த அம் மகாநாடு எழுத்தாளர்கள் அனைவரையும் பரஸ்பரம் அறிமுகம் செய்து வைக்க முயன்றது. அந்தச் சந்தர்ப்பத்தில் நானும் 'சுய விளம்பரம்' செய்ய முன் வந்தேன்.

"நான்தான் வல்லிக்கண்ணன். நான்தான் நையாண்டி பாரதி. நான்தான் கோரநாதன். நான் தான் பிள்ளையார். நான் தான் சொக்கலிங்கம். நான்தான் மிவாஸ்கி. நான்தான் கெண்டையன் பிள்ளை. நான்தான் சோம்பேறி. நான்தான் சொணா முணா. நான் தான் கனவானந்தா. நான் தான் இளவல்" என்று அடுக்கிக் கொண்டு போனேன். எல்லோரும் பிரமித்து விட்டார்கள் என்று நான் சொன்னால் அது 'அளப்பு' ஆகாது!

'என் பெயர் ரா. சு. கிருஷ்ணஸ்வாமி' என்று நான் அப்பொழுது சொன்னேனோ, இல்லையோ!— இன்று எனக்கு நினைவு இல்லை.

இப்பொழுது 'ஏன் இந்தப் புனைபெயர்?' என்று விளக்கம் தருமாறு கேட்கிறார் நண்பர் பூவை ஆறுமுகம். எந்தப் பெயருக்கு நான் விளக்கம் தரவேண்டுமென எனக்கு விளங்கவில்லை!

'பெயரில் என்ன இருக்கிறது?' என்று புலம்பி விட்டான் கவிஞன். ஆனால் பெயரில் எவ்வளவோ மகத்துவம் இருக்கிறது; மர்மமும் இருக்கிறது. இது ஒவ்வொரு எழுத்தாளருக்கும் தெரிந்திருக்கும். அழகான 'பெண் பெயர்' சூடி எழுத ஆசைப்படுகிற ஒரு சிலருக்கு நிச்சயமாகத் தெரிந்திருக்கும்!

'புனைபெயர் வேண்டியதுதான்; ஒருவனுக்கு ஏன் ஒரு டஜன் பெயர்கள்?' என்று சிலர் என்னிடம் கேட்பது உண்டு.

யாருமே தனி ஒரு பெயருடன் வாழ்வதில்லை என்பது என் கருத்து. 'பெயர் சூட்டு விழா'வின் போது இடப்படுகிற பெயர் தானா எல்லோராலும் அழைக்கப்படுகிறது? 'மாமனார் பெயரைச் சொல்லாத' அம்மா ஒரு பெயரால் அழைக்கிறாள்; வேறொருவர் வேறொரு செல்லப் பெயரால் கூப்பிடுகிறார். பிறர் சூட்டும் பட்டப் பெயர்கள் வேறு! உலக நியதியே இப்படி இருக்கிறது. எனக்கு நானே ஏன் பல பெயர்கள் சூட்டிக்கொள்ளக் கூடாது என்று எண்ணினேன். பல நாமங்கள் பெறும் உரிமை கடவுளுக்கு மட்டும்தான் 'ரிஸர்வ்டு' என்ற கண்டிப்பு எதுவும் இல்லை அல்லவா? கடவுளோடு போட்டி போடுவதாக நம்புகிற இலக்கிய கர்த்தாவும் பல பெயர்கள் சூட்டிக் கொள்வதில் தவறு எதுவுமே கிடையாது என்பது என் கட்சி.

சாதாரண ரா. சு. கிருஷ்ணஸ்வாமி ஆக எழுத ஆரம்பித்திருந்த நான் வல்லிக்கண்ணன் என மறுமலர்ச்சி பெற்றது ரசமான விவகாரம் தான்.

1939-ல் தமிழ் நாட்டில் பரபரப்பு ஊட்டும் பத்திரிகைகள் சில வாழ்ந்தன. அநேக ஏடுகளில் 'தூங்காதே, தமிழா! துள்ளி எழுந்திரு! நிமிர்ந்து பார்! கொட்

எழுத்தாளர்களுக்கும் வாசகர்களுக்கும் நிறைவு தந்த இப்பகுதியில் இதுவரை கலந்துகொண்ட இலக்கிய நண்பர்களின் பட்டியல் இது: **மகரம், ஜெகசிற்பியன், வாசவன், மாறன், ஜடாதரன், சுகி, கஜமுகன், நவீனன்.**

டாவி விடு!' என்ற தன்மையில் விறுவிறுப்பான எழுத்துக்களே நிறைந்திருக்கும். அத்தகைய உற்சாக உணர்ச்சித் தீ மயக் கட்டுரைகளை நானும் ஒரு பத்திரிகையின் ஒவ்வொரு இதழிலும் எழுதி வந்தேன். வேறொரு ஆரம்ப எழுத்தாளருக்கு அது பிடிக்கவில்லை. 'இப்படி ஒரு நபரே இதழ்தோறும் எழுதி வருவது நல்லதல்ல; ஒவ்வொரு இதழிலும் எழுத ஆசைப்படுவதனால்தான் உங்கள் எழுத்து உயிரற்றுப் போகிறது' என்று அவர் சொன்னார்.

அடுத்த இதழில் ரா. சு. கிருஷ்ணஸ்வாமியின் கட்டுரை இல்லாமலிருந்தது கண்டு அவர் மிகவும் மகிழ்ந்தார். அதைவிட அதிகமான உற்சாகம் கொண்டார், வல்லிக்கண்ணன் எனும் 'புதிய பேர்வழி எவனோ' எழுதியிருந்த ஒரு கட்டுரையைப் படித்துவிட்டு.

"பாருங்கள் ஸார்! எவ்வளவு உணர்ச்சிகரமான எழுத்து! நெருப்பு மாதிரி நடை! ஆகா!" என்று வியந்து பாராட்டி, அந்தக் கட்டுரையை அவரே என்னிடம் வாசித்துக் காட்டினார். அதை எழுதிய 'சொள்ளமுத்து' நான்தான் என்று நான் அவரிடம் சொல்லவில்லை, 'ஈன்ற பொழுதினும் பெரிதுவக்கும், தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்' என்றுதானே வள்ளுவர் சொல்லியிருக்கிறார்? அவர் காலத்தில் எழுத்தாளர்களும் கிடையாது; பத்திரிகைகளும் கிடையாது அன்றோ! இருந்திருப்பின், 'எழுதிய பொழுதினும் பெரிதுவக்கும், தன் எழுத்தை நன்று நன்றெனப் பிறர் போற்றக் கேட்ட எழுத்தாளன் நெஞ்சு' என்கிற கருத்தை இலக்கண சுத்தமான குறளில் புகுத்தியிருப்பார் அவர்!

'உங்கள் புனைபெயரின் தத்துவம் என்ன?' என்று பலர் கேட்பது வழக்கம். 'தத்துவமுமில்லை, கத்திரிப் பிஞ்சுமில்லை. ராஜவல்லிபுரம் கிருஷ்ணஸ்வாமி என்பதன் பரிணமிப்பு தான் வல்லிக்கண்ணன் ஆகும்' என்பதே எனது பதில். ★

நறுமணத்திற்கும்
குளிர்ச்சிக்கும்

"ஸ்ரீவிஸ்"
ஆம்லா
ஹேர் ஆயில்
SRIVIS PERFUMERY WORKS
MADRAS-1

5. பிரம்பே, நீ வாழி!

பி. எஸ். ஏ.

கடவுளை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா, ஐயா?....என்ன அப்படி விழிக்கிறீர்கள்?........முதலில் புறக்கண்ணை மூடித் தொலையுங்கள்; இப்போது மனக்கண்ணைத் திறந்து பாருங்கள்! ஓ, ஔவைப் பாட்டி தரிசனம் தருகிருளா? உங்களுடைய அணுசக்தி மூளையில் ஓங்கித் தட்டி அவள் அந்தப் பாட்டைச் சொல்லித் தருகிருளா? ஆஹா! வேடிக்கையான மனிதர் ஐயா நீங்கள்!

'அரி, சித்தரி, நாஞ, மோஞ' பாடம் கற்றுக்கொண்ட 'பழங்கதை'யிலிருந்து, சூயெஸ் கால்வாயை விட்டு அப்பொழுதுதான் கப்பலில் இறங்கியவர் மாதிரி ஆங்கிலம் பேசும் 'புதுக் கதை' வரை, நடந்த சரித்திரத்தின் ஏடுகளை எப்படி அதற்குள் நீங்களெல்லாம் மறந்திருப்பீர்கள்?

உங்கள் மறதி என்றும் சிரஞ்சீவியாக வாழட்டும்! – ஆனல், இந்தத் தெய்வத்தின் மறதிகூட சிரஞ்சிவி வரம் பெருமலேயே சிரஞ்சீவியாக வாழ்ந்து வருகின்றது. அன்று தொட்டு இன்று வரை இந்தத் தெய்வ பரம்பரைக்கென அமல் நடத்துவதாகப் 'பயங்காட்டப்படும்' 'உத்தரவு'கள் ரொம்ப ரொம்பக் குறைவு.

அதோ, 'படம் கண்ட தெய்வம்' பேசுகிறது. கேளுங்கள்: "ராமநாதபுரம் மந்திரி என்கிட்டே ஆஞ ஆவன்ஞ படிச்சார்; தஞ்சாவூர் கலெக்டருக்கு நான்தான் அட்சராப்யாசம் சொல்லித் தந்தேன்!"

எல்லாம் சரிதான்! – இவர்கள் முன்னுக்கு வந்து விட்டார்கள்; ஆம்; இந்தக் கண்கண்ட ஆண்டவனின் கைப்பிரம்பின் மகிமை அது! ஆனல், இந்தத் தெய்வத்திற்கு மாத்திரம் ஒட்டுப்போட்ட பழைய கோட்டும் டர்பனும் அழியா வரம் பெற்றவையோ? ஒருவேளை, இதற்குக் காரணம், சிஷ்ய கோடிகளிலே ஏகலைவன் ஒருவன்கூட வழிதப்பிப் பிறக்கவில்லையே என்பதா?.... இல்லையென்ருல், 'எழுத்தறிவித்தவன் இறைவன்' என்ற ஒரு வரிப்

பாடலுக்குச் சரியான 'பொருள்' சொல்ல உரையாசிரியர் யாருமே இப்பூவுலகில் இன்னமும் ஜனனம் எடுக்கவில்லையே என்பதா....?

பிரம்பே! உனக்கு என் அந்தரங்க சுத்தமான அன்பு வணக்கங்கள். இதுவே இந்த ஏழையின் குரு காணிக்கை!

சட்டமே! பிரம்பு அலறுகிறது; அதன் அலறலுக்கு 'ட்யூன்' போட வேண்டியது தற்சமயம் அவ்வளவு முக்கியப் பிரச்னை அல்ல; முதலில் அந்த 'முகாரி'க்கு முற்றுப்புள்ளி இட ஆவன செய்....! ★

இந்தக் கட்டுரையாளரின் 'அதிகப்பிரசங்கித்தனமான' பேனவின் முனையில் அகப்பட்டுக் கொண்ட 'அப்பாவித் தெய்வங்கள்' யார், யார் தெரியுமா? – ரிக்ஷாக்காரர், போலீஸ்காரர், அச்சுக் கோர்ப்பவர், பஸ் கண்டக்டர்.

எழுதியவர்: சு. ரா.

பாட்டி ஒன்று நினைக்க!

சாப்பிட்டவுடன், ஆபீசுக்குப் போவதற்காகத் தன்னைத் தயார் செய்து கொண்டிருந்தான் ரங்க ராஜன். அவன் சாப்பிட்ட தட்டை அலம்பி, இடத்தையும் சுத்தம் செய்து விட்டு, அவனுக்குக் கொடுப்பதற்காக வெற்றிலையுடன் வந்தாள் அவன் மனைவி ராஜி.

அவள் மடித்துத் தந்த வெற்றிலையை வாங்கி வாயில் திணித்துக் கொண்டே, "என்ன ராஜி, இன்று கட்டாயம் கதையை 'காப்பி' எடுத்து அனுப்ப வேண்டும், தெரியுமா? இன்று தபாலுக்குப் போகாவிட்டால், என் சிநேகிதன் நேரிலேயே வந்துவிடுவான்," என்றான் அவன்.

"நான் என்ன செய்வது? அந்தப் பாட்டி வந்து உட்கார்ந்து விடுகிறாள். நீங்கள் ஆபீசிலிருந்து திரும்பும் வரை இருந்து விட்டுத் தான் போகிறாள்!... நான் என்ன சொன்னாலும், 'நீ சிறிசு. புதிதாகக் கல்யாணமாகி வந்து, தனியாகக் கொட்டுக் கொட்டென்று எப்படியிருப்பாய்?' என்று கூறித் தங்கி விடுகிறாள். அவளைப் போகச் சொல்லவும் கஷ்டமாக இருக்கிறது. என் மேல் குற்றமில்லை," என்றாள் ராஜி.

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. இன்று எப்படியாவது இந்த வேலையை நீ முடித்தாக வேண்டும். பாட்டிக்கு என்ன சொல்லி அனுப்புவாயோ? — அது உன் பொறுப்பு. உன்னிடம் கதையைக் கொடுத்து ஆறு நாளாகி விட்டது. இனி தாமதம் கூடாது," என்றான் அவன்.

"ஹூம். எப்படியாவது செய்ய முயற்சிக்கிறேன். கதை எழுதின நீங்களே 'காப்பி'யும் செய்து விட்டிருக்கலாம்!" என்றாள் அவள்.

"நானே செய்வதானால் படித்த பெண்ணாகப் பார்த்து உன்னை எதற்குக் கல்யாணம் செய்து கொண்டேனாம்?" என்று செல்லமாக அவள் கன்னத்தில் தட்டி விட்டு, "சரி ராஜி! நாழியாகி விட்டது. நான் போய் வருகிறேன். கதவைப் போட்டுக் கொள்," என்று சொல்லியபடி புறப்பட்டான் அவன்.

அவன் பின்னாலேயே சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டு உள்ளே வந்தாள் ராஜி.

*

ரங்கராஜன் 'செக்ரடேரியட்'டில் வேலை பார்த்து வந்தான். நேரம் கிடைக்கும் போது கதை எழுதுவது அவனுடைய முக்கிய பொழுது போக்கு. கதை, கட்டுரைகளில் கிடைக்கும் பணத்தைக் கொண்டு, கொஞ்சம் தாராளமாய்ச் செலவழிக்கலாம் அல்லவா?

அவனுடைய பள்ளிக்கூட நண்பர் ஒருவர் பத்திரிகை உதவி ஆசிரியராக வேலை பார்த்து வந்தார். அவர் உதவியால் ரங்கராஜனின் கதைகள் அடிக்கடி பிரசுரமாகி வந்தன. மேற்படி நண்

பரிடமிருந்து, அவர்களுடைய பத்திரிகையின் ஆண்டு மலருக்குக் கதையனுப்பச் சொல்லி ஒரு கடிதம் வந்திருந்தது.

அந்தச் சமயம் அலுவலகத்தில் வேலை அதிகமாயிருந்தது. வீட்டுக்கும் 'பைல்'களைக்கொண்டு வந்து 'பைசல்' செய்ய வேண்டியிருந்தது.

எனினும், எப்படியோ ஒழிந்த ஐந்து, பத்து நிமிஷங்களில் கிறுக்கித் தள்ளி ஒரு கதையையும் எழுதிவிட்டான். அதைப் பிரதி செய்யத் தன் மனைவியின் உதவியை நாடினுன் ரங்காராஜன்.

ராஜி படித்த பெண். கணவன் ஆபீஸ் சென்ற பின் வீட்டில் தனியே இருக்கும் வேளையில் இந்த வேலையைச் செய்யலாமே என்றெண்ணியே கதையை அவளிடம் ஒப்படைத்தான்.

ஆனல் அவனுக்கு விஷயம் எப்படித் தெரியும்? பக்கத்து வீட்டில் ஒரு வயதான அம்மாள் இருந்தாள். ராஜி கணவன் வீடு புகுந்த நாளிலிருந்து, அந்தப் பாட்டியும் அவர்கள் வீட்டுக்கு வந்து கொண்டிருந்தாள். அவளுடைய ஒத்தாசை ராஜிக்கு வேண்டித்தான் இருந்தது. எத்தனையோ விஷயங்களை அவளிடமிருந்து கற்றுக்கொண்டாள். அனுபவமிக்க பாட்டி அவள்!

திடு திப்பென்று அவளிடம், "நான் கதை எழுத வேண்டும், பாட்டி. நாளைக்கு வருகிறீர்களா?'' என்று எப்படிச் செல்வது என்று சங்கோஜப்பட்டாள் ராஜி. தயக்கத்திலேயே ஐந்து நாட்களாகி விட்டன.

அன்று ரங்கராஜன் கண்டிப்புக் குரலில் சொல்லிப் போயிருப்பதை எண்ணி யோசனையிலாழ்ந்தாள் அவள்.

*

கடைசியில் அவனுக்கு இருப்புக் கொள்ளாமல், வந்தது வரட்டுமென்று, அரை நாள் லீவ் எழுதிக் கொடுத்துவிட்டு, பகல் ஒரு மணிக்கே வீட்டுக்குப் புறப்பட்டான். ராஜிக்குத் தொந்தரவு இல்லாமல், தானே கதையை நகல் எடுத்து அனுப்பிவிடலாமல்லவா?

வீட்டையடைந்த ரங்காராஜன், வாசல் கதவு பூட்டியிருந்தது கண்டு திடுக்கிட்டான்.

'பகல் வேளையில் ராஜி எங்கே போயிருப்பாள்? அவளுக்கு இந்த ஊரில் ஒருவரையுமே தெரியாதே? ஒரு வேளை பக்கத்து வீட்டில் பாட்டியுடன் அரட்டையடித்துக் கொண்டிருக்கிருளோ? பாட்டி வந்து தன் காரியத்தைக் கெடுப்பதாக அல்லவா பழி கூறினுள்? உண்மையில் இவளல்லவா பாட்டியைத் தொந்தரவு செய்வதாகத் தெரிகிறது....!'' என்றெண்ணி, பக்கத்து வீட்டுக்குச் சென்றுன்.

ரேழியில் காலை நீட்டிக் கொண்டும் கண்களைச் சற்று மூடியபடியும் உட்கார்ந்திருந்தாள் பாட்டி. ராஜியை அங்கும் காணவில்லை!

"பாட்டி, இங்கு ராஜி வந்தாளோ?'' என்று சற்றுக் கவலையுடன் அவளைக் கேட்டான் ரங்கராஜன்.

கண்களைத் திறந்த பாட்டி ரங்கராஜன் நிற்பதைப் பார்த்துவிட்டு, "நீயா...? ராஜி இங்கு வரவில்லையே! சாப்பிட்டு விட்டு உங்கள் வீட்டுக்குப் போயிருந்தேன். கதவு பூட்டியிருந்தது. நீங்கள் இரண்டு பேருமாக எங்கேயாவது போயிருப்பீர்கள் என்று திரும்பி விட்டேன். அவள் மட்டும் தனியாகவா போயிருக்கிறாள்?" என்று விசாரித்தாள்.

மறுபடியும் வீட்டு வாசலை அடைந்த ரங்கராஜனைக் கவலை சூழ்ந்து கொண்டது. 'ராஜி எங்கே போயிருப்பாள்?' – இதே கேள்வி மறுபடியும், மறுபடியும் தோன்றி அவனை வாட்டியது. அவளுக்குத் தெரிந்தவர்கள் யாருமே அந்த ஊரில் கிடையாது. இருவருமே ஊருக்குப் புதிது. தனியாகக் கடைத் தெருவுக்கும் அவள் போவது கிடையாது. அவளைப் பற்றிப் பாட்டி கூறியது உண்மையே. பின், வீடு ஏன் பூட்டியிருக்கிறது?

திடீரென்று வீட்டுக்குள்ளிருந்து இரண்டொரு பாத்திரங்கள் உருண்டு விழுந்த சத்தமும், அவற்றை யாரோ எடுத்து வைக்கும் சத்தமும் கேட்கவே, அவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. பயத்துடன், ஜன்னல் வழியாக உள்ளே எட்டிப் பார்த்தான்.

இது என்ன ஆச்சரியம்! உள்ளே ராஜியல்லவா இருக்கிறாள்? வெளியில் பூட்டியிருக்கும்போது அவள் எப்படி உள்ளே போனாள்? என்னென்னவோ பயங்கர எண்ணங்கள் தோன்றவே, அவன் நாக்குழற "ராஜி!" என்று கத்தினான்.

கணவனின் குரல் கேட்டு ஜன்னலருகே ஓடி வந்த ராஜி, "அதற்குள் எப்படி வந்தீர்கள்?....இந்தாருங்கள் சாவி. திறந்து கொண்டு உள்ளே வந்து விடுங்கள். எல்லாம் விவரமாய்ச் சொல்கிறேன்...." என்று அவனிடம் சாவியை நீட்டினாள்.

அவள் என்ன சொல்லப் போகிறாளோ என்று பயத்துடன் உள்ளே சென்ற ரங்கராஜனிடம், அவள் சிரித்தபடியே சொன்னாள்: "கதையைக் 'காப்பி' செய்வதற்குப் பாட்டி இடையூறாக இருந்தாளல்லவா? அவளைத் தவிர்க்கவே நான் வெளிப் பக்கமாக வீட்டைப் பூட்டி விட்டு, பின் வழியாக உள்ளே வந்து தாளிட்டுக் கொண்டேன். கதையைக் 'காப்பி' செய்து கொண்டிருந்தபோது பாட்டி வந்தாள். ஆனால் பூட்டைப் பார்த்து விட்டுத் திரும்பிப் போனாள். இல்லாவிட்டால், இன்றும் கதையை எழுத முடிந்திருக்காது!"

"நல்ல யுக்தி செய்தாய். இதையே ஒரு கதையாக எழுதி விடலாம் போலிருக்கிறது!" என்று சிரித்தான் ரங்கராஜன்.

"அதன் 'காப்பிரைட்' என்னைச் சேர்ந்தது என்பது நினைவிருக்கட்டும்!" என்று புன்னகை பூத்தாள் ராஜி. ★

வளம் கொழிக்கும் அந்தக் கிராமத்தின் மண் வளர்த்த காதலை வாழவைக்க என்னவெல்லாமோ செய்தார்கள் ராமதுரை – ரத்தினம் ஜோடி. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் போல, அவர்களுடைய காதலும் பல சங்கடங்களைச் சமாளிக்க வேண்டியிருந்தது.

ரங்கூன் ராமதுரை

சித்தார்த்தன்

கொட்டிலில் சிதறிக் கிடந்த வைக்கோல் துண்டுகளைச் சேர்த்து அள்ளிக் கொண்டிருந்த ஆனந்த ரங்கம் பிள்ளை, தோட்டத்துக் கிணற்றில் சகடை உருளும் ஓசை கேட்டுத் திரும்பினர். மாலை வெயிலில் அவர் மனைவி காமாட்சியின் மஞ்சள் பூசிய முகம் பளபளத்துக் கொண்டிருந்தது.

''இந்த அதிசயத்தைப் பாரு, காமாட்சி! அந்தப் பயல் வீட்டை விட்டுத் தொலைஞ்ச நாளிலேயிருந்து இந்த 'புங்கனூர் செவலை' ஒரு வாய்த் தீனி கூட எடுக்கவே மாட்டேங்குது. சிங்கப்பூரான் தோட்டதுப் புல்லுன்னு இதுக்கு உசிராச்சே? இப்ப அதையுமில்லே தொடமாட்டேங்குது!'' என்ருர் பிள்ளை, செவலையின் முதுகை மெள்ளத் தடவியவாறு.

''ஹூம், பெத்த அப்பனுக்கு இல்லாத கரிசனம், அவன் வளர்த்த மாட்டுக்காவது இருக்கே....!''

சூடாக வந்து விழுந்த சொற்கள் பிள்ளையின் செவிகளில் அக்கினிக் குழம்பாகப் பாய்ந்தன.

''இந்தா, நீ ஒண்ணும் என்னைக் குத்திக் காட்ட வேண்டாம். அந்தப் பயலை விட்டிலே இருக்க வேண்டாம்னு எவன் சொன்னது? ......ம்!''

''சொல்லணுமா? வீட்டிலே இருக்க முடியாதபடி செய்திட்டு இப்ப பேச்சைப் பாரு பேச்சை!'' தாய்மையின் தவிப்பு காமாட்சியின் குரலில் பரவிக் கிடந்தது.

''இந்தா, வெவரம் புரியாமே பேசாதே. அந்த ரத்தினம் குட்டியில்லேன்னு ஒம்மவன் முச்சந்திப் பிள்ளையார் மாதிரி கல்யாணமில்லாம நின்னுடுவானு? ஹூம், ஒனக்குத்தான் அந்தப் பயகிட்டே இத்தனை அக்கறை. போய் எத்தனை நாளாச்சு? எங்கே இருக்கான்... எப்படி இருக்கான்னு அட எனக்கு வேண்டாம், ஒனக்காவது கால் கடுதாசி போட்டிருக்கலாமில்லே....?''

சகடை ஓசை நின்றது. பரபரப்போடு வீட்டிற்குள் நுழைந்த காமாட்சி திரும்பி வரும்பொழுது அவள் கையில் ஒரு கடிதம் இருந்தது.

''காலையிலேயே இது வந்திருச்சு; நான்தான் குடுக்க மறந்திட்டேன். பாருங்க, ஒருவேளை தொரைதான் எழுதியிருக்கோ என்னவோ!''

கடிதத்தை வாங்கிய பிள்ளையின் கரம் லேசாக நடுங்கியது – பிரித்தார்.

''அப்பாவுக்கு,

ராமதுரை வணக்கம். அத்தை மகள் ரத்தினம் இல்லாத வாழ்க்கை, புங்கனூர் செவலை இல்லாத நம்வீட்டு வில் வண்டி மாதிரி. உங்களின் வரட்டுக் கௌரவத்திற்காக, ஐந்து வயசினிலே அறியாப் பருவத்திலே பிஞ்சிலே கூடி வளர்ந்த எங்கள் உறவை அறுத்து விட்டீர்கள். ரத்தினத்தை மறந்து, உங்கள் கௌரவம் நிலைப்பதற்காக வேறு ஒருத்தியைக் கைப்பிடித்து ரத்தினத்திற்குத்

துரோகம் செய்வதைவிட, உங்கள் முகத்தில் விழிக்காமல் இப்படி எங்காவது கண்காணுச் சீமைக்குப் போய்விடலாமென்று திட்டம் போட்டுக் கணக்கப்பிள்ளை வீட்டு அண்ணனுடன் ரங்கோனுக்கு வந்து விட்டேன். அம்மாவைக் கண்கலங்காமல் பார்த்துக்கொள்ளுங்கள். உயிர் உள்ளவரை நான் ரத்தினத்தை மறக்கப் போவதில்லை. நீங்களும் உங்கள் கௌரவத்தைக் கைவிட வேண்டாம்.

ராமதுரை.''

கடிதம் பிள்ளையின் கரத்திற்குள் மடங்கியது. ''காமாட்சி, படிக்க கேட்டேயில்லே!'' என்ற பிள்ளையின் குரலில் முன்பிருந்த தெம்பில்லை.

''கருவேப்பிலைக் கொத்து மாதிரி ஒரே பிள்ளை.... கண்காணுச் சீமையிலே என்ன கஷ்டபடுருனே?.... எல்லாம் நீங்க இட்ட தீ தான். பெத்த பிள்ளையைப் பிரிஞ்சு இப்படி அல்லாட்றேன்!''

பிள்ளை தலையைக் குனிந்துகொண்டார். பிள்ளைப் பாசம் நெஞ்சில் நிறையும் போது அவர் கண்களிலும் நீர் நிறைந்தது. மனைவியின் எதிரில் தன் தோல்வியை ஒப்புக்கொள்ள மனமில்லை.

''இப்போ என்னை என்ன செய்யச் சொல்றே காமாட்சி? ஒம் மகன் இப்படி அவசரப்பட்டு எதுவும் செய்வான்னு நான் எதிர்பார்த்தேனு....?''

''பேசிக்கிட்டே நிக்காதீங்க........! உடனே பொறப்பட்டு வாடான்னு எழுதிப் போட்டுட்டு எதுவும் மேலே ஆகவேண்டியதுக்கு ஏற்பாடு பண்ணுங்க!''

''நல்லாயிருக்கே நீ சொல்றது? அந்த சுந்தர வடிவேலு, இப்போ லேசிலே பிடி கொடுப்பானு என்ன? இவ்வளவும் செய்திட்டு மறுபடியும் அவன் முகத்திலே எப்படிப் போய் முழிக்கறது?''

''போக மனசில்லேன்னு என்னையும் தொலைச்சிட்டு நீங்க தனிச்சு ஆனந்தமா யிருங்க. ரத்தினம் யாரு, அவன் அத்தைமக தானே?'' என்று பொரிந்து தள்ளிவிட்டு வீட்டினுள் நுழைந்தாள் காமாட்சி.

கிணற்றடியில் கட்டியிருந்த துவை கல்லின் மீது, தோளில் கிடந்த துண்டை விரித்துப் போட்டு அமர்ந்தார் பிள்ளை. கலங்கிய மனக் கடலிலிருந்து நினைவு அலைகள் எழுந்தன.

> நாம் வாழும் இந்தியா எப்போது பெருமை பெறுமென்றால், நாட்டிற்காக தங்களுடையது என்று கூறும் எல்லாவற்றையும் தியாகம் செய்யக்கூடியவர்கள்— உள்ளும் புறமும் உண்மையாக இருப்பவர்கள் தோன்றும் போதுதான்.
>
> — விவேகானந்தர்

பிள்ளையின் பெற்றோர்கள் கண்ணை மூடும்போது பிதுரார்ஜிதமாக அவர்கள் வைத்து விட்டுப்போன சொத்து-குடும்பச்செலவுக்கு ஈடுகட்டி நின்ற 'தேர்முட்டிச் செய்'யும், அவர் தங்கை கண்ணம்மாவும்தான்! வளர்ந்து வரும் கண்ணம்மாவின் பருவ அழகு பிள்ளையை உடலைப் பிழிந்து சம்பாதிக்க வைத்தது. பைசாவை அணாவாக்கி, அணாவை ரூபாயாக்கிச் சேர்த்தார் பிள்ளை.

வள்ளியூரிலே சுந்தரவேலுதான் சுமாரான பணக்காரர். பிள்ளையின் தேர் முட்டிச் செய்க்குப் பக்கத்தில் பொன் கொழிக்கும் அவரது நிலமிருந்தது. கண்ணம்மாவின் வனப்பான வடிவம் சுந்தர வடிவேலுவின் நெஞ்சில் இடம் பிடித்திருப்பதை அறிந்த பிள்ளை, சுந்தர வடிவேல் பெண் கேட்க வந்தபோது தாராளமாகத் தலையாட்டி விட்டார்.

கண்ணம்மாவுக்கு மணமான மறுமாதமே தன் சக்திக்கேற்ப காமாட்சியை மணந்து கொண்டார் பிள்ளை. மறு ஆண்டே ராமதுரை பிறந்தான். ராசிக்கார ஜாதகம் என்பார்களே, அந்த வகையைச்சேர்ந்தவன் ராமதுரை. அவன் பிறந்த ஐந்தாறு ஆண்டுகளுக்குள்ளாகவே சுற்று வட்டாரத்திலுள்ள நாலைந்து காணிகளை மடக்கி விட்டார் பிள்ளை. ஓலைவீடு ஓட்டு வீடாயிற்று. வாசலில் வில் வண்டி நிற்க ஆரம்பித்தது.

பிள்ளைக்கு யோகம் பொங்கிக் கொண்டிருந்த வேளையில்தான், சுந்தர வடிவேலுவின் வாழ்க்கையில் அந்தத்துரதிர்ஷ்டம் நிகழ்ந்தது. ஊரெங்கும் பரவி வந்த கொள்ளை நோயிலே கண்ணம்மா சுருண்டு விட்டாள். சாவதற்கு முன்பு, ராமதுரைக்குத் தன் மகள் ரத்தினத்தை மனைவியாக்க வேண்டுமென்ற உறுதிமொழியைப் பிள்ளையிடம் பெற்றுக்கொண்டே அவள் நிம்மதியுடன் கண்ணை மூடினாள்.

காலம் நகர்ந்தது. மொட்டு மலராயிற்று. கல்யாணத்திற்கான ஏற்பாடுகளைப் பிள்ளையும் சுந்தர வடிவேலுவும் தொடங்கியிருந்தபோதுதான், நடக்கக் கூடாத சம்பவம் நடந்து விட்டது.

தேர் முட்டிச் செய்க்கு அருகே திடலில் மேய்ந்து கொண்டிருந்த புங்கனூர் செவலை கவனிப்பாரில்லாமல் போகவே, மணிகள் முற்றிக் கொழித்து அறுவடைக்குத் தயாராக நின்ற சுந்தர வடிவேலுவின் கழனியிலே சுவாதீனமாக இறங்கி விட்டது. ராமதுரை களத்து மேட்டிலே இருந்தான். சுந்தர வடிவேலு கொஞ்சம் சூடாகப் பேசி விட்டார். அற்ப விஷயம்தான். பிள்ளை அடங்கிப் போயிருக்கலாம். பதிலுக்குப் பதில் என்ற ரீதியில் வளர்ந்து விவகாரம் முற்றி விட்டது. இரு குடும்பத்திற்குமுள்ள தொடர்பு அறுந்தது.

மனக்கொதிப்பு அடங்காத பிள்ளை, ராமதுரைக்கு வேறுபெண் தேடத் தொடங்கினார். சுந்தரவடிவேலு மட்டும் சளைத்தவரா? மாப்பிள்ளை வேட்டையில் இறங்கி விட்டார். ரத்தினம் கண்ணீர் வடித்தாள். ராமதுரை துடித்து விட்டான்.

மெள்ள ராமதுரையை முடுக்கினார் பிள்ளை. ''தம்பி, பாக்கம் மணியக்காரரோட பெண்ணைப் பார்த்திருக்கியா நீ?....கிளி மாதிரி இருக்கும்!....மனுஷன் நமக்குப் பைசா செலவில்லாமே கல்

யாணத்தை முடிச்சிடுறேன் என்கிறாரு. சொத்துக்கும் சொத்து; செல்வாக்குக்கும் செல்வாக்கு. என்ன சொல்றே நீ?''

நறுக்குத் தெறித்தாற் போல் வந்தது ராமதுரையின் பதில்.

''இந்த ஜென்மத்திலே ரத்தினத்தின் கழுத்தில் தவிர வேறு யாருக்கும் இந்தக் கையாலே மூணு முடிச்சுப் போடமாட்டேன்!''

பிள்ளை உறுமினார்.

''ஹூம், அது மட்டும் நடக்காதுடா தம்பி! அந்த வீட்டு சம்பந்தம் தான் வேணுமின்னா இனி இந்த வீட்டிலே உனக்கு வேலை இல்லை, ஆமாம்!''

குனிந்து பிள்ளையின் பாதங்களைத் தொட்டு நமஸ்கரித்த ராமதுரை வெளியில் நடந்தான். பிள்ளை அதிர்ந்து விடவில்லை. இளவட்டம். கொஞ்சம் கொதிப்பு அடங்கியதும் திரும்பி விடுவான் என்ற நம்பிக்கை பிள்ளைக்கு! ஆனால் ராமதுரை ....?

பெருமூச்சு விட்டவாறே கல்லை விட்டு எழுந்தார் பிள்ளை.

*

புங்கனூர்ச் செவலையின் சலங்கை மணிகளைச் செப்பனிட்டுக் கொண்டிருந்த பிள்ளை காலடியோசை கேட்டுத் திரும்பினார். எதிரே நின்று கொண்டிருந்த சுந்தர வடிவேலுவைக் கண்டு அவருக்கு வியப்பாக இருந்தது. பிள்ளை சமாளித்துக் கொண்டார். வாசலை மிதித்து விட்ட பின் வரவேற்காமலிருக்க முடியுமா....?

''வாங்க; ஏது இம்புட்டு தூரம்?'' திண்ணைமேல் படிந்திருந்த தூசை மேல் துண்டால் உதறினார் பிள்ளை.

வடிவேலு அமர்ந்தார்.

''ஊர்லே ஒரே பேச்சா இருக்கு. ராமதுரை இப்படிச் செய்வான்னு நான் நெனைக்கவே இல்லே!'' — மெள்ளப் பேச்சைத் தொடங்கினார் சுந்தர வடிவேலு.

தேவை

இவரைத் தெரியுமா?
சோர்வுற்றிருக்கும் இவருக்கு அயர்வைப் போக்க ஒரு சிட்டிகை ரத்தினம் பொடி தேவை

T.A.S. ரத்தினம் பட்டணம் பொடி

தபால்பெட்டி - 1151 சென்னை - 21

''ஹூம்! அவன் மேலே ஒரு தப்புமில்லே. நான்தான் வீம்புக்கு முரண்டு பிடிச்சேன். எனக்கு நல்ல புத்தி கற்பிச்சிட்டான். அன்பு என்கிறது அவ்வளவு லேசாகப் பிரிக்கக் கூடியதா என்ன?....இதை அப்பவே நான் புரிஞ்சுக்கலை!'' என்றார் பிள்ளை கம்மிய குரலில்.

''இதெல்லாத்துக்கும் நான்தான் காரணம். அன்னைக்கு இரண்டொரு வார்த்தை அடங்கிப் பேசியிருந்தா இத்தனை தொல்லையில்லே? மாடு மேய்ஞ்சா என்ன, குபேரப் பட்டணமா கொள்ளை போயிடும்...?''

சுந்தர வடிவேலுவை ஆச்சரியத்துடன் பார்த்தார் பிள்ளை.

''நீங்க எதுக்கும் யோசனை பண்ணாதீங்க. நடந்ததை யெல்லாம் மறந்திட்டு, ராமதுரையைப் பொறப்பட்டு வரச் சொல்லி ஒங்க கையாலே ரெண்டு வரி எழுதிப் போடுங்க; மேலே நடக்க வேண்டியதைக்கவனிப்போம். சாயந்தரம் நம்ம வீட்டுப் பக்கம் வந்திட்டுப் போங்க. ரத்தனம் ஒங்களைப் பாக்கணுமின்னு ஒரேயடியா அழுது ஆகத்தியம் செய்யுது!''

திருமணம் முடிந்த மறு நாள் கும்பகோணத்துவெற்றிலையை ஒயிலாக மடித்துத் தன் தளிர் விரல்களால் அதை ராமதுரையிடம் கொடுத்துக் கொண்டிருந்தாள் ரத்தினம்.

''ஏன் அத்தான், மாமா அப்படித்தான் வீம்புக்குப் பிடிவாதம் பிடிச்சா, எல்லோரையும் கண் கலங்க வச்சிட்டு நீ ரங்கோனுக்கு ஓடிப் போயிடுறதா....?''

''ஏ ரத்தினம் குட்டி! நான் ரங்கோனுக்குப் போனதா யாரு சொன்னது ஒனக்கு? ரங்கோன் எந்த திக்கிலே இருக்குன்னு கூடத் தெரியாதே எனக்கு...?''

''என்னை ஏய்க்கப் பாக்கறியா அத்தான்? அதுதான் நடக்காது. நீ தான் மாமாவுக்கு கடுதாசி போட்டிருந்தியாமே—தபால் முத்திரையிலே கூட ரங்கோன்னு போட்டிருந்ததுன்னு மாமா சொல்லிச்சே!''

மெள்ள அவளது கைகளைப் பிடித்தான் ராமதுரை.

''ஆமா...யாரு இல்லேன்னு...? நடந்ததைக் கேளு ரத்தினம்: அப்பாரு கிட்டே கோவிச்சுக்கிட்டு வெளியே வந்தேனு? நம்ப கணக்கப் பிள்ளை வீட்டு அண்ணன் கண்ணிலே பட்டுது. ''என்னடா ராமதுரை! நான் நாளைக்குத் திரும்ப ரங்கோனுக்குப்போறேன். என்னை மறந்திட மாட்டியே?''ன்னு கேட்டுது. அப்போ பாரு, அம்மன் கிருபையாலே எனக்குப் பளிச்சின்னு ஒரு யோசனை தோணிச்சு. நடந்த விஷயத்தையெல்லாம் அதுக்கிட்டே சொல்லி எனக்கு ஒரு உபகாரம் செய்யணும்னு கேட்டுக்கிட்டேன். அங்கேயே உட்கார்ந்து விறு விறுன்னு அப்பாருக்கு ஒரு லெட்டர் எழுதிக் கொடுத்து, ரங்கோனுக்குப் போய்ச் சேர்ந்ததும் அதை தபாலிலே போட்டுடச் சொல்லிட்டேன். அந்த அண்ணன் சொன்னபடியே நடந்துசிச்சு. நான் ரங்கோனிலே இருந்து எழுதறதா அப்பாரு நெனைச்சு ஏமாந்திட்டாரு. என்னை அப்பாரு பொறப்பட்டு வரச் சொல்லி எழுதின கடுதாசியைக்கூட உடனே இங்கே நான் கொடுத்த விலாசத்துக்கே அனுப்பி வச்சிடுச்சி அண்ணன்!''

ரத்தினத்தின் கண்கள் அகல விரிந்தன.

''அட! அப்போ இத்தினி நாள் எங்கே சுத்திக்கிட்டு இருந்தே?''

லேசாகச் சிரித்தான் ராமதுரை.

''செலவுக்குப் பணம் தர ஒங்க அப்பாரைப் போல எனக்கு ஒரு மாமனுர் இருக்கும்போது, நான் எங்கே சுத்திக்கிட்டு இருந்தா என்னவாம்....?''

பூவிழிகள் மலர மலர விழித்தாள் ரத்தினம்.

''அட! எங்கப்பாருதான் ஒனக்குப் பணம் கொடுத்து அனுப்பி வைச்சதா?....அதுதானே பார்த்தேன்....பிடிவாதமா இருந்த அப்பாரு ஏன் திடீர்ன்னு தணிஞ்சு போயிட்டாருன்னு இப்ப இல்லே புரியுது....!'' என்ருள் அவள்.

கூடத்து அறைக்கு வெற்றிலைச் செல்லத்தைத் தேடிக் கொண்டு வந்த பிள்ளை திகைத்து நின்ருர். மெல்லிய குரலில், ''காமாட்சி, பாத்தியா உன் பிள்ளையோட சமர்த்தை? திண்ணையைத் தாண்டாமே, ஏரோப்பிளேன் ஏறிப் பறக்காம, சுலபமாக ரங்கோனுக்கில்லே போய் வந்திட்டான். அவன் சாதாரண துரையில்லேடி—ரங்கோன் ராமதுரையடி!'' என்ருர் பிள்ளை. ★

சுவைமிகுந்த தமிழ் விருந்து

புத்தகங்களைப் படிப்பது மனத்திற்கு மகிழ்ச்சியூட்டும் விஷயம். தம் காலால் நிற்க முயலும் புத்தகங்களென்றால், அவை மனிதர்களுக்குப் பயனளிக்கும் நல்ல சாதனமுங் கூட.

தேமதுரத் தமிழோசையைத் தெருவெல்லாம் முழக்கும் பணி சிதனம் தந்துகொண்டிருக்கும் பெருமையின் பங்குதாரர்கள் பலர். அவர்களிலே செந்தமிழ்க் காவலர் முக்கியமானவர்; கணிசமான பணி செய்து வருகின்றார். அடையாளம்: "தமிழோசை!" 'தமிழில் வழிபாடு', 'தமிழை எளிதாக்குதல்', 'வடமொழியில் தமிழ்ச் சொற்கள்' போன்ற பதினன்கு தலைப்புக்கள் சுவைமிகுந்த தமிழ் விருந்து.

தமிழோசை: ஆசிரியர்: **டாக்டர் அ. சிதம்பரநாதன்.** வெளியீடு: **புதுமைப் பிரசுரம், பெண்ணாடம்.** விலை: **ரூ. 2-8-0.**

மார்க்கசகாயம் செய்த குற்றம்!

துப்பறியும் கதைகளுக்கு என்னவோ ஒரு கிராக்கி; இலக்கியச் சந்தையில் துப்பறியும் மர்மக் கதை எழுத்தாளர்களின் விலைவாசி இப்பொழுது கொஞ்சம் ஏற்றம். 'யார் செய்த குற்றம்?' என்ற கேள்விக் குறியுடன் அமைந்த கதை, குற்றவாளியை அறிமுகப்படுத்துவதில் வெற்றி பெறுகிறது. திரு சண்முகம் எளிய, இனிய தமிழில் சுவையாகக் கதையைச் சொல்லியிருக்கின்றார்.

யார் செய்த குற்றம்? ஆசிரியர்: **ஆர். சண்முகம்;** வெளியீடு: **வானதி பதிப்பகம், சென்னை-17.** விலை: **ரூ. 1-0-0.**

முரசு முழங்கட்டும்!

'தமிழ்நாடு தமிழருக்கென்றே—
இந்த சகத்தில்
முழக்கிடு முரசே!'

என்ற பாரதிதாசன் அவர்களின் பாடலுடன் தொடங்கியுள்ள இந்த ஏட்டிலே அரசியல், வைத்தியம், இலக்கியம் போன்ற உபயோகமான பகுதிகள் காணப்படுகின்றன. வரவேற்கிறோம்.

ஆசிரியர்: **ஏ. டி. சபாபதி.** அலுவலகம்: **'முரசு'—சென்னை-21.** விலை: **அணு ஒன்று!**

கங்கா

திருவாளர்கள் அகிலன், ஜி. எஸ். மணி, கல்பனு முதலிய பிரபல எழுத்தாளர்களின் விஷயங்களுடன் 'கங்கா' பவனி வந்து கொண்டிருக்கிறது. பயனுள்ள பத்திரிகைகளை அன்புக்கரம் நீட்டி ஆதரவுப் பார்வையுடன் வரவேற்கத் தயங்காது நம் தமிழகம். இந்தப் பண்பாட்டின் தளத்தில் நின்று, 'கங்கா'வை வரவேற்று வாழ்த்துகிறோம்.

ஆசிரியர்: **கே. பி. சாரதி.** முகவரி: **'கங்கா', ஒப்பணக்காரத் தெரு, கோவை.** விலை: **அணு மூன்று.**

தாயகம் வாழ்க!

முற்போக்குக் கருத்துக்களை வளப்படுத்தும் வகையில் தோன்றியுள்ள மற்றுமொரு சகோதரப் பத்திரிகை இது. கடந்த சில இதழ்களிலே பயனுள்ள புதிய செய்திகள் காணப்படுகின்றன. பெருமையுடன் வரவேற்கின்றோம்; நிறைவுடன் வாழ்த்துகின்றோம்.

தாயகம் (மாதமிருமுறை); ஆசிரியர் குழு: **எஸ். வாசுதேவன், நல்லுலக சுந்தரம், க. மெய்யநாதன்.** வெளியீட்டகம்: ***அறந்தாங்கி;*** அலுவலகம்: ***செம்பனூர்கோயில்.*** விலை: **அணு இரண்டு.** ★

சில்லென்ற உணர்வு நெஞ்சத்தில் ஊடுருவியது; திடுக்கிட்டுக் கண் விழித்தான் அவன்.

குளிர் காலத்தில் புல்வெளியில் துளித்திருக்கும் முத்து முத்தான பனி நீர் போல, தன் முகத்தில் நீர்த்துளிகளை உணர்ந்தான். அழுக்கேறிய வலிய கைகளால் முகத்தைத் துடைத்துக் கொண்டே 'யாரது?' என்று அதட்டியபடி எழுந்து உட்கார்ந்தான்.

சற்று முன்தான் களத்தில் வேலையை முடித்துக் கொண்டு வைக்கோல் போர் அருகில் இருந்த வைக்கோல் கூண்டிற்குள் 'அப்பாடா' என்று அவன் சாய்ந்தான். அப்போது மாலைக் கதிரவன் செந்தூரக் குழம்பில் மூழ்கிக் குளித்துக் கொண்டிருந்தான். இப்போது கண்விழித்ததும், அரை வட்ட உருவில் வளர் பிறையைக் கண்டான். நிலவொளியைத்





தழுவிக் குளிர்ந்த தரை போலவே அவன் மனமும் குளிர்ந்தது. உழைத்து ஓய்ந்திருந்ததால் உடலில் வேதனை படர்ந்திருந்தது.

"தில்லை!"

எல்லை மீறிய ஆர்வத்தில் அவன் கத்தி விட்டான். 'கண்ணாமூச்சி விளையாட்டு' ஆடிய இன்பம்; அந்த உருவைக் கண்டுபிடித்து விட்டதில் அவ்வளவு மகிழ்ச்சி அவனுக்கு!

புன்னகை பொங்க அவன் எதிரில் தோன்றினாள் அவள். நிலவில் திளைத்து நின்றுகொண்டிருந்த அவளைத் தன் ஆசை விழிகளால் கவ்வுவது போல நோக்கினான்.

அன்பின் எல்லைக் கோட்டில் பெண்ணழகின் நாணம் பிறக்கிறது போலும்! கூண்டு நிழலில் அமர்ந்திருந்த அவனுடைய கண்கள் அவளுக்கு எவ்வாறு தெரிந்தனவோ? அவள் தன் பார்வையைத் தாழ்த்திக் கொண்டாள். தலையில் இருந்த சிறிய கூடையைக் கீழே இறக்கி வைத்தாள்.

"உண்மையா தூங்கி யிருந்தீங்களா, அத்தான்? கண்ணை மூடிக்கிட்டு, பாசாங்கு செய்யறதாயில்ல நினைச்சேன்!" என்றாள் அவள். முகத்தில் தண்ணீர் தெளித்து எழுப்பியது குற்றம் என்பதை அவள் குரலில் இழைந்த மென்மை மறைமுகமாகக் கூறியது.

"நீ பன்னீர் தெளிச்சபோது விழிச்சுக்கிட்டுதான் இருந்தேன், தில்லை! கையும் களவுமாக உன்னைப் பிடிக்கிறதற்குள்ளே நீ ஓடி ஒளிஞ்சுட்டே!" என்றான்.

'உமா' கல்லூரி மாணவர் — மாணவிகள் சிறுகதைப் போட்டி :

"புறப்பட ரொம்ப நேரமாயிடுச்சு. அடுத்த வீட்டுக் கைக்குழந்தைக்குக் காய்ச்சல். பாவம், அந்தப் பொண்ணு தனியா கஷ்டப்பட்டுக் கொண்டிருந்திருச்சு. நான்தான் மருந்துகொடுத்து அழாமல் தூங்க வைச்சேன்." அவள் பேசிக்கொண்டே கிண்ணியில் சோறு பரிமாறினாள்.

"ஏன், வைத்தியரிடம் காட்டலையா?" என்று அவன் வினவினான்.

"வைத்தியர் கொடுத்த மருந்துதான்! நாளைக்குப் பார்த்துக்கப்பாலே நகரத்து டாக்டர் கிட்டே போய்ப் பார்க்கலாம்னு அவள் கிட்டே சொல்லியிருக்கேன். அவள் தனியாப் போகப் பயப்படறா. நீங்களும் துணைக்குப் போயிட்டு வாங்க."

"அவன் — முத்து எங்கே?"

"அவரு இருந்தா நீங்க ஏன் போகணும், அத்தான்? அந்த மனுசன் மாடு வாங்க சந்தைக்குப் போனவருதான், ரெண்டுநாளாச்சு திரும்பலே. சரி, கதை கேட்டுக்கிட்டே உட்கார்ந்திட்டீங்களே? எழுந்திருச்சு கையலம்புங்க."

அவனுக்கு நல்ல பசி. 'விறுவிறு' என்று உண்டான். தேவை அறிந்து அவள் பரிமாறினாள். அவன் பசி கரைந்தது. "நீயும் சாப்பிடு, தில்லை!" என்றான்.

"எனக்கு வீட்டிலே எடுத்து வைச்சிருக்கேன். நீங்க சாப்பிடுங்க," என்றாள் அவள்.

"நான் உனக்கு எத்தனை தடவை சொல்றது? சாப்பிட்டு விட்டு இங்கே வா. இல்லா விட்டால் என்கூடச் சேர்ந்து சாப்பிடு!"

"ஆமாம். நீங்க புதுப்புதுப் பழக்கமெல்லாம் செய்விங்க; இன்னும் கொஞ்சம் சோறு வச்சுக்கிடுங்க, அத்தான்."

"எனக்கு போதும்; இருப்பதை நீ இங்கேயே சாப்பிடு."

"அந்தக் குழந்தை நைநையின்னு கத்திக் கொண்டிருக்கும். அத்தான், நான் வீட்டுக்குப் போய்த்தான் சாப்பிடணும்".

அவன் கேலியுடன் நகைத்தான்.

"ஏன் சிரிக்கிறீங்களாம்?" என்று முகத்தைக் கோணிக் கொண்டாள் அவள்.

"இல்லே, எனக்கு ஒன்று நினைவுக்கு வந்திச்சு."

"என்னது?"

"ஒரு தடவை உன் அண்ணன் ஊருக்கு ரயில் ஏறிப்போனோமே?"

"ஆமாம்."

"உனக்கு நினைவிருக்கா? முழுக் கால் சட்டை, முழுக் கைச் சட்டை எல்லாம் போட்ட ஒரு ஆள் ரெண்டு வயசுக் குழந்தை ஒன்றைக் கையிலே வைச்சுக்கிட்டு அந்தப் பெரிய ஸ்டேஷன்லே நின்றாரே?"

"ஆமா, ஆமா, நிறைய நகை போட்டுக்கிட்டு, பட்டுச் சேலை பட்டு ரவிக்கையோட ஒரு பெண்ணு ரயில் வண்டிக்குள்ளே உட்கார்ந்தா. வண்டி புறப்படுற சமயத்திலே அவருகிட்டேயும் குழந்தை கிட்டேயும் கொஞ்சிப் பேசிட்டு வரேன்னு சொன்னாள். அந்தக் குழந்தை கூட அம்மா அம்மான்னு அழுது தீர்த்திச்சு; பரிதாபமா இருந்திச்சு!"

"அதைத்தான் சொல்லவாரேன்; நடக்கக்கூடத் தெரியாத பிள்ளையைப் புருஷனிடம் விட்டுட்டு எங்கேயோ ஊருக்குப் போனாள் அந்த மகராசி. நீ என்னடான்னா அடுத்த வீட்டுக் குழந்தையைக் கொஞ்சங் கூடப் பிரிஞ்சு இருக்க மாட்டேங்கறே? வேடிக்கை!"

"அந்தச் சனங்களுக்கு அது பழக்கம் போலேருக்கு. எதிர்த்த வீட்டுப் பையன் கலியாணம் பண்ற வயசாச்சு. என்னமோ ஊருக்கு வேலைக்காகப் போறானாம். அந்த அம்மா என்ன அழுகை அழுதுட்டாங்க!"

"அது சரி. வேறே வெத்திலையில்லையா? இந்தச் சருகுதான் அகப்பட்டுதா?"

"இது தேவலாமா, பாருங்க."

'மகிழம்பூ' ஆசிரியர்

குடந்தை அரசினர் கல்லூரியில் பி. ஏ. இரண்டாம் ஆண்டு படிக்கிறார்; ஆங்கிலக் கதைகளின் பாணியில் தன் எழுத்துக்களை அமைத்துக் கொண்டிருக்கிறார்; கதையில் கருவும் படிப்பினையும் இருக்கின்றன.

வாய் சிவக்க அவள் இருந்தாள்; பல் சிவக்க அவன் இருந்தான்!

மாமரத்திலிருந்து ஆந்தை ஒன்று அலறியது.

"ஆகா, என்ன இனிமையான குரல்! இன்னும் கொஞ்சம் பாடம்மா. நீங்க ரெண்டு பேரும் மரத்திலே பாடுறீங்க; நாங்க ரெண்டு பேரும் இந்த நிலவு வெளிச்சத்தையும் களத்து மேட்டையும் மறந்துட்டு ஏதோ ஊர்க் கதை பேசி வீண்பொழுது போக்குறோம். நீங்களாவது மகிழ்ச்சியாப் பாடுங்க ...ம்!" — அவன் நகைத்தான்.

"அப்ப, அது குரலைக் கேட்டாலே எனக்கு ஒரே அருவருப்பாயிருக்கு. குயில் கூவுறதைக் கேட்டது போல 'ஆகா' போடறீங்களே!"

"ஆந்தைன்னு அலட்சியமா நினைச்சிடக் கூடாது, தில்லை! இதனுடைய அருமையைச் சொல்றேன் கேளு. பகலிலே குயில் கூவாத போது கிளி பேசிக்கிட்டிருக்கும்; இல்லாவிட்டால் மைனா மழலை பழகும். காக்கா நெல்லு பொறுக்க நம்மையே சுற்றித் திரியும். இதைப்போலே வெள்ளைப் புறாவிலிருந்து பிணந்தின்னிக்கழுகு

பெருந்தகைமையைக் காண்பதிலோ, பிறருக்கு அன்பு செய்வதிலோ, இன்பம் காண்பதே கருணையின் முழு உருவம்.

— ரஸ்கின்

வரைக்கும் எவ்வளவோ பறவை! ஆனா, இரவில் களத்துக் காவலுக்கு எனக்குத் துணையாயிருப்பது இந்த ஆந்தைதான். ஏழைக்கு ஏழை துணை! எப்போதாவது நான் அசந்து தூங்கி விட்டால், ஆந்தை அண்ணன் சத்தம் போடுவார். மாடு கீடு வந்தாக்கூட இரைச்சல்போட்டு என்னை எழுப்புவார். இந்த உதவிக்காக அவரை நான் புகழ வேண்டாமா, என்ன? தில்லை?''

இருவரும் கலகல வெனச் சிரித்தனர்.

''நீங்க வீட்டிலே போயி சுகமா தூங்குங்களேன், அத்தான்! இங்கே நான் இருந்துக்கிடறேன்.''

''சரி. நீ இங்கே காவல் பார்த்துக்கோ. நான் சமைச்சு சோறு கொண்டுக் கிட்டு வாரேன்!''

''ஐயோ! நீங்க சமைச்சதை நான் சாப்பிடுறதா?''

''ஏன்? எனக்குச் சமைக்கத் தெரியாதுன்னு நினைச்சியா?''

''இல்லே. உங்களைச் சமைக்கச் சொல்லி கல்லுப் பிள்ளையாரு போல நான் உட்கார்ந்துகிட்டு சாப்பிடறது பாவம், அத்தான்!''

''நல்ல பாவத்தைக் கண்டே போ! அப்படின்னு நீ என் வேலையைச் செய்யறது மட்டும் பாவமில்லையா?''

''இல்லை அத்தான். வேடிக்கையாக....!''

''இங்கே நீ தனியா எப்படியிருப்பேயாம்?''

''வீட்டிலே மட்டும் தனியா இருக்கலேயோ?''

''தெருவிலே இருப்பதற்கும்?''

''தெருவிலே கூட்டத்தோடே இருந்தாலும், என் மனசு தனியாகவே கிடக்குதே, அத்தான்!''

ஏதோ சரசர வென்று ஒலி கேட்டது. அவர்கள் உற்றுக் கவனித்தனர். அந்த ஓசை வைக்கோற் போருக்குப் பின்புறமிருந்து வந்தது. அவன் கையில் தடியை எடுத்துக் கொண்டு எழுந்தான்.

''நீங்க உட்காருங்க அத்தான். நான் போய் அந்தத் திருட்டு மாட்டை ஓட்டி வந்து கட்டிப்போடறேன்''.

''ஏன் தில்லை, நமக்குன்னு ஒரு மகன் இருந்தா மாட்டை ஓட்டுவதற்கு ஓடுவான். மடையை வெட்டி விடுவதற்குப் போவான்''—அவன் பேச்சில் ஆசை கொப்புளித்தது. அங்கே குவிந்து கிடந்த வைக்கோல் கட்டின் மேல் சுழற்சியுடன் அமர்ந்து பெருமிதப் பார்வையொன்றை அவள் மேல் வீசினான்.

அவன் எதிரில் உட்கார்ந்த அவள், ''உங்களுக்கு மாடு ஓட்ட மட்டும் தான் மகன் வேணுமா....? பண்ணையாரு மகன் படிக்கிறது போல படிக்க வைக்கணுங்கறேன். நாம கஷ்டப்பட்டாலும், அவனாவது பெரிய சர்க்காரு வேலைக்குப் போயி...'' என்றாள்.

'அப்படியென்றால் பயிர்த் தொழில் செய்வது இழிவா? பயிர்த் தொழிலை நம்பி வாழ்க்கை நடத்தியதால்தான் என்றும் ஏழையாகவே இருக்க வேண்டியதாய் விட்டதா? இந்த நிலை நீடித்துக் கொண்டே சென்றால் சமுதாயத்தின் வளர்ச்சி என்னவாகும்?' என்ற சிந்தனையில் அவன் மனம் புகவில்லை. ஏதோ சிரித்தான்.

''முதலில் மகன் பிறக்கட்டும். பிறகு பார்த்துக் கொள்ளலாம்,'' என்று கூறிச் சிரித்தான்.

அவள், ''இன்னும் நாலைஞ்சு மாசம் தானே அத்தான்!'' என்று

கடைக் கண்ணுல் அவனைப்பார்த்து உவகை கொண்டாள். அந்த உவகையை மனத்தால் பருகி அவன் மகிழ்ந்தான்.

"சரி, நேரமாய்க் கொண்டேயிருக்குது தில்லே. சீக்கிரம் புறப்படு. இவ்வளவு நேரம் இங்கே நீ இருக்கக்கூடாது?" என்றான் வேலன், கவலையுடன்.

அதை அவள் புரிந்து கொண்டவள் போலக் கூடையைத் தூக்கி இடையில் வைத்துக் கொண்டு புறப்பட நின்றாள்.

"நீங்க ஏன் அத்தான் வீணுக வாரீங்க? நான் போயிடுவேன்; திரும்புங்க," என்றாள் அவள்.

"அந்த வாய்க்கால் தாண்டி உன்னைக் கொண்டு வந்து விடுகிறேன், தில்லே" என்று அவன் அவளைத் தொடர்ந்தான்.

நிலா வெளிச்சத்தில் விளங்கிய ஒற்றையடிப் பாதையில் அவர்கள் நடந்து கொண்டிருந்தார்கள். சில ஆண்டுகளாக, இல்லே, வழி வழியாக முடிவில்லாமல் அதே பாதையில் நடந்து அவர்கள் பழக்கப் பட்டிருந்தார்கள். பக்கத்தில் வளர்ந்து பெருகிவிட்ட முட்செடிகள் அவர்களுக்குத் தெரியாது. பெரிய மரங்களை எட்டி நின்று பார்த்திருக்கிறார்கள்; கனி கொழுத்து இருந்தாலும் அவை யாருக்கோ சொந்தம்! அதைப் பற்றி அவர்கள் கவலைப் பட்டதில்லே. கவலைப்பட நேரமில்லே. கதிரவன் போல் கடமையைச் செய்து ஒய்வு பெறும் பகல்; இன்ப நிலாப் பொழுதான இரவுகள் அவர்களுக்கு எத்தனையோ!

அந்தப் பாதையில் இருந்த மகிழமாத்திலிருந்து நட்சத்திரங்கள் சிந்திக் கிடப்பன போல சின்னஞ்சிறு பூக்கள் உதிர்ந்து கிடந்தன. அவன் சில மலர்களைப் பொறுக்கி அவளது கூந்தலில் செருகினுன்.

மறுகணம்—

அவள் 'ஐயோ' வென்று பெரிய குரலில் அலறினுள்.

> அவதூறு வாளினும் அதிகமான கூர்மையும், நாகத்திலும் அதிகமான விஷமும் உடையது. அது மூச்சுவிட்டால் போதும்; அரைக்கணத்தில் அகில லோகமும் பரவிவிடும்.
>
> — ஷேக்ஸ்பியர்

அவள் பாம்பை மிதித்து விட்ட மாதிரி அப்படி அலறினுள்.

"பாம்பு, பாம்பு!"

அந்தப் பாம்பு நெளிந்து கொண்டிருந்தது.

"எங்கே கடித்தது, கண்ணே?"

அவள் காட்டிய இடத்தில்—முழங்கையில்—அவன் வாய் வைத்து விஷத்தை உறிஞ்சினுன்.

"வேண்டாம் அத்தான், வேண்டாம்; என்னைப் பற்றிக் கவலைப் படாதீங்க...நீங்க நல்லா இருங்க போதும். அப்பாலே ஒங்களுக்கும் இந்த நஞ்சு..."

"இந்தத் தியாக உணர்ச்சி என்னையே உயிரோடு கொன்றிடுமே, கண்ணே? அப்புறம் நீ — நீ தரப் போகும் இன்பப் பரிசு யெல்லாம் வீண் கனவாகிடாதா?....ஆண்டவனே, என் பெண்சாதியைக் காப்பாற்று....!"

அவள் முகம் வியர்த்துக் கொட்டியது. பிறகு அவள் சிரித்தாள்; புது ஜீவன் இருந்தது அதில்.

பாம்பின் மீது கழியை வீசினுன் அவன். பாம்பின் உடல் நெளிந்த இடத்தில் காகிதக் கிழிசல்கள் சில கிடந்தன.

அவன் முணமுணத்தான்:

"நான் போட்ட தமாஷ் நாடகம், கடைசியிலே என் கண்ணுட்டியின் தியாக உள்ளத்தை எனக்குப் படிச்சுக் கொடுத்திட்டுது!...." ★

உதிர்ந்த ரோஜா இதழ்கள் சொல்லும் முன்கதை இது:

அழகி தனி மலர்; தனி ரோஜாப்பூ. ரோஜா என்றால், முள் இருக்க வேண்டுமல்லவா? முள் இருந்தது; அதுமட்டுந்தானா?—முள் வேலியே உருவானது. அழகி, திருமதி அழகேசன் ஆனாள்; ஆக்கப்பட்டாள் – மைலாப்பூரிலே!

அன்று மாலையில், அழகி சுயநினைவு இழந்து விட்டதாக ஒரு தகவல் கிடைத்தது, கரிகாலனுக்கு. அழகியின் எழுத்துக்களென்றால் அவனுக்கு உயிர். ஆம்; அழகி ஒரு கதாசிரியை.

கடற்கரையைப் பிரிந்து வீடு திரும்ப நெடு நேரம் ஆகியது. வழியில் ஒரு டம்பப்பை, புத்தகங்கள் இரண்டு; உதிர்ந்த ரோஜாப் பூக்கள் முதலியன சிதறிக் கிடந்தன. இரும்புப் பாலத்தில் மயங்கி விழுந்திருந்த அழகியைக்கண்ட கரிகாலன், அவளைச் சைக்கிள் ரிக்ஷாவில் வைத்துத் தன் தமக்கை சுசீலாவின் வீட்டிற்கு அழைத்துச் சென்றான். அப்பொழுது அங்கே அழகேசன் தோன்றினான். அழகியைக் காண வந்த அவன் அவளுடைய எச்சரிக்கைக் கடிதமொன்றைத்தான் காண முடிந்தது.

'அழகேசன் ஸில்க் எம்போரிய'த்தின் தலைச்சன் பிள்ளை அழகேசன். ஜெனரல் ஆஸ்பத்திரியிலிருந்து அவன் மனைவி அழகிக்கு உடல்நிலை அபாயமென்று தந்தி யொன்று வந்தது.

அழகியின் உயிர்த் தோழியான செந்தாமரை என்ற நர்ஸ் ஆஸ்பத்திரியில் அவளுக்கு ஆதரவு தந்தாள். தன் பிளவுபட்ட வாழ்க்கைப் பாலத்தைச் செந்தாமரை செப்பனிட ஆயத்தம் செய்து வருவதை அறிந்த அழகி அவளிடமிருந்தும் தப்பிச் சென்றுவிட்டாள்.

நர்ஸ் செந்தாமரை தன் சிநேகிதி அழகியைத் தேடிக்கொண்டு கரிகாலன் வீட்டுக்கு வந்தாள். அவளிடம் அழகியின் கடிதத்தை நீட்டினாள் சுசீலா. தன்னை மயக்கித் தன்னை வலுவில் திருமணம் புரிந்து கொண்ட தன் புருஷன் அழகேசன் பேரில் அழகி வழக்குத் தொடுக்கப்போகும் சேதி அறிந்து அப்படியே மலைத்து விட்டாள் செந்தாமரை.

அதே இரவு, அழகேசன் ஜவுளிக் கடையில் களவு போன விஷயமாகக் கரிகாலனையும் சந்தேகப்பட்டு, அவனைக் கைது செய்தது போலீஸ் இலாகா.

அழகி, செந்தாமரைக்கும் ஒரு கடிதம் எழுதியிருந்தாள்; கடைசியில் அழகேசனைச் சந்தித்து ஆவன செய்ய வேண்டுமென்ற முடிவுடன் மைலாப்பூருக்குப் புறப்பட்டாள்.

அப்பொழுது அழகேசனைத் தோளில் சாய்த்தவாறு வந்த அழகியைக் கண்டு திகைத்தாள் செந்தாமரை. ஆனால், அழகேசனைப் படுக்கையில் சேர்த்த மறு வினாடி, தன் அத்தான் முரளியுடன் வெளியேறி விட்டாள் அழகி!

9. "நாளை, புது நிலவு!"

அந்த இன்ப ஸ்பரிசம் அழகியின் உள்ளத்தோடு உள்ளமாகப் பரவி நின்றது; உணர்ச்சியோடு உணர்ச்சியாக ஊடுருவி நின்றது. தன்னுள் எழுந்த இந்தப் புதிய உணர்வு அவளுக்குப் புதிய அனுபவம். புதிய உலகம் ஒன்றில் காலெடுத்து வைத்திருப்பது போலவே அவளுடைய 'மனம்' அவளுக்குச் சொன்னது. அவள் நம்பினாள்; 'சரி!' என்று அவள் ஆதரித்த சமயம், 'இல்லை' என்று மறுமொழி கூறியது அவளுடைய 'மனச்சாட்சி.'

துல்லிய வெண்மை நிறப் புடவை அவள் கண்களில் பட்டுத் தெறித்தது; அவள் நடுங்கிப் போய் விட்டாள். சேலையில் பட்டுத் தெறித்தன ரத்தத் துளிகள். அவள் துடி துடித்து விட்டாள். அழகி அந்த லஸ் முனையிலேயே நின்றுகொண்டிருந்தாள். அவளது சுயநினைவு 'அழகேசன் விலாச'த்தில் போய் நின்றது. களவுபோன நினைவுகள் களம் புகுந்தன.

அழகேசனைச் சந்தித்த சம்பவத்தை அழகி எண்ணிப் பார்த்தாள். அப்போதும் அவளுக்கு அது கனவு நிகழ்ச்சி போலத்தான் பட்டது; இப்போதும் அவளுக்கு அது கனவு நிகழ்ச்சி மாதிரியே தான் தோன்றியது.

அந்தச் சம்பவம் —

அழகி அன்று காலையில் எழும்பூரில் ரயிலிலிருந்து இறங்கி வெளியேறினாள். அதே சமயம் அவளுடைய அத்தான் முரளியைச் சந்தித்தாள்; அல்ல, அவன் அவளைச் சந்தித்தான்.

"கடிதங்கள் மூலம் தூதுவிட்ட கூக்குரல் பலன் சொல்லவில்லை; ஓடோடி வந்தேன். ஆண்டவன் புண்ணியத்தில் உன்னைச் சந்திக்க முடிந்தது, அழகி!" என்றான் அவன்.

அவள் விரக்தியுடன் சிரித்தாள்.

"எழும்பூரில் அறையொன்று வாடகைக்கு எடுத்துத் தங்கி விடலாம்," என்றான் முரளி.

"இல்லை. எனக்கு ஏகப்பட்ட வேலை இருக்கிறது, அத்தான்! திருவல்லிக்கேணியில் என் தோழி பூங்குழலி இருக்கிறாள்; கோமதி இருக்கிறாள்; அல்லி இருக்கிறாள். அங்கேயே போய்க் குளித்து விட்டு நான் உடனடியாகப் புறப்பட வேண்டும்."

இரண்டெட்டில் அவள் அவனை விட்டுப் பிரிந்தாள்.

பொழுது வளர்ந்தது. அழகி தன் தோழியின் வீடு சென்று திரும்பினாள், புதுமெருகுடன். திருவல்லிக்கேணி பஸ் அவளை மவுண்ட் ரோடு முனையில் கொண்டு சேர்த்தது. இறங்கினாள். கொஞ்ச தூரம் நடந்தாள். 'ரவுண்டாணா' வந்தது. திரும்பும்போது, அவள் தன் அத்தான் முரளியைப் பார்த்து விட்டாள். மருக எண்ணியது நெஞ்சம்; ஆனால், கால்கள் மருக மறுத்து விட்டன. முரளி, "அழகி அழகி!" என்று கூப்பிட்டுக் கொண்டே எதிர்ச்சாரியிலிருந்து வந்தான். இருவரும் சந்திக்கும் சமயத்தில் பிளஷர் கார் ஒன்று அசுர வேகத்தோடு 'காரினும் கடிது' பறந்து வந்தது. சந்தித்த இருவரையும் பிரித்துவிட நினைத்தது போலும்! பாவம், விதி என்ற ஒன்று அவர்களை என்றோ பிரித்து விட்டதை அந்தக் கார் எப்படி அறிய முடியும்?

மயிரிழை தப்பினாள்; அழகியின் உயிர் தப்பியது. அதே கணம், "அழகி, அழகி!" என்ற கூப்பாடு விண்ணைச் சாடி எதிரொலித்தது. திரும்பக்கூட நாழியில்லை. அழகேசன் - அழகியின் உரிமைக்காரன் தட்டுத் தடுமாறியவாறு குறுக்கே நடந்து வந்தான். அழகி தன்னுணர்வைத் தன்வசப் படுத்திக் கொள்வதற்குள், அழகேசன் நடுத் தெருவில் மயங்கிக் கிடந்தான்;

அருகே நின்ற பிளஷர் அவனை வஞ்சம் தீர்த்துக் கொள்ள எண்ணித் தோல்வியுடன் நின்றுகொண்டிருந்தது. அழகேசனுக்குப் பிரக்ஞை வரவில்லை; ஆனால், அவனது நெற்றிமேட்டிலிருந்து குருதி வெள்ளம் மட்டும் புதுப்புனலாகப் பாய்ந்தது; ரத்தத் துளிகள் 'க்யூ' முறையை அனுஷ்டித்தன. தெரியாதவர்கள் ஓடோடி வந்தார்கள். ஆனால், தெரிந்தவளோ ஜவுளிக் கடை முகப்பிலுள்ள அழகுப் பொம்மையாக நின்றாள். ரத்த நாளங்கள் வெடித்து, அவற்றிலுள்ள ரத்தம் முழுவதும் மண்டை உச்சிக்கு ஏறிவிட்ட மாதிரி உணர்ந்தாள். மவுண்ட் ரோடின் பொதுத் தோற்றம் அவள் முன் ஆலவட்டம் சுற்றியது. தன்னைத் தானே ஒரு கணம் பார்த்துக் கொண்டாள். வெள்ளைப் புடவை, கறுப்பு ரவிக்கை—மறைவிலிருந்து தன் உயிரை யாரோ பறித்துக் கொண்ட மாதிரி அஞ்சினாள்; அயர்ந்தாள்: அலறினாள். கழுத்தில் தொங்கிய அந்தத் தாலி ஊசலாடிக் கொண்டிருந்தது. கண்கள் வடித்த கண்ணீர் துளிகள் அதற்கு நிவேதனம்!

"ஏம்மா, நீ பொம்பளை தானா? ஒனக்கு நெஞ்சே கெடையாதா?.... பாவம், யாரோ பெரிய இடத்துப் புள்ளை கணக்கிலே தோணுது. கல்லாட்டம் சும்மா நிக்கிறீயே? எங்காலும் போய் கொஞ்சம் தண்ணி கொண்டாரப்புடாது?.... நீயும் கண்ணாலம் கட்டின பொண்ணுத்தானே தோணுது?...." என்றான் பட்டிக் காட்டுக் கிழவன் ஒருவன் — அருகில் நெருங்கி நின்ற முரளியை 'ஒரு மாதிரியாக'ப் பார்த்த வண்ணம்.

மறு விநாடி, அழகி எல்லோரையும் விலக்கிக் கொண்டு அழகேசனை நெருங்கினாள். நாசியடியில் கை வைத்துப் பார்த்தாள். சுவாசம் லேசாக வந்தது. அதே சமயம் அழகேசனுடைய டிரைவர் ஓடோடி வந்தான்.

"அத்தான், ஒரு கை பிடியுங்க!" என்றாள் அழகி. முரளி உதவ வந்தான். வந்த வேகத்தில் அவள் மீது மோதிவிட்டான். அழகியின் முகத்தில் ரத்தம் பாய்ந்தது. தாலி பக்கவாட்டில் ஆடி நின்றது.

"அத்தான்....!" என்று இரைச்சல் போட்டவள், உடனேயே தன்னை ஒரு தப்படி பின்னுக்கு இழுத்துக் கொண்டாள்.

அழகியின் நெற்றியின் பாதத்தில் வியர்வைத் துளிகள் மின்னின; முரளியின் கண்களின் பாதத்தில் கண்ணீர்த் துளிகள் ஓய்வு பெற்றன.

நிமிஷங்கள் 'ஜதி' நடை பயின்றன. அழகேசன் விலாசத்தில் அழகேசனைச் சேர்த்த கடமை உணர்வு அவளுடைய நெஞ்சில் நிறைந்தது. மனத்தையும் மனச்சாட்சியையும் 'சீல்' வைத்துப் பூட்டி விட்டு வெளியேறி விட்டாள் அழகி.

அப்பொழுது மணி இரண்டு. கொல்லன் பட்டறையில் செருகப்பட்டு வெளியே எடுக்கப்பட்ட காய்ச்சிய தகட்டின் தீ நிறம் இன்னும் மங்கவில்லை; மாறவில்லை.

மைலாப்பூரின் இருதயப் பகுதியில் அவள் நின்று கொண்டிருந்தாள். எங்கோ ஓர் உலகத்தைக் கண்டு பிடித்து, அதில் தன் போக்கில் சுற்றிக் கொண்டிருந்தாள். அந்த உலகிலே அன்பு இருந்ததா? காதல் இருந்ததா? பாசம் இருந்ததா? மனிதத்தன்மை இருந்ததா? வாழ்க்கை நியதி இருந்ததா? விதி இருந்ததா? தெய்வம் இருந்ததா?— அவளுக்கே தெரியாது. சிந்திக்கும் தன்மை தடம் புரண்டு விட்டாற் போன்ற ஓர் அதிசயமான உணர்வு பிறந்தது.

"அழகி!...."

குரல் கேட்டது. அந்தக் குரலைப் 'பார்க்க' ஆசைப்பட்டாள்.

"அழகி!"

"முரளி அத்தானா?.......நீங்கள் புறப்படுங்கள்; நான் பூங்குழலியின் வீட்டுக்குப் போகிறேன். இன்

றைக்குள் கஜேந்திரனைச் சந்தித்தாக வேண்டும்; அழகேசனைப் பற்றி எனக்குத் தெரியாத ஏதோ ரகசியத்தைச் சொல்வதாகச் சொல்லியிருக்கிறார்!...."

"அந்த ரகசியத்தை நீ அறிந்து கொண்டு இனிமேல் என்ன ஆகப் போகிறது, அழகி?"

"நான் அழகேசன் பேரில் தொடுக்கவிருக்கும் வழக்குக்கு அவரைப் பற்றின துப்பு எதுவானாலுமே எனக்குப் பலம் தரும்; பலனும் தரும்........!"

"நிஜமாகத்தான் நீ கேஸ் போடப் போகிறாயா, அழகி?" என்றான் முரளி.

"ஆம்!"

அவள் பேச்சு அவனுடைய சந்தோஷத்தை 'பீட்' அடித்து விட்டுக் கோபமாக ஒலித்தது.

"பின், எதற்காக அழகேசனை காரில் கொண்டு போய்ச் சேர்த்தாய்? கடைசியில் ஏன் கண்ணீர் சொரிந்தாய்?"

"பெண் என்றால் பேய்கூட இரங்கும் என்பார்களே? ஆனால், ஒரு பெண்ணுக்கு ஒரு பேய் இரங்கத் தவறி விட்டது; நானே அந்தப் பேய்க்காக அனுதாபப்படும் பெண்ணாக நிற்க விரும்பினேன்!"

"நீ விசித்திரமான பெண்!"

"நீங்கள்கூட விசித்திரமாகத் தான் காணப்படுகிறீர்கள்?"

செயலற்று நின்றான் முரளி. அழகி தன்னிடமிருந்து நழுவிச் சென்ற சம்பவத்தை நினைத்துப் பார்த்தான்; நான்கு நாழிப்பொழுதிற்கு முன் அவளது மேனியில் எதிர்பாராமல் மோதிய போது, "அத்தான்!" என்று காளிபோலச் சத்தமிட்ட நிகழ்ச்சியையும் எண்ணிப் பார்த்தான்.

"அத்தான், நான் போய் வரட்டுமா?"

"அழகி! மறுபடியும் உன்னை என்று, எங்கே, எப்போது நான் சந்திப்பது?"

"ஏன்?" என்று ஆத்திரம் பொங்கக் கேட்டாள் அவள். அது அவனைச் சுட்டிருக்க வேண்டும்!

"அ...ழ...கி!"

"..........."

"உன்னை என்னால் புரிந்து கொள்ளவே முடியவில்லையே?"

"உங்களைக் கூடத்தான் என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை!"

முரளி மறுபேச்சாடாமல் திரும்பிச் சென்றான்.

'பாவம், அத்தான்!...அழகி தீ என்பதை முரளி அத்தான் இன்னமும் புரிந்துகொள்ளவில்லை போலிருக்கிறது!.... ம்!....' என்று தன்னுள் பேசிக்கொண்டே நடந்து கொண்டிருந்தாள் அழகி.

"அம்மா, கண்ணில்லாத கவோதி அம்மா!...காலணா, அரையணா குடுங்க, தாயி!" என்றான் ஒரு பிச்சைக்காரன்.

அழகி அவனைப் பார்த்துச் சிரித்தாள். 'கபோதி என்கிறான், ஆனால் என்னை எப்படி 'அம்மா' என்று அழைத்தான்? ஒருவேளை எனக்குக் கதைக்கு 'ப்ளாட்' தரத்தான் இப்போது இப்படிக் காட்சி அளித்தானோ?.... உலகம் வரவரக் கேட்டுப்போய் விட்டது!' என்று நெஞ்சில் நெளிந்த இவ்வரிகள், அவளுடைய இரண்டணா நாணயத்தை அவனுடைய நாணயமிழந்த தன்மைக்குப் பரிசு கொடுத்தன. அடுத்த நிமிஷம், அந்தக் கிழவன் கண்களைத் திறந்து அழகியை வணங்கினான். "நீங்க ரொம்ப நல்லவங்களாத் தோணுது; இது என் பொளைப்புங்க; இல்லாப்போனா காலணாக் காசுகூட யாரும் தரமாட்டேங்கிறாங்க. பொய்தாம்மா என்னை இத்தனை காலமா வாழ வச்சுக்கிட்டு வருது ...!"

அவன் சொன்ன 'உண்மை'யைக் கேட்டு அவள் திகைத்தாள்.

அந்தக் கிழவனின் உருவிலே அவள் இரண்டு உருவங்களைத் தரிசித்தாள்; ஒன்று அவளைப் 'பெற்ற'

தந்தை; மற்றொன்று, அவளை மருமகளாக 'ஆக்கிக் கொண்ட' மாமனார். ''கண்ணே அழகி! நீ என்னமோ எனக்கு நெருப்பு போலத் தான் தோணுகிறாய்; கெட்டதை நெருங்க விடாமக் காத்துக்கொள்கிறதுக்கும், கெட்டதைச் சுட்டுப் பொசுக்கிறதுக்கும் மாத்திரம் தான் நெருப்பு பிரயோசனப்பட வேணும், அம்மா! மற்றபடி, உன் நெருப்பு ஐஸ் கட்டி மாதிரிதானம்மா இருக்கவேணும்!'' என்று அடிக்கடி 'எச்சரித்த' அவளுடைய தகப்பனாரின் வார்த்தைகள் அவள் நெஞ்சில் எதிரொலித்தன. ''என் மகன் அழகேசன் இனிமேல் பிழைத்துவிடுவான். டாக்டர்கூடத் தேவையில்லை....கண்கண்ட இந்தத் தெய்வத்தின் துணை ஒன்றே போதும்!'' என்று வெறியுடன் பேசிய தன் மாமனார்க் கிழவரின்

பேச்சில் ஊடாடியிருந்த 'நம்பிக்கை' அவள் கண்களில் நிழலாடியது. ஆனால்....?

தூரத்தில் நிற்கப்போன 'டாக்ஸி'யைக் கை தட்டி அழைத்தாள் அழகி.

"அம்மா, நீங்க எங்கே போகணும்?"

நிமிர்ந்து பார்த்தாள் அழகி.

டாக்ஸி நின்றது: டாக்ஸி டிரைவர் நின்றான்.

'எங்கே போவது?'–அவள் குழம்பினாள்.



அப்பொழுது, "டிரைவர்! நர்ஸ் ஹாஸ்டலுக்குப் போக வேணும்.... ம்....! ஏறிக்கொள், அழகி!...." என்ற ஆணைக் குரல் கேட்டது.

நர்ஸ் செந்தாமரை, எண்ணியது நடந்துவிட்ட மகிழ்ச்சியுடன் அங்கே நின்று கொண்டிருந்தாள்.

"செந்தாமரை!..." என்று அழைத்து, அவளை அணைத்துக்கொண்டு விம்மினாள் அழகி.

செந்தாமரை பலத்த குரலில் சொன்ன சொற்களை அஞ்சல் செய்தது, பறந்துகொண்டிருந்த அந்த டாக்ஸி: "அழகி! இனி நீ தப்பவே முடியாது! நாளைப் புது நிலவு உனக்கு! ஆமாம்....!"

10. பாலைவனத்தில் சுடர் விளக்கு

'பெண் பல விதத்தில் ஆணை விடச் சிறந்தவள். உண்மையாக, தன்னலப் பற்றில்லாமல், பெருமையாக, அன்பாக, தாயாக, தாதியாக, தியாகியாக, கொடையாளியாக, பிறர் நிமித்தம் வருந்துவதற்காக, பெண்ணுடன் ஆண் ஒரு போதும் ஒத்து நிற்க மாட்டான். அவளது இருதயத்திலிருந்து ஒழுகும் அன்பும், இவ்வுலகத்தில் அவளது தொழிலாகிய உற்பத்தியும் அவளை ஆணைவிட எவ்வளவோ உயர்த்திக்காட்டுகிறது.'

பிரித்து வைத்திருந்த புத்தகத்தில் காணப்பட்ட இவ்வாக்கியங்களை ஒரு தடவைக்கு இரண்டு தடவையாகப் படித்தாள் அழகி. சற்று முன் செந்தாமரை படித்து முடித்து அதை அழகியிடம் நீட்டினாள். இப்பொழுது அழகி சிரித்துக் கொண்டே அதைத் திருப்பிக் கொடுத்தாள்.

"ஏன் அப்படிச் சிரிக்கிறாய், அழகி?"

"பெண்ணைப்பற்றி எழுதியிருக்கும் இந்த விளக்கவுரையைப் படித்ததும் சிரிப்பு வருகிறது."

"சிரிப்பதற்காக எழுதப்படவில்லையே இது?"

"சிந்திப்பதற்காக எழுதப்பட்டிருக்கிறதென்றுதானே சொல்கிறாய், செந்தாமரை?....சிந்திக்கத் தெரிந்தவர்கள் எல்லோருமே சிரிப்பார்கள்; ஆனால், சிரிப்பவர்கள் எல்லோருமே சிந்திப்பார்கள் என்று சொல்வதற்கில்லை. நான் இந்த வாழ்க்கையைப் புரிந்து கொண்டுதான் இருக்கிறேன். நானும் பெண்தானே? ஆகவே, ஒரு பெண்ணைப் பற்றியும், அவளுடைய ஆசாபாசங்களைப் பற்றியும், அவள் கொண்டிருக்கும் கனவு நனவுகளைப் பற்றியும் புரிந்து கொண்டுதான் இருக்கிறேன். ஆனால், அழகேசன் அவர்களைப் பொறுத்த மட்டில் என்னிடம் எவ்வித தியாக உணர்ச்சியோ, தயையோ, தாபமோ இருக்குமென்று நீ எதிர் பார்க்காதே! விதி பெரும் பிழை செய்து விட்டது: அதுவே விதியின் பிழையாகவும் ஆகி விட்டது. கோயிலில் உறையும் கல்லைக் கடவுளாகக் கூடக் கண்டிருக்கிறேன். ஆனால், அழகேசன் ஏனோ என்வரை வெறும் கல்லாகவே காணப்படுகிறார்! இல்லையென்றால், அவர் என்னை ஏன் இப்படிக் கொல்லாமல் கொல்ல வேண்டும்? மருந்தால் என்னை மயக்கி மணம் செய்து கொள்ள அனுமதித்த சட்டம், இப்போது என்னை மருந்து கொடுத்து மடியச்செய்யவும் அனுமதிக்குமல்லவா? இந்தப் புண்ணியத்தையாவது அவர் ஏற்றுக் கொள்ள மாட்டேனென்கிறாரே?.... அப்போதாது எனக்கு விடிவு ஏற்படுமே? மனிதத் தன்மையிழந்த பாவியாக—இருதயமற்ற அரக்கியாக உன் கண்களுக்குக் காட்சியளிக்கும் என் கதையாவது முடிந்து விடுமே?....செந்தாமரை, என்னைச் சோதிக்காதே!....இந்த மூன்று நாட்களாக என்னைக் கூண்டில் போட்டு அடைத்து விட்டது போதும்! நான் இப்பொழுதே கஜேந்திரனைச் சந்திக்கவேண்டும்; கரிகாலனையும் அவர் சகோதரி சுசீலாவையும் சந்தித்துப் பேச வேண்டும்; சுசீலாவின் கணவர் ராமலிங்கத்தை என் தரப்பு வக்கீலாக நியமித்து, அழகேசன் மீது வழக்கு பதிவு செய்தாக வேண்டும்....!"

"அழகி, இப்போதுதான் நினைவிற்கு வருகிறது. மிஸ்டர் கரிகாலன் சமீபத்தில் கைது செய்யப்பட்டிருக்கிறாராம்....!"

"என்ன, உண்மைதானா?"

"ஆமாம், உன் கணவர் அழகேசனின் ஜவுளிக்கடையில் கிட்டத்தட்ட பத்தாயிர ரூபாய் பெறுமதியுள்ள சரக்கு, ரொக்கம் முதலானவை திருட்டு போய்விட்டதாம்; அவரது சந்தேகத்திற்கு ஆளான

வர்கள் ஒரு சிலரைக் கைது செய்திருக்கிறார்கள் போலீஸ்காரர்கள். எல்லாம் ஒரே புதிர் மயம்....!''

அழகியின் விழிக் கோடியில் துயரம் தேங்கியது. திருமண விழாவின் போது தன்னைக் காத்துக்காப்பாற்றிய அந்தப் 'புனிதச் சம்பவ'த்தை எண்ணி, மன உரை கல்லில் வைத்து உரைத்துப் பார்த்தாள். மாற்றுக் குறையாத் தங்கமாகக் கரிகாலனின் அன்பு உருவம் தெரிந்தது.

அவள் அழுதாள்; அவளது நெஞ்சு அழுதது; கண்கள் அழுதன; அன்புப் பாசம் அழுதது!—கரிகாலனுக்காக!

அழகி சுவர் அலமாரியைத் துழாவினாள், சிந்தனை வசப்பட்டவளாக. ஆங்கில நாவலொன்றைப் புரட்டும் போது, அதில் ஒரு போட்டோ காணப்பட்டது. 'யார், முரளி அத்தானா?....இந்தப் படம் எப்படி, ஏன் இங்கே வந்தது?....' என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டாள். அதற்குள் தாமரை வந்து விடவே, படத்தை புத்தகத்தில் வைத்து விட்டுத் திரும்பினாள். அவள் முகத்தில் ஈரம் சொட்டியது!

"சற்று முன் பெண்ணைப் பற்றிய விளக்கம் ஒன்றை என்னிடம் காட்டினாயல்லவா? நான் கூட என் நாவலில் பெண்ணுக்கு ஒரு விளக்கம் தந்திருக்கிறேன். ஊன்றிப் படித்துப்பார், தாமரை!''

செந்தாமரை வாய்விட்டுப் படித்தாள்: 'ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள உறவை, நட்பை, அன்பை, காதலை, பாசத்தை நிர்ணயித்துக் கொள்வது அவ்விருவரின் பிணைப்பைப் பொறுத்தது; அறிமுகத்தைப் பொறுத்தது; அன்பின் அமைப்பைப் பொறுத்தது.'

"இவ்வளவு பெரிய கதையை எந்தப் பத்திரிகைக்கு அனுப்பியிருக்கிறாய்?''

"'தமிழ்த் தொண்டு' நடத்திய ஐயாயிரம் ரூபாய் நாவல் போட்டிக்கு.''

"என் அழகிக்கு மட்டும் ஐயாயிரம் ரூபாய் கிடைத்தால்?''

"திருவாளர் அழகேசன் பேரில் வழக்குத் தொடுக்க எனக்குச் செலவுக்கு உதவும்!....''

"அழகி, உனக்கு இதயமே இல்லையா?''

அன்றைக்கு அழகேசன் பங்களாவில், அரைகுறையாகக் கண்ட நளாயினியின் சித்திரம் தாமரையின் விழித்திரையில் படம் காட்டியது.

"செந்தாமரை, அந்த அழகேசனுக்கு இதயம் இருந்ததா, இருக்கிறதா, இல்லை, இனியாவது இருக்குமா?''

அகேசன் தன்னைப் பழி வாங்கிக் கொண்ட சம்பவங்கள் சலனப் படமாக ஏடு விரிந்தன.

முதல் பந்தி முடிந்து சிலர் திரும்பிக் கொண்டிருந்தார்கள். அழகியின் கையைப் பிடித்துக் கெஞ்சி அழைத்துக் கொண்டு போனாள் தாமரை. அவர்கள் சாப்பிட்டுத் திரும்பி அறைக்குள் நுழைந்ததும், அங்கே ஓர் அதிசயத்தைக் கண்டார்கள்.

"ஆ, மிஸ்டர் கரிகாலனா?''

"ஆமாம், அழகி!''

"நீங்கள்....''

"சொன்ன சொல்லைத் தொடர முடியாமல் நீங்கள் விழிப்பதன் காரணம் புரிகிறது!....நான் ஜெயிலிலிருந்து தப்பி வந்து விட்டேனோ என்று சந்தேகப்படாதீர்கள். என் அத்தான் ஒரு வக்கீல் அல்லவா? அவர் என்னை ஜாமீனில் விடுவித்தார். உங்கள் கணவர் என் மீது கொண்டுள்ள ஐயம் நீங்கும் வரை—அதாவது களவு போன சரக்கு, பணம் அத்தனையும் திரும்பக் கிடைக்கும் வரை—என் பாடு ஆபத்துத்தான்; அதோடு........''

"அப்புறம் என்ன மிஸ்டர் கரிகாலன்...?''

"கஜேந்திரன் என்பவரையும் போலீசார் சற்றுமுன் கைது செய்திருக்கிறார்கள்....''

"நிஜமாகவா? ஐயோ, சட்டம் விசித்திரமாகப் பேசுகிறதே? குற்றம் செய்தவர்களை வாழவைக்கிறது; தவறு செய்யாதவர்களைத் தண்டிக்கிறதே?''

"அப்படியென்றால், என்னை நீங்கள் நம்புகிறீர்களா?

"ஆண்டவனை நம்ப நான் இப்போதெல்லாம் ஒரு மணி நேரம் சிந்திக்க வேண்டியிருக்கிறது. ஆனால் உங்களை நான் என்றோ நம்பியவளாயிற்றே?....''

"மிஸ்டர் கஜேந்திரன்கூட....''

"அவரைப் பற்றி எனக்கு அதிகமாகத் தெரியாதே?''

"உங்கள் நிமித்தம்தான் காலையில் என்னையும் 'தமிழ்த்தொண்டு' ஆசிரியர் பரிமேலழகரையும் அவர் சந்தித்தார்.''

"அப்படியா? ஆசிரியர் பரிமேலழகரைப் பார்க்க வேண்டுமே? முடியுமா?''

"அவர்களே உங்களைப் பார்ப்பார்கள்!''

"என் பாக்கியம் அது.''

"ஆமாம். அத்தோடு உங்களுக்கு இன்னொரு பாக்கியமும் கிடைத்திருக்கிறது!''

"என்ன? பாக்கியமா?''

"உங்களுடைய 'அந்தி நிலா' நவீனத்துக்கு ஐயாயிரம் ரூபாய் பரிசு கிடைத்திருக்கிறது!''

"ஆண்டவனே, நீ நல்லவன்தான்! என் வழக்குக்கென்றுதான் இந்தப் பரிசு கிடைத்திருக்கிறது போலும்!...நிஜமாகவே அது என் பாக்கியமேதான் – வாழ்க்கையில் பாக்கியவதியாக ஆக வாய்ப்பு ஏற்படாது போனாலும்! கஜேந்திரனை நான் பார்க்க வேண்டுமென்றிருந்தேன். செந்தாமரை தடுத்து விட்டாள்!''

செந்தாமரை அவர்கள் இருவரையும் பார்த்தவாறு நின்றாள்.

"அழகேசனைப்பற்றி ஏதேதோ ரகசியங்களையெல்லாம் அவர் சொன்னார்!'' என்றான் கரிகாலன்.

"அப்படியா? தயவு செய்து எனக்குத் தெரிவிப்பீர்களா? என் நல்வாழ்வுக்கு அவை வழிகாட்ட உதவா விட்டாலும், தோண்டப்பட்டிருக்கும் தீக்குழியில் நான் விழாமலிருக்கவாவது பயன்படுமல்லவா?''

"இதோ பாருங்கள், அழகி!''

கரிகாலன் நீட்டிய அந்தப் புத்தகத்திலுள்ள புகைப் படங்களைக் கண்ட அழகி, "ஐயோ, நான் பாலைவனத்துச் சுடர் விளக்காகி விட்டேனே!'' என்று ஓலமிட்டு மயங்கிக் கீழே சாய்ந்தாள்!

(எச்சரிக்கை – வளர்கதை இது)

உங்கள் அதிருஷ்டம் 1956-57க்கு

உங்கள் பெயரும், முழு விலாசமும் கொண்ட ஒரு தபால் கார்டில் ஏதாவது ஒரு புஷ்பத்தின் பெயரை எழுதி எங்களுக்கு அனுப்புங்கள். ரூ. 1-4-0-க்கு (தபால் செலவு தனி) வரப்போகும் 12-மாதங்களுக்கு நாங்கள் உங்களுக்கு எதிர்கால பலன் எழுதி அனுப்புகிறோம். வியாபாரத்தில் லாப நஷ்டம், உத்தியோக உயர்வு, உத்தியோக மாற்றல், விவாகம், குழந்தை பிறப்பு, சுக துக்கங்கள் ஆகியவை பற்றிய விவரங்களையும், இன்னல்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் மார்க்கத்தையும் தெரிவிக்கிறோம்.

Shree Swami

SATNARAIN JYOTISH ASHRAM
(U.M.) NAKODAR (Pb.)

நல்லவர்! கெட்டவர்!

'அகிலன்'

பரலோகத்தில் தர்மராஜனுடைய இலாகா பரபரப்பாக இருந்தது. தர்மராஜன் என்றால், வேறு யார்? நான் இங்கு எமதர்மராஜனைச் சொல்லுகிறேன்.

அவர் சிம்மாசனத்தில் அலங்காரமாக அமர்ந்து யாருடைய வரவையோ ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். அருகில் சித்திராபுத்திரனாருக்கோ புள்ளிக் கணக்குப் போட்டு, மூளை குழம்பத் தொடங்கி விட்டது. எருமைக் கடா அங்கு இல்லை. புல் மேயப் போயிற்றோ, அல்லது குளம் குட்டைகளில் சேற்றைக் கலக்கப் போயிற்றோ, தெரியாது!

எதிரே மண்டபத்தில் புண்ணியம் செய்த சிலர் வரிசையில் பார்வையாளர்களாக அமர்ந்திருந்தார்கள். அவர்களுக்கு மட்டுமே அங்கு அனுமதி உண்டு.

தூதுவர்களும், தொழிலாளர்களும் சுறுசுறுப்பாகத் தங்கள் தங்கள் வேலைகளில் ஈடுபட்டிருந்தார்கள். பாவம் செய்தவர்கள், புண்ணியம் செய்தவர்கள், இரண்டும் செய்தவர்கள், இரண்டும் செய்யாதவர்கள்—இவர்களுக்கெல்லாம் அவரவர்களுக்குத் தக்கபடி அங்கே பலாபலன் கிடைத்துக் கொண்டிருந்தது.

பரலோகத்திலும் ஜனநாயக வாடை வீசத் தொடங்கியதால், முன் போன்ற பயங்கரமான தண்டனைகள் ரத்துச் செய்யப்பட்டன. எண்ணெய்க் கொப்பரையோ, கழுமரமோ, இரும்பு உலக்கையோ, மனிதர் இழுக்கும் செக்கோ, இப்போது அங்கு கிடையாது. புண்ணியாத்மாக்களுக்குப் புதுப் புது வித

6

மான பரிசுத் திட்டங்கள்; பாபாத்மாக்களுக்கும் புதுமையான தண்டனைகள். ஒரு பக்கம் நரகம்; மறு பக்கம் சொர்க்கம்.

தமிழ் நாட்டின் தலை நகரமான சென்னைப் பட்டணத்துப் பிரமுகர் ஒருவரைத்தான் நம்முடைய தர்மராஜன் அப்படி அக்கறையுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

வரப்போகிறவர் பெரும் புள்ளி. பிரபலமான மனிதர். சிறந்த சிவ பக்தர். சிவனை அப்படியே வேருடன் பிடுங்கி நெஞ்சில் பதிய வைத்துக் கொண்டவர். அந்தக் கனவானைப் பற்றிச் சிவபெருமானே தர்மராஜனிடம் ஒருமுறை நேரில் சொல்லியிருக்கிறார். அத்துடன் ஒழுக்கசீலர்; ஆசார அனுஷ்டானங்களில் தவறாதவர்; தம்முடைய மனைவியைத் தவிர வேறு எந்தப் பெண்ணையும் அவர் ஏறெடுத்துக் கூடப் பார்த்ததில்லை. கற்பென்றால் அத்தனை கற்பு!

அவருக்கு இகலோகத்தில் காலம் முடிந்துவிட்டது. தர்மராஜன் தம்முடைய விசேஷத் தூதுவர் இருவரை அனுப்பி அவரைப் பரலோகத்துக்கு அழைத்துவரச் செய்தார்.

பிரமுகர் வந்து சேர்ந்தார். ஐம்பது, ஐம்பத்தைந்து வயதிருக்கும். பரந்த நெற்றியில் பளிச்சென்ற விபூதிப் பூச்சு. இரண்டு புருவங்களுக்கு மத்தியில் அழகான குங்குமப் பொட்டு. அங்கே சக்தியும் சிவனும் ஒன்றாய்க் குடியிருப்பது போல் தோன்றியது. சலவை கலையாத வெள்ளைச் சட்டை, வேஷ்டி, அங்கவஸ்திரத்துடன் காட்சியளித்தார்.

புன்சிரிப்புடன் திருச்சபைக்கு வணக்கம் தெரிவித்தார் பிரமுகர்.

''வாருங்கள்!'' என்று அழைத்துவிட்டு தர்மராஜன் சித்திர புத்திரனாரின் பக்கம் திரும்பினார்: ''என்ன, இவருக்கு எங்கே இடம் ஒதுக்கியிருக்கிறீர்கள்?''

சித்திர புத்திரனாரின் மூளை ஏற்கனவே குழம்பிப் போயிருந்தது; ஏடுகளிலிருந்த தம் பார்வையைத் திருப்பி ஏறிட்டுப் பார்த்தார். தர்மராஜன் பிரமுகரை மரியாதையுடன் அழைத்ததையும் கவனித்தார்.

''வேறு எங்கே இருக்கப் போகிறது? சொர்க்கம்தான்! இன்னும் நான் சரியாகப் பார்த்துச்சொல்ல வேண்டும்.''

''அப்படியானால் இங்கேயே சற்று உட்காருங்கள். புண்ணியம் செய்தவர்கள் உட்காரக் கூடிய சபை இது. மெதுவாக அவர் பார்த்துச் சொல்லட்டும்.''

சொர்க்கமே கிடைத்துவிட்ட பெருமையில் பிரமுகர் அங்கு ஓர் ஆசனத்தில் அமர்ந்தார்.

அடுத்தாற்போல் எலும்புந் தோலுமாய்க் காட்சியளித்த ஒரு கிழவரை அங்கே அழைத்துக் கொண்டுவந்தார்கள் தூதுவர்கள். தாடி, மீசை, தொள தொள வென்று தொங்கும் சட்டை, நாலு முழ வேஷ்டி. கிழவரின் கண்களில் மட்டும் அலாதியான ஒளி சுடர் விட்டது. உணர்ச்சி நிறைந்த பெரிய உதடுகள்; மற்றபடி கன்னங்கள், கைகால்கள் எல்லாம் வற்றலாய்ச் சுண்டிக் கிடந்தன.

அவர் ஒரு கவிஞராம்; தமிழ் நாட்டுக் கவி. அலட்சியமாகத் தம் கண்களை ஒருமுறை அலைய விட்டார். பிறகு சித்திரகுப்தனின் பக்கம் திரும்பினார்.

சபையில் அமர்ந்திருந்த பெரியோர்களில் சிலர் கவிஞரைச் சுட்டிக் காட்டித் தங்களுக்குள் ஏதோ பேசிக்கொண்டனர். இன்னும் சிலர், அவருக்கு எப்படித் தங்கள் மரியாதையைச் செலுத்துவது என்று தெரியாமல் தவித்துக் கொண்டிருந்தனர். அவரை அங்கு உட்காரச் சொல்வதென்றால் அதற்குத் தர்மராஜனின் உத்தரவு வேண்டும்.

கவிஞர் காத்துக்கொண்டு நின்றார். முன்னால் வந்த பிரமுகரின் ஏடு இதற்குள் சித்திரபுத்திரனால் படிக்கப்பட்டது. பிரமுகரின் ஏடு சொல்லியது :

"நீண்டநாள் இவர் மதுபானக் குத்தகை எடுத்து வெற்றிகரமாக நடத்திக்கொண்டு வந்தார். மதுவிலக்குச் சட்டம் அமுலுக்கு வந்து அந்தத் தொழில் மறைமுகமான குடிசைத்தொழிலாக மாறியபின்பு இவர் குறுக்கெழுத்துப் போட்டி தொடங்கினார். அதிலும் அரசாங்கம் குறுக்கிட்டது. அதன் பிறகு பத்திரிகை முதலாளியாக மாறினார். மஞ்சள் இலக்கியப் பத்திரிகை ஒன்றின் மூலம் நிறையச் சம்பாதித்தார். கீழ்த்தர உணர்ச்சிகளைத் தூண்டக்கூடிய பத்திரிகை.

"ஆனால் மதுபானக்கடை வைத்தவர், ஒரு சொட்டுக்கூடத் தாம் அருந்தியதில்லை! எந்தக் குறுக்கெழுத்துப் போட்டியிலும் இவர் தாம் நேரிடையாகக் கலந்து கொண்டது கிடையாது. இவருடைய பத்திரிகையில் அடிககடி ஒழுக்கங்கெட்ட ஆண் - பெண்களைப் பார்க்கலாமே தவிர, இவர் குணத்தில் அசல் பத்தரை மாற்றுத் தங்கம்! இந்தப் பிரமுகர் தம் தொழில்களின் மூலம் நாட்டில் குடி, சூது, விபசாரம் இவற்றைப் பெருக்கினார். ஆனால் இவருடைய வாழ்க்கையில் அவை ஒட்டவில்லை; நல்ல மனிதர்!"

தர்மராஜன் யோசனையில் ஆழ்ந்தார். சித்திர புத்திரனார் கவிஞரின் ஏட்டைப் புரட்டினார்.

"இவர் அருமை அருமையான சிரஞ்சீவிக் கவிதைகளை எழுதியிருக்கிறார். மனித சமுதாயம் உய்வதற்கு வேண்டிய அரும் பெரும் உண்மைகளையெல்லாம் இவர்

அழகிற்கும் கவர்ச்சிக்கும்

நறுமணமுள்ள

ஸோபா ஸ்னோ

உங்கள் அழகை அதிகரித்து, பாதுகாக்கவும் செய்கிறது

SHOBHA COSMETICS,
3247, Ediga – Mysore.

கூடைக்காரன்: ஒன் வீட்டைத் தேடி வந்தேனே? நீ இப்படி வெலையை ஒரேயடியாகக் கொறைக்கலாமா?

வீட்டுக்காரர்: நான் உன் கிட்டே வாடிக்கையாக வாங்குகிறேனே? நீ இப்படி ஒரேடியாக விலையை அதிகமாக்கிச் சொல்லலாமா?

கவிதைகளில் காணலாம். பரந்த மனமும், நிறைந்த அன்பும் இவரிடம் உண்டு. ஆனால் இவருடைய எழுத்துக்கும், வாழ்க்கைக்கும் தொடர்பே இல்லை. அளவற்ற உணர்ச்சிக்குத் தம்மை இலக்காக்கிக் கொண்டவர். பெண் பித்தர்; குடிகாரர். எல்லாக் கெட்ட பழக்கங்களும் இவரிடம் உண்டு. மதிக்கப்படவேண்டிய இவர், மக்களின் வெறுப்புக்குள்ளானார்.''

கவிஞரின் கண்களுக்கு அப்போது தன் அருகில் அமர்ந்திருந்த பத்திரிகை முதலாளி தட்டுப்பட்டார். மீசை துடித்தது கவிஞருக்கு; திருச்சபை என்பதையும் மறந்து காறித்துப்பினார்!

திடீரென்று அங்கு பெண் ஒருத்தி அலங்கோலமான ஆடை அலங்காரத்துடன் இழுத்து வரப்பட்டாள். மித மிஞ்சிய செல்வத் திமிரால் சோரம் போன நடுத்தர வயத்துக்காரி. அவள் கையில் பிரமுகரின் பத்திரிகை காணப்பட்டது.

''இவள் வாழ்க்கை மிகக்கேவலமானது. ஒரு குறையும் இல்லாதிருந்தும், பல முறை வழுக்கி விழுந்தவள். கவிஞரின் வாழ்க்கையை விடப் படுமோசம்!'' என்றார் சித்திரபுத்திரனார்.

பெண் பிள்ளைக்கு ஆத்திரம் வந்து விட்டது; எல்லோரையும் சுற்றிப் பார்த்தாள். பத்திரிகைப் பிரமுகரைக் கண்டவுடன் அவளுக்கு அடக்க முடியாத கோபம்.

''எனக்கு வழுக்குப் பாறை கொடுத்து உதவிய புண்ணியவான் இதோ இருக்கிறாரே!''

பிறகு வெறியுடன் கையிலிருந்த பத்திரிகையைத் தர்மராஜனின் முகத்தில் வீசி யெறிந்தாள்!

''ஐயா, தர்மப் பிரபுவே! உம்முடைய மகளும், மனைவியும் இந்தப் பத்திரிகையைச் சேர்ந்தாற் போல் ஓராண்டு படித்தால் என்னையும் மிஞ்சி விடுவார்கள். நான் இதற்கு ஆயுள் சந்தா கட்டியவள்!''

தர்மராஜனின் நெஞ்சில் சுளீரென்று சவுக்கடி.

பிரமுகர் தம் ஆசனத்திலிருந்து எழுந்தார். ஆர்வத்துடன் பேசினார்:

''பரலோகச் சந்தா வைக்க நான் மறந்து விட்டேன். நம்முடைய பத்திரிகை இங்கே வர முடியுமோ? தபால் கட்டணம் எவ்வளவு? கூடுமானால் உனக்கு இங்கேயும் அனுப்ப ஏற்பாடு செய்கிறேன்.''

தர்மராஜன் அதைப் பிரித்து ஒரு கதையைப் படித்தார். மருமகன் மாமியாரைக் காதலிக்கும் ஓர் அபூர்வக் கற்பனை! அதற்கொரு அட்டைப் படம்!

''இன்னும் யாரெல்லாம் படித்திருக்கிறார்கள்?'' என்று கேட்டார் தர்மராஜன்.

பின்னால் நரக லோகத்திலிருந்து குரல்கள் கிளம்பின: ''நாங்கள்.... நாங்கள்......நாங்கள்.......!''

தர்மராஜனின் கண்களுக்கு எதிரே சபையில் வேறு ஒரு நூலைப் படித்துக்கொண்டு உட்கார்ந்திருக்கும் ஒரு புண்ணியவானின் உருவம் தென்பட்டது.

"நீங்கள் எதைப் படிக்கிறீர்கள்?"

"இந்தக் கவிஞரின் எழுத்துக்களை!"

"யாரெல்லாம் இவர் கவிதைகளைப் படிக்கிறீர்கள்?"

சபையில் பலர் எழுந்தார்கள்; ஒருவர் மட்டும், "எனக்குக் கவிஞரின் வாழ்க்கை தெரியாது; அவர் எழுத்துக்களை மட்டும் படித்து உய்ந்தவன் நான்!" என்றார்.

"நாங்களும் அப்படியே!" என்றார்கள் ஆன்றோர்கள்.

அதையும் வாங்கிப் புரட்டினர் தர்மராஜன்.

'உலகம் அறிவோடு, அன்போடு, அறத்தோடு வாழவேண்டும்' என்று கவிஞர் கதறிய கதறல்கள் அங்கு உணர்ச்சிப் பெருக்கோடு குமுறிக் கொண்டிருந்தன.

தர்மராஜன் நீண்ட நேரச் சிந்தனைக்குப் பின் தீர்ப்புக் கூறினர்:

"பத்திரிகைப் பிரமுகரே! நீர் எழுந்து அந்தப் பெண்ணோடு நரகத்திற்குச் செல்லும். கவிஞரே! நீர் அங்கு உட்காரலாம்."

பிரமுகர் திகைத்தார்! கவிஞரும் திகைத்தார்!

தர்மன் கூறினர்:

"நீர் மட்டிலும் நன்றாக வாழ்ந்தீர்; அப்படி வாழ்வதற்காக உலகத்தைக் கெடுத்தீர். சொந்த வாழ்க்கையில் உம்முடைய தூய்மைக்கு அங்கேயே பலன் கிடைத்துவிட்டது. பெரிய மனிதப் போர்வையில் நீர் நடமாட முடிந்ததல்லவா? இது ஆத்மாவின் உலகம். உம்மால் குடித்து, சூதாடி, ஒழுக்கங்கெட்டுப் போனவர்களுடன் இனி நீர் வாழப்போகிறீர்....! யாரது, இவரை இழுத்துச் செல்லுங்கள்....!"

"அதோ போகிறாரே, அவர்தான் எங்கள் ஊருக்கே பெரிய மனிதர்....!"

"ஹூம், அதுதான் ஆளைப் பார்த்தாலே தெரிகிறதே!...."

கவிஞர் உட்காராமல் தயங்கினர்:

"சூழ்நிலையை நீர் கெடுக்கவில்லை; அதனால் நீர் கெட்டுப் போனீர். உம்முடைய செயல்களுக்குப் பலனாகத்தான் நீர் மண்ணுலகத்திலேயே வறுமை, நோய், துன்பம் இவ்வளவையும் அனுபவித்து விட்டீரே! உம்முடைய ஆத்மா பரிசுத்தமானது. அதைப் பாதுகாத்துக் கவிதையில் வடித்து உலகுக்குக் கொடுத்து விட்டீர். நேற்றுவரை உம்மீது கல்லெறிந்தவர்கள் நாளையிலிருந்து அங்கே பூமாரி பொழியப் போகிறார்கள். உடல் செய்த பாவம் உடலுடன் மறைந்துவிட்டது. இனி நீர் மண்ணிலும், விண்ணிலும் அமரர்!"

கவிஞர் தமக்குரிய இடத்தில் அமர்ந்தார்.

தர்மராஜனின் முடிவுரை தொடங்கியது:

"நேருக்கு மாறான இரண்டு மனிதர்கள்! உலகத்தைக் கெடுத்து, தம் உற்றம்–சுற்றம் மட்டும் வாழ நினைக்கும் ஒருவர்; உலகம் வாழ்வதற்காகத் தம்மையே அழித்துக் கொண்ட மற்றொருவர். நல்லவர், கெட்டவர் யாரென்று முடிவு செய்வதில் நமக்கே இத்தனை மயக்கம் ஏற்படுகிறதே? பாவம்! மண்ணுலகத்தவர் என்ன செய்வார்கள்?" ★

பட உலகம்

விமரிசனம் : 'பைரவி'

மர்ம வீரன்

ராஜா ராணிக் கதைகளுக்கு நம் தமிழ் நாட்டில் பஞ்சமில்லை; அதே மாதிரிதான் மேற்படி கதைகளுக்கு நம் தமிழ்த் திரையுலகிலும் குறைச்சல் இல்லை. ராஜா ராணிக் கதை என்ருல், என்ன என்றுதான் உங்களுக்குத் தெரியுமே! ஒரு நடனப் பெண்; அதற்கு முன்ருல் ராஜ்யத்திற்குப் போட்டாபோட்டி; அதற்குப் பின்ருல் வில்லனின் சதித் திட்டங்கள்!—ஆமாம்; அவ்வளவேதான்!

கதையின் உயிர் மர்ம வீரன். திரு ஸ்ரீராம் பொறுப்பு வாய்ந்த அந்தப் பாத்திரத்தை ஏற்றிருக்கிருர். அயல் நாடு சென்றிருந்த மகேந்திரன் பைத்தியமாக மாறும் கட்டங்களில் இயற்கையாக நடித்திருக்கிருர் இவர். திரைக் கதையின் கதாநாயகனுகப் பெயரிடப்பட்டிருக்கும் மர்ம வீரனுக வரும் கட்டங்களில் முகமூடி முதலிய வேஷப் பொருத்தம் எடுப்பாக அமைந்திருக்கிறது. ஆனால், நடிப்பு சோபிக்கவில்லை. உணர்ச்சிமிக்க வசனங்களை ஒப்புவிக்கவேண்டிய பகுதிகள் பல இருந்தும், அவற்றைச் சரியாகப் பயன் படுத்திக் கொள்ளவில்லை; ரசிக மகாஜனங்களின் கைதட்டுதலுக்கும் வேலை மிச்சம்.

விஜயா கொன்றை நாட்டுக் கோமகள். குமாரி வைஜயந்திமாலாவிற்கு நீண்ட நாட்கள் இடைவேளை தந்து, மீண்டும் தமிழ்ப் படத்தில் பார்க்கிருேம். நம்முடைய ஆவல் சரிபாதிதான் நிறைவேறுகிறது. திரைக் கதை யமைப்பில் இளவரசிக்கும் உயிர்ப்புள்ள கட்டங்களை அமைத்துக் கொடுத்திருக்கலாம். என்னவோ, வைஜயந்திமாலாவின் நடனங்கள்கூட எடுப்பாக அமையவில்லை; அமைக்கப்படவில்லை.

திருமதி எம். என். ராஜம் பொன்னியாக வருகிருர். ஆடிப் பாடிப் பேசித் தன் பெயரை நிலைக்கச் செய்துவிட்டு ஓடிவிடுகின்ருர். திருமதி ராஜசுலோசனுவின் வேலை கொஞ்சமென்ருலும், குறை சொல்ல முடியாது. திரு நாகையாவின் பாகமும் அப்படித்தான்!

படம் திரையிடப்படுவதற்கு முன்னரே, மர்ம வீரனின் புதுமுறைக் கத்திச் சண்டைகளைப் பற்றிப் பரபரப்புடன் பேசப்பட்டது. படத்தில் அவை கண்ணைப் பறித்து விடுகின்றன; நம் பொறுமையையும் பறித்து விடுகின்றன.

கதை, வசனம் திரு ஏ. எல். நாராயணனுடையது. கதையில் உயிர் இல்லை; வசனத்தில் உயிர் இருக்கிறது. ராஜசுலோசனுவிடமிருந்து ரகசியக் கடிதத்தை எடுத்து, அதை சந்திரபாபு நின்று நிதானமாகப் படித்து, பிறகு அதைக் கழுதையாருக்கு உணவாக்கும் கட்டம் ரசிக்கத் தக்கதாய்—சிரிக்கத்தக்கதாய் உள்ளது.

'ஒற்றுமையில் ஓங்கி நின்ற சக்தியாலே', 'பவளநாட்டு எல்லையிலே' ஆகிய இரண்டு பாடல்களும் கேட்க இனிமையாகவும் சுவையாகவும் இருக்கின்றன.

டைரக்டர் திரு டி. ஆர். ரகுநாத் வழக்கம் போலவே நன்கு உழைத்திருக்கிருர். ஆனால், உழைப்பின் பயனுக 'மர்ம வீரன்' அமையவில்லை...!

நடன விருந்து

முன்னணி நட்சத்திரம் திருமதி ராஜாசுலோசனு அந்த நடன நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார். நடன விருந்தில் மூன்று 'செட்' சகோதரிகள் பங்கு கொண்டனர்.

சேலம் சகோதரிகள், பேபிகள் கஸ்தூரி–சாந்தா, சின்னஞ்சிறு குழந்தைகள் தேவயானி, பிரேமா– இந்த அறுவரும் வகை வகையான நடனங்களை ஆடினார்கள். குறிப்பாக, தேவயானி, பிரேமா என்ற சிறு குழந்தைகள் ரசிகர்களின் பேராதரவைப் பெற்றனர். நடன ஆசிரியர் திரு முருகப்பாவுக்கும், இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த திரு எஸ். எஸ். நடராஜனுக்கும் மஹிலா சபையார் நன்றி தெரிவித்தார்கள்.

நாடக உலகம் :

ரஸ்புடீன்

நாஞ்சில் நாடகக் கலா நிலையம் சமர்ப்பித்திருக்கும் 'ரஸ்புடீன்' நாடகம் மேலைநாட்டுச் சரக்கு. கயவனின் வஞ்சகச்சூழ்ச்சிகள், பிரபுக்களின் பித்தலாட்டங்கள், ஆண்டவன் பிரதி நிதி என்ற போர்வையில் அட்டூழியங்கள், காதல்ப் புதிர் விளையாட்டுக்கள்–ரஸ்புடீன் கதை இத்தகைய கிளை நதிகளின் சங்கமத் தலம். ரஸ்புடீனாக திரு ராம் சிங் திறம்பட நடித்திருக்கிறார். காதரைன் பகுதி சிக்கல் மிக்கது. குமாரி மீனாட்சியின் நடிப்பும் நேர்த்தியாகயிருந்தது.

இந்த நாடகக் குழுவினர், நம் நாட்டுக்குத் தக்க முறையில்– நம் நாட்டுக்குப் பயன் விளைக்கும் வகையில் நாடகங்களை அரங்கேற்றினால் சிறப்பாகயிருக்கும்!

இலங்கேஸ்வரன்

நாஸ்திகத்திற்கு நல்ல சூடு கொடுக்கும் விதத்தில் 'இலங்கேஸ்வரன்' அறிமுகப் படுத்தப் படுகிறான், இந்நாடகத்தில். இலங்கை மன்னன் நாம் ஆச்சரியப்படும்படியாகவும், பின்னர் நம் அனுதாபத்திற்குரியவனாகவும் சித்திரிக்கப்பட்டிருக்கிறான். இராவணன் தன் மகள் சீதையின் பிரிவில் ஏங்கும் கட்டத்திலும், பின்னர் அவன் சொன்ன ஒரு பொய் விளைத்த கேடுகளினால் அவன் நெஞ்சு நெக்குருகும் சந்தர்ப்பங்களிலும், பிறகு, அவனுடைய பாசமே அவன் மனத்தை எரிமலையாக்கும் கட்டத்திலும் இலங்கேஸ்வரன் நடிப்பு அதி அற்புதமாக அமைந்திருந்தது. திரைஉலக நட்சத்திரம் திரு மனோஹர் அவர்கள் மிகச் சிறப்பாக நடித்தார். அவர் இதுவரை திரையில் தோன்றாத ஒரு புத்தம் புதிய பாத்திரம் இது; முழு வெற்றி பெற்று விட்டார் என்றே சொல்லவேண்டும். 'ராமாயணம்' வருகிறது. இதன் அமைப்பிற்கு உதவும் நடிக நடிகையர்களும் உணர்ந்து நடித்தனர். பல வர்ணத் திரைப்படம் பார்ப்பது போன்ற ஆனந்தத்தை உண்டாக்கியது காட்சி ஜோடனைகள். நாடக ஆசிரியர் திரு மூர்த்தி சிறப்பாகத் தன் பணியை முடித்திருந்தார். சிலம்புச்செல்வர் திரு ம. பொ. சி. அவர்கள் நாடகத்திற்குத் தலைமை வகித்துப் பாராட்டினார். நேஷனல் தியேட்டர்ஸாரின் உரிமையாளர் திரு மனோஹருக்கு நம் பாராட்டுதல்கள். ★

காதல் கண்ணாமூச்சி ஆடுகிறது!

— புதுமைப்பித்தன்

பண்டரிபாய்



மாறுவேடப் போட்டியல்ல!—எம். ஜி. ஆர்.
— தாய்க்குப்பின் தாரம்

ஆமாம்; அந்தச் சம்பவத்தை என் வாழ்நாளில் ஒரு வினாடிகூட மறந்திருக்க முடியாது. ஏனென்றால், அதுதான் என்னை வாழவைத்த நிகழ்ச்சி. ஆனால், இந்த ஆனந்தத் திருப்பம் ஏற்படுவதற்கு முன்னால் நடந்த அந்த நிகழ்ச்சியை இப்போது நினைத்தாலும் கண்கள் கலங்குகின்றன.

சின்ன வயசிலிருந்தே எனக்கு நடிப்புக் கலையில் ஆர்வம் இருந்து வந்தது. அந்த ஆர்வம் வளரத் தூண்டியவர் நகைச்சுவை நடிகர் ஸ்ரீ பி. டி. சம்பந்தம் அவர்கள். இவர்தான் எனக்குத் தமிழ் கற்றுக் கொடுத்தார். இரண்டு வருஷங்கள் ஓடின.

'வாழ்க்கை'யில் மீனாட்சி என்ற கதாபாத்திரத்திற்கு—அதாவது, நீங்கள் படத்தில் பார்த்த சகோதரி எம். எஸ். திரௌபதை நடித்த அதே பாத்திரத்திற்கு நான் தேர்வு பெற்றேன். ஆனால் என் பெயரை திடுதிப்பென்று நீக்கிவிட்டதாக மறுநாள் அறிந்தேன்.

என் வேதனையைக் கண்ட என் தகப்பனார், ''பண்டரி, நம் குல தெய்வமான மஞ்சுநாத ஸ்வாமியை வேண்டிக் கொண்டிருக்கிறேன்; உனக்கு வெற்றி தேடித்தர உதவிய அதே தெய்வம் ஏமாற்றியதைக் கண்டு வருத்தப் படாதே; வெகு சிக்கிரமே உன் ஆசை நிறைவேறும்!'' என்றார்.

அடுத்த சில வாரங்கள் கழித்து, ஸ்ரீ ஏ. வி. எம். எனக்கு அழைப்பு அனுப்பியிருந்தார். 'பஹார்' (ஹிந்தி வாழ்க்கை) படத்தில் பத்மினி என்ற பண்டரிபாயை நீங்கள் அதற்குள் மறந்திருக்க மாட்டீர்களென்றே நான் நம்புகிறேன்! ○

கண்டறியாதன கண்டேன்!

பி. கே. சரஸ்வதி

அப்போதெல்லாம் படவுலகக் கடவுளைக் கண்டால் எனக்கு ஒரே வியப்பு! படத்தில் வரும் 'காளி' 'தேவி', 'தேவகன்னி' முதலிய விந்தைச் சொரூபங்களைக் காணும் போதெல்லாம், அவர்கள் நேராகத் தேவலோகத்திலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறவர்களாக்கும் என்று நினைத்துக் கொள்வேன்.

ஆனால், பின்புதான் — பல ஆண்டுகள் கழித்துதான் — அந்தக் 'குட்டு' வெளிப்பட்டது.

சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்பு எனது படவுலகப் பிரவேசம் துவங்கியது. நான் நடித்த முதல் படம் 'திருமிழிசை ஆழ்வார்'. அந்தப் படத்தில் எனக்குக் கிடைத்த பாத்திரம் என்ன தெரியுமா? — 'தேவகன்னி!'

ஆமாம், எந்தத் தேவகன்னிகைகளைத் திரையில் கண்டு மகிழ்ந்து, வியந்தேனே, அந்தத் தேவகன்னியாகவே என்னையே ஆகச் சொன்னார்கள் படாதிபதிகள்! உடனேயே வியப்போடு அதற்குச் சம்மதித்தேன். 'தேவலோகம் எங்கே இருக்கிறது?' என்று அவர்களை நான் கேட்டு வைத்தேன் — அன்றைக்கே.

உடனே டைரெக்டர் ஒரு 'செட்'டிற்குள் என்னை அழைத்துச் சென்று அங்கு அமைக்கப்பட்டிருந்த அந்தக் காகித உலகத்தைச் சுட்டிக் காட்டினார். கண்டேன்; வியப்பு என்னைச் சிலை ஆக்கியது.

அதுவரை என்னைத் திணற அடித்துக் கொண்டிருந்த அந்தப் புதிய — விசித்திரமான — 'கண்டறியாத காட்சி'யைக் கண்டேன்!

"இதுதானா தேவலோகம்?" என்று என் உதடுகள் என்னை அறியாமல் முணுமுணுத்தன. ○

துருப்புச் சீட்டு அகப்பட்டுவிட்டதோ?

— பாசவலை



பன்மொழிப்புலவர்

பேட்டிக் கட்டுரை :

பூவை எஸ். ஆறுமுகம்

அறிமுகமல்ல – ஆரம்பம்

மேலை நாட்டுப் 'பைத்தியக்காரன்' ஒருவன் சொன்ன 'பொன்மொழி' இது: "எவன் ஒருவன் தனிமையில் ஈடுபாடு கொண்டு மகிழ்ச்சி யடைகிறானோ, அவன் ஒன்று பயங்கரமான மிருகமாக இருக்கவேண்டும்; இல்லையேல், அவன் கடவுளாக இருக்க வேண்டும்!" – வாக்கியத்தின் முடிவில் 'விழுந்திருக்கின்ற' ஆச்சரியக் குறிக்குப் பொருள் இல்லாமல் இல்லை! – நான் இங்கேயும் ஓர் அதிசயக் குறியைப் போட வேண்டியவனாக ஆகிறேன். காரணம்: தனிமையில் புளகிதமுறுபவன் பயங்கர மிருகமாக இருக்க முடியாது; அவன் படைப்புத் தெய்வமாகவும் ஆக வேண்டாம். ஆனால், அந்த ஒருவன் – ஏன், அந்த ஒரு பைத்தியக்காரன், எங்கள் 'இனத்தை'ச் சேர்ந்தவனாகத்தான் இருப்பான்; இருக்கவேண்டும். அவன் தான் இரண்டாவது பிரம்மா. அந்த அவனைப் பற்றிச் சொன்னவனைப் பைத்தியம் என்றேன். சொன்னவன் யார் தெரியுமா? – ஆமாம்; அவன்தான் எழுத்தாளன் – இரண்டாவது கடவுள்!

பன்மொழிப் புலவர் திரு கா. அப்பாத்துரை அவர்களை என் பாணியில் 'இரண்டாவது கடவுள்' என்று சொல்லுவதைவிட, சிறந்த இலக்கிய எழுத்தாளர், புகழ் பெற்ற நூலாசிரியர், நல்ல சிந்தனையாளர், போற்றுதற்குரிய பேச்சாளர், பன்மொழிப் புலவர், மதிப்பிற்குரிய அறிஞர் என்ற அளவில் என் எண்ணங்களைச் சித்திரிக்கத் தொடங்குகின்றேன்.

மாண்டெய்ன் (Montaigne) என்ற எழுத்தாளர்தான் மேற்குப் பகுதிகளிலேயே முதன் முதலாகக் கட்டுரை எழுதியவர் என்று சொல்லப்படுகிறது. தமிழகத்தில் கட்டுரையின் பிறப்பு வளர்ப்பிற்கு 'ஜாதகம்' கணிக்க நம்மால் முடியாது என்றாலும், தமிழ்த்தென்றல் திரு வி. க., மறைமலையடிகள் போன்ற தமிழார்வலர்களின் கட்டுரைகள் சிறப்பான இலக்கிய வடிவம் பெற்றுத் திகழ்ந்தன என்பதை மட்டும் இங்கே நான் குறிப்பிட வேண்டும்.

இப்பெரியார்களின் பெயர்களையடுத்து, இந்தத் தலைமுறையில் வாழ்ந்து கொண்டிருக்கும் அறிஞர்கள் ஒரு சிலரின் பெயர்களையும் எண்ணிப் பார்க்கிறேன். திரு அப்பாத்துரை அவர்கள் அந்த ஒரு சிலருள் ஒருவராக மட்டுமல்லாமல், அவர்களிடையே குறிப்பிடத்தக்க அறிவுக் களஞ்சியமாகவும் திகழ்கிறார். அவர் இதுவரை ஏறத்தாழ நூற்றைம்பது புத்தகங்களுக்கு மேல் எழுதியிருக்கிறார்; மாணவர் உலகுக்குப் பயனுள்ள பேராசிரியர் அவர். நடமாடும் ஒரு நூல் நிலையம் என்றும், நடமாடாத ஓர் அகராதி யென்றும்

கா. அப்பாத்துரை

குறிப்பிட விரும்புகிறேன். திரிசங்கு சுவர்க்கத்திலிருக்கிற ஆங்கிலம், குழப்பம் விளைவிக்கும் வேண்டாத பிள்ளையாகக் கருதப்படும் ஹிந்தி, முதலையுண்ட பாலனை அழைத்துப் பீடு பெற்ற கன்னித் தண்டமிழ், கவின் மலையாளம், ஆரிய – திராவிடப் பிரச்சினைக்கு ஒரு நினைவுச் சின்னமாக உள்ள சம்ஸ்கிருதம் – பாணினிக்கு வகுத்தருளப் பெற்ற வடமொழி ஆகிய மொழிகளிலே இவர் தேர்ந்த புலமையும் சிறந்த ஆற்றலும் உடையவர். மேற்சொன்ன மொழிகள் தவிர, இலத்தீனம், பிரெஞ்சு, ஜெர்மன் போன்ற மொழிகளிலும் கணிசமான அறிவு பெற்றவர். பன்மொழிப் புலவர் என்றால், இருவரை நாம் ஞாபகப்படுத்திக் கொள்ளுவது வழக்கம். அவர்களில் ஒருவர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார்; இரண்டாமவர் அப்பாத்துரையார்.

'கடவுளைப் படைத்த மனிதன்!'– விசித்திரமான தலைப்பாகத் தோன்றுவதில் குற்றம் கிடையாது. ஆனால், ஆசிரியரது கொள்கை வகுக்கும் கோட்டில் நின்று இத்தலைப்பை ஆராய்ந்தால் தான் குற்றம். ஏனெனில், மேற்படி மகுடமிட்ட தொடரில், தன் சிந்தனை சீர் தந்த கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்.

'....தன்னை ஒத்த ஒன்றைத் தானே படைப்பது என்பது எவ்வளவு அருமை? தன்னை ஒத்த பலவற்றைப் படைத்து, ஒன்று பல ஆக்குவது என்பது இன்னும் எவ்வளவு அருமை? இந்த இரண்டு ஆற்றல்களும் உயிரிலா இயற்கைக்கு இல்லாத, உயிருக்கே உரிய தனிப் படைப்பாற்றல்கள். கடவுளுக்குக்கூட இவ்விரு ஆற்றல்களும் இருப்பதாகப் பல அறிஞர்கள் ஒத்துக் கொள்ளமாட்டார்கள் என்பது இங்கே ஊன்றிக் கவனிக்கத்தக்கது.'

கா. அ. அவர்கள் எழுதியது 'ஐக்கிய நாடுகளின் அமைப்பு' என்ற நூல். இதில் ஒரு பகுதி: 'ஐ. நா. அமைப்பு ஓர் உலகளாவிய அமைப்பு மட்டுமன்று; உலகளாவிய ஓர் இயக்கத்தின் பயனாகவும், உலகளாவிய ஓர் அரசாங்கத்தின் முன்னோடியாகவும் உள்ளது.'

'வாயில்லாத மார்க்ஸ்களுக்கும், ஆதரவற்ற ஸாக்ரட்டிஸ்களுக்கும் ஐ. நா. அமைப்பு வாயும் ஆதரவும் தரும்.'

காலத்துடன் காலமாக ஆகிவிட்ட 1947ல், 'வருங்காலத் தமிழகம்' என்ற இவரது ஆராய்ச்சி நூலில், புரட்சிக்கவி பாரதிதாசன் அவர்கள் நம் புலவரை எடைபோடுகின்றார்: 'புலவர், இந்நாள் இந்நாட்டிற்கு எத்தொண்டு இன்றியமையாததோ அதை விரிந்த முறையில் ஆற்றி வருகிறார்; தமிழர்களின் நன்றி. புலவர் அப்பாத்துரை வாழ்க! தமிழ் வாழ்க! தமிழ்நாடு வாழ்க!'

'தமிழ் முழக்கம்' வாயிலாக எம். ஏ. எல். டி. விசாரத் ஆசிரியர் தன் குறிக்கோளைக் குறிப்பிடுகிறார்: ''தமிழர் இனிமேலும் விழித்தெழுந்து பொதுப் பற்றுடன் தனிப் பண்பு பேணித் தம் பொது மறையாம் திருக்குறளின் நெறியைப் பின்பற்றி, 'பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்' எனப் பறையறைந்து பண்புடன் வாழ்வாராக!''

மேற்படி நூலில் இவருடைய தமிழார்வம் பிரித்திருக்கின்ற அத்தியாயத் தலைப்புக்கள்: தமிழ் வாழ்க!; தமிழர் வாழ்க!; தமிழ்த் தாய் வாழ்க!; தமிழ்ப் பண்பு

வாழ்க!; தமிழ்த் தெய்வம் வாழ்க!; தமிழ் இலக்கியம் வாழ்க!; தமிழ் இசை வாழ்க!

இவர் ஆங்கிலத்தில் எழுதிய 'இந்திய மொழிப் பிரச்சினை' (India's Language Problem) எல்லோராலும் போற்றப்பட்ட ஆராய்ச்சிப் புத்தகம்.

'பொன்னி', 'விருந்து'; 'மேகலை' ஆகிய பத்திரிகைகளிலும் இவரது ஆசிரிய முத்திரை பதிந்து இருந்திருக்கிறது.

தூய தனித் தமிழைத் தேர்ந்தெடுத்து எழுதி வருவதில் பன்மொழிப் புலவருக்குப் பெரும் மதிப்பு என்றுமே உண்டு. Autobiagraphy-இதற்குத் தூய தமிழ்ச் சொல் என்ன தெரியுமா? – 'தன் வரலாறு'. 'Doctor'– இலக்கியத் துறை டாக்டர் என்கிறார்களே, அதற்கு 'முனைவர்' என்பது இவரது கண்டு பிடிப்பு.

அப்பாத்துரை அவர்கள் ஒரு கவிஞருங்கூட. ஆதாரம்: 'நிழலும் ஒளியும்'. தமிழகம் பெருமைப் படத் தக்க அறிவுக் களஞ்சியத்தைப் பற்றி 1949-ல் திரு வி. க. அவர்கள் எழுதுகிறார்:

'இவர் தம் நூல்கள் தமிழ் நாட்டைப் படிப்படியே ஓம்பி வருதல் கண்கூடு.'

இந்நூல் கவிமணியைப் பெரிதும் மகிழச் செய்ததாம்.

கவிமணியின் பாராட்டிற்கு உரைகல் வரிகள் இவை:

'இனிய தமிழில், செந்தமிழில்
என்றும் தழைத்து வரும்தமிழில்
கனியும் கண்டும் கனிந் தொழுகு
கவி செய்துள்ளம் மகிழ்விப்போன்'

பாராட்டை மாத்திரம் சொல்லி நிறுத்திவிட மாட்டேன். கவிஞரின் பாட்டையும் 'பதச்சோறு முறை'யில் அறிமுகப் படுத்துகிறேன்.

'கனவென்னும் நங்கை அரைத்
துயிலிற் கண்ட
கனவெல்லாம் கண்காணுக்
காட்சியோ? செம்
புனலென்ன வழிந்தோடும்
அனல் வெள்ளம் போய்ப்
புகைக் கொடியார் துகிலெடுப்பப்
போந்த தாலோ!'

மேனாட்டு இலக்கியக் கதைகள், வியப்பூட்டும் சிறுகதைகள், சிங்காரச் சிறு கதைகள் முதலியன சிறுவர்க்கான கதை விருந்து. டேவிட் லிவிங்ஸ்டன், பெஞ்சமின் பிராங்க்லின், பெர்னாட்ஷா, ஐன்ஸ்டீன் போன்றோரின் தன் வரலாற்று நூல்கள் பயன் தருபவை. 'ஆயிரத் தெண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம்', 'குமரிக்கண்டம்', 'இந்திய மக்கள் விடுதலை இயக்க வரலாறு', 'உலக இலக்கியங்கள்', 'தென்னாடு', 'அன்னை அருங்குறள்', 'பொன்னின் தேட்டம்', 'சமதர்ம விளக்கம்' போன்ற நூல்கள் ஆராய்ச்சி அளித்த பரிசுகள். பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களையும் நிறைந்த அளவில் தமிழில் கொணர்ந்திருக்கின்றார்.

புதுமுறைத் தமிழகராதி இவருடைய பெயரை என்றும் நிலைக்கச் செய்யும்.

தமிழ், தமிழ் நாடு, தமிழர்–இம் மூன்று கிளைகளுக்குள் தன்னைத் தானே உலவி வர அனுமதித்து, அல்ல – தன்னைத் தானே அர்ப்பணித்துக் கொண்டுள்ள பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரை அவர்களுக்குத் தமிழ் கூறும் நல்லுலகம் கடமைப் பட்டது. என்னுடைய மதிப்பிற்குரிய முன்னாள் ஆசிரியருக்கு 'உமா'வின் தொடர்பில் பணிவன்புமிக்க நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆரம்பமல்ல – முடிவு

'எழுத்துலகில் நான்' – இத் தொடரில் தங்களைப் பற்றி என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்?

இரண்டு வகையான எழுத்தாளர்கள் இருக்கின்றனர்; ஒரு சாரார் மக்களுக்கு அறிவு பரப்பும் எழுத்தாளர்கள். இவர்கள் அறிஞர்கள். இது முதல் பிரிவு. மக்கள்

உள்ளத்தில் நல்ல உணர்ச்சிகளை இயக்கி இன்பம் ஊட்டும் எழுத்தாளர்கள் கலைஞர்கள், அல்லது இலக்கியஎழுத்தாளர்கள். இது இரண்டாம் வகை.

நான் முதல் வகையைச் சார்ந்தவன். இருந்தாலும், மக்கள் பின்பற்றும் வண்ணம் எழுத்துக்களுக்கு இலக்கிய வடிவம் கொடுத்து எழுத வேண்டும் என்பது என்னுடைய நம்பிக்கை; என்னுடைய திட்டம்.

பழம் பெரும் பாடல்கள், சங்ககால இலக்கியங்கள் முதலியன அதிகமான அளவுக்கு மக்களிடையே பரவ தாங்கள் சொல்லும் யோசனைகள் என்ன?

பெரும்பாலும் பள்ளிகளும் பத்திரிகைகளும் ஒத்துழைத்துச் செய்ய வேண்டிய பணி இது. புலவர்கள், தமிழாசிரியர்களாக மட்டுமில்லாமல், பாடஆசிரியர்களாகவும் பத்திரிகை ஆசிரியர்களாகவும் இடம் பெறுவது அவசியம். ஏனென்றால், இவர்கள்தாம் மக்களுடன் மிகுதி தொடர்பு கொள்பவர்கள். தமிழ் ஆட்சி மொழியாகும் வரை இத்திட்டம் முழுவதும் வெற்றி பெறாது.

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்– பாரதியாரின் கருத்து இது. தங்களுக்கு உடன்பாடுதானா?

உலக நாடுகளில் தமிழகம் இடம் பெறும் வரை இது அவசிய மான தேவை. விஞ்ஞான நூல்கள் சம்பந்தப்பட்டமட்டில் என்றுமே இத்தேவை இருக்கக்கூடும். ஆனால், விஞ்ஞானம் உற்பத்தி செய்யும் உலகமொழிகளிலிருந்து தமிழர்கள் தாங்கள் மொழி பெயர்ப்பது போல, தம் மொழியும் உலக மொழிகளில் பெயர்க்கப்படும் தேவையும் உண்டாகும் வாய்ப்பு அமைக்கப்பட ஆவன செய்து கொள்ள வேண்டும்.

சில பத்திரிகைகள் 'பாரதி பரம்பரை' என்றும், மற்றும் சில 'பாரதிதாசன் பரம்பரை' என்றும் கவிதைப்பகுதியில் பாகுபாடு காட்டி வருகின்றனவே! – இது

ஏடெடுத்தேன் பாட்டெழுத : 2

தமிழன் வேண்டுவது

பரலி சு. நெல்லையப்பர்

உள்ளத்தோ டுடம்பிலும் உறுதி வேண்டும்;
உயர் இமயம் எனப்பரந்த உள்ளம்வேண்டும்;
கள்ளத் தனங்களெலாம் ஒழிய வேண்டும்;
காசினியில் உண்மையே நிலவவேண்டும்;
எள்ளற் குரியதீ வறுமை யின்றி
எல்லோரும் நல்வாழ்வு வாழவேண்டும்;
தெள்ளுதமிழ் மொழிமீண்டும் இமயத் தேறிச்
செகமெலாம் தனியரசு செலுத்தவேண்டும்!

ஜாதிமத வேற்றுமைகள் ஒழிய வேண்டும்;
சன்மார்க்க நெறி யெங்கும் வளரவேண்டும்;
ஆதியிலே யிருந்தபடி அறம் வளர்ந்து
அன்பினே டின்பவாழ் வோங்க வேண்டும்;
தீதிலதாய் நன்மை யெலாம் மலியவேண்டும்;
செந்தமிழிங் கொருதனிக் கோல் ஓச்சவேண்டும்;
ஓதுபல பேர்களுடன் விளங்கு கின்ற
ஒருவனேயிங் கேத்தியே வாழ வேண்டும்!

ஆடலொடு பாடலும் திகழ வேண்டும்;
அன்பு மதம் உலகமெலாம் பரவவேண்டும்;
வாடாமல் உயிர்க ளெலாம் வாழவேண்டும்;
வதைத்துயிரைத் தின்னும் மறம் ஒழியவேண்டும்;
கூடியே எல்லோரும் வாழ வேண்டும்;
கொலை களவு புலையாதி ஒழியவேண்டும்;
நீடுதமிழ் வளர்ந்தோங்கி வைய மெல்லாம்
நிலையான தனியரசு செலுத்த வேண்டும்!

அடுத்த இதழில்

இலக்கியப் பட்டி மண்டபம்

*

பேட்டி:
இராஜ அரியரத்தினம்
ஆசிரியர்: 'ஈழகேசரி'

*

பரிசுக் கதை:
அவன் மனிதன்
க. இராசாராம்

*

மாதவியின் மாண்பு
ம. பொ. சி.

*

தம்பிக்கு:
ஜி. உமாபதி

*

ஏன் இந்தப் புனை பெயர்?
'கேதாரி'

*

தொடர் கதைகள்:
'வாடா விளக்கு'
'மாயாவி'
ஜாதி ரோஜா
'பூவை'

*

புதிய பகுதி:
உலகம் சுற்றினேன்!
அமிர்தம்

*

ஏடெடுத்தேன் பாட்டெழுத:
நான் விரும்பும் எழுத்தாளர்
மரகதச் சிலை மர்மம்
உருவகக் கதை வரிசை
நடமாடும் தெய்வங்கள்
நீதியும் அநீதியும்

*

சிறு கதைகள்:
எம். வி. வெங்கட்ராம், பி. எக்ஸ். ரங்கசாமி, கௌசல்யா சம்பத், டி. எஸ். வெங்கட்ரமணி, இளம் பாரதி, நெடுமாறன்.

விரும்பத்தக்கதல்ல என்பது என் எண்ணம். உங்கள் கருத்து....?

இரண்டு பரம்பரையுமே சங்க இலக்கிய பரம்பரை என்று ஓரளவு கூறி விடலாம். ஏனென்றால், சங்க இலக்கியம் போல இருவருமே தம் கால நிகழ்ச்சிகளையும் கருத்துக்களையும் தம் கால மொழியிலேயே தெரிவித்திருக்கிறார்கள். தனித் தனிப் பரம்பரையாகச் சொல்லாவிட்டாலும், இரண்டும் புதிய பரம்பரைதான்! அதோடு, ஒருவர் அரசியலிலும், சமயத்திலும், அடுத்தவர் சமுதாயத்திலும், மொழியிலும் சற்று மிகுதியான வற்புறுத்தல் செய்துள்ளனர். இரண்டிலுமே இரண்டு கூறுகளும் உண்டு.

இந்நாளைய அரசியல் வாதிகளில் தாங்கள் விரும்பி ஏற்கும் பெயர் அல்லது பெயர்கள் என்னென்ன?

பொதுவாக அரசியல் வாதிகளைப் பற்றி நான் எண்ணுவதில்லை. தமிழ், தமிழர் நன்னிலை அடைய உழைத்த அரசியல் வாதிகள் என்ற வகையிலும், மனித இன்பத்திற்குப் பொதுவாகப் புது வழிகாட்டியவர் என்ற வகையிலும் பெரியார் ஈ. வே. ரா, சிவஞான கிராமணியார், அறிஞர் அண்ணாதுரை, நாவலர் நெடுஞ்செழியன் ஆகியோரை நான் பெரிதும் போற்றுகிறேன்.

நூலாசிரியர் என்ற தொடர்பில் பிற நூலாசிரியர்களைப் பற்றி நீங்கள் என்ன எண்ணுகிறீர்கள்?

ஆங்கில நாட்டுக்கு எலிசபெத் காலமும், சம்ஸ்கிருதத்திற்குக் காளிதாசன் காலமும், தமிழுக்கு சங்க காலமும் போல புதிய தமிழகத்துக்குப் புது மறுமலர்ச்சிக் காலமென்று நினைக்கிறேன். எல்லா வகைப்பட்ட ஆசிரியர்களையும் மறுமலர்ச்சித் தூதுவராகவே நான் கருதுகிறேன். சிறப்பாக, கலைக்கண்ணோட்டம் செலுத்திய வகையில் மறைமலை அடிகள், கி. வா. ஜகந்நாதன், ரா. பி. சேதுப் பிள்ளை, டி. கே. சி. ஆகி

யோரையும் பழமையைப் புதுப்பிக்க உதவியவர் என்ற வகையில் டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரையும் ஔவை துரைசாமி போன்றோரையும், புலமை எழுத்தாளர் என்ற வகையில் டாக்டர் மு. வ. போன்றோரையும், அறிஞர் என்ற முறையில் திரு வி. க., சேலம் பாவாணர் ஆகியோரையும், இவ்வெல்லா வகையிலும் டாக்டர். அ. சிதம்பரநாதன் செட்டியாரையும் மதிக்கிறேன்.

ஆரிய – திராவிடப் பிரச்சினை தமிழினத்தின் வளர்ச்சிக்கு எந்த வகையில் தேவைப் படுவதாக நீங்கள் நினைக்கிறீர்கள் ?

தமிழ், சம்ஸ்கிருதம் என்பவை மொழிப் பெயர்கள். ஆரியம், திராவிடம் இரு மொழிச் சார்பான இன நாகரிகங்கள். இரண்டும் ஒன்றுடன் ஒன்று கலந்தே காணப் பட்டாலும், ஒன்று ஆளும் இனமாகவும், ஒன்று அதற்கு அடிமைப் பட்ட இனமாகவும் ஆரியச் சார்பாளர்களால் கருதப் பட்டது. உண்மையில், பண்பாட்டைப் பார்க்க இது நேர்மாறானது. வரலாற்றில் ஆரிய நாகரிகம் என்பது, தமிழ் நாகரிகத்துடன் ஒரு சிறிது கலந்த ஓர் அரைகுறை நாகரிகம் மட்டுமே. ஆரியமும் திராவிடமும் தனித் தனியே இயங்குவதானால் இரண்டிலும் கேடில்லை. ஆனால், ஒன்றை இன்னொன்றின் மேல் திணித்தல் மட்டும் தவறு. அத்துடன் ஆரியம் சாராத திராவிட நாகரிகமும் தூய தனித் தாய் மொழிகளும் உண்மையில் உயர்வுடையவை என்று தனித் தமிழாளரும் திராவிட இயக்கத்தினரும் கருதுகின்றனர். இதை வருங்கால உலகம் தெளிவாக உணரும்.

இந்தியாவுக்குப் பொது மொழி ஒன்று தேவைதானா ?

இந்தியாவிலுள்ள இனங்கள் எந்த வகைக் கூட்டுறவு மேற்கொண்டாலும், மத்தியக்கூட்டுறவு அரசியல் தனக்கென ஒரு பொது மொழி வைத்துக் கொள்வதை

உள்ளது உள்ளபடி

எழுத்துலகச் சிற்பிகள் சிலரின் கருத்துரைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அவை யார் யாருடைய சிந்தனைச் சிதறல்கள் என்பதை இனம் கண்டு பிடியுங்கள்.

1. இளங்கோவைச் சமயக் கண்ணுடன் நோக்காது இன உணர்ச்சியுடன் நோக்கி, தமிழர் வாழ வழிகாட்டிய அந்த வள்ளலை வாழ்த்துவோமாக!

2. 'நீ எனக்கும் உனக்கு நானும்
நேருக்கு நேர் தித்திக்கும் பாலும்
தேனும்!'

3. கற்பு, கற்பு என்று கதைக்கின்றீர்களே, இதுதானய்யா பொன்னகரம்!

4. மேடைகள் தோறும் பேசியும், ஏடுகள் தோறும் எழுதியும், இல்லந் தோறும் மக்கள் உள்ளந் தோறும் வாசக சாலைகளின் பெருமைகளைப் பரப்ப வேண்டும்.

5. தலைசிறந்த சினிமா விமரிசகர் திருவாளர் பொது ஜனம்!

6. வானத் தாம்பாளத்தில் சிதறியோடிய செந்தூரக் குழம்பு காய்ந்து கொண்டிருந்தது.

*

சொல்லுங்கள்—கேட்போம்:

1. பிறந்த மண்ணின் பாசத்தில் அதையே தங்களின் புனை பெயராகக் கொண்டு எழுதும் எழுத்தாளர்கள் சிலர் இருக்கிறார்களல்லவா ? அவர்கள் யார், யார் ?

2. அந்நாளில் ஏழைகளைப் பற்றியே பெரும்பாலான கதைகளை எழுதிய எழுத்தாளர் யார் ?

3. 'செந்தமிழ்க்காவலர்' என்ற பட்டம் பெற்றவர் யார் ?

4. தமிழகத்தில் பன் மொழிப் புலவர் இருவர் தாம் இருக்கின்றனர். அந்த இருவர்....?

உங்கள் கைக்கு 'உமா' இதழ் கிடைத்தால், அப்போது உங்கள் விடைகள் நூறு சதவிகிதம் சரி என்று அர்த்தம்.

விட, மக்கள் மொழிகள் எல்லா வற்றையும் சரி சமமாக மேற் கொள்ளும் 'மொழி பெயர்ப்பு அரசியலே'யே நான் பெரிதும் விரும்புகிறேன். இது, அக்கூட்டுற வினைப் பலப்படுத்துவதுடன் உலக அரங்கில் அதன் செல்வாக்கையும் வளர்த்து, வருங்கால 'ஒரே உலக அரசியலு'க்கு வழி காட்டியாக வும் அமையும் என்பது என் கருத்து. இது சாத்தியமாக முடியு மென்பதற்கு உதாரணம் தேவை யென்றால், அதோ, ஸ்விட்ஸர் லாந்து இருக்கிறதே!

'தமிழ் நாடு' அமைப்பு முறை உங்கள் கருத்துக்கு ஒவ்வு மல்லவா?

தமிழ் மொழியை ஆட்சி மொழி யாகக் கொண்ட தனித் தமிழ் நாடு அமைவது எல்லாக் கட்சி யினரும் விரும்புவதே யாகும். ஆனால், தனி இனங்களின் தனித் தன்மையற்ற ஓர் அகில இந்தியா துரதிர்ஷ்டவசமாக சிலரால் கனவு காணப்பட்டு, இந்திய தேசிய வாழ்வில் தம் அறியாமை யால் பெருங் குழப்பம் விளைவிக் கிறது. தனித் தன்மையும் சமத் துவமும் உடைய கூட்டுறவே உண்மையில் வலிமை வளர்ந்த அன்புக் கூட்டுறவாக வளர முடி யும்.

சென்னைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், தமிழ் வளர்ச்சிக் கழகம் – இவை தமிழுக்குச் செய்து வரும் சேவை பற்றிய உங்கள் எண்ணம் என்ன?

மூன்றும் தமிழுக்கு நல்ல சேவைகள் செய்து வருகின்றன. ஆனால், தமிழ் ஓர் உயர் தனிச் செம் மொழி என்பதை மறந்து செய லாற்றுகின்றன.

தமிழகத்தின் பிரகாசமான எதிர்காலத்துக்கு நீங்கள் சொல் லும் வழி ஏதாவது உண்டா?

தமிழ் நாட்டில் தலைவர்களுக்குள் காந்தியாரைப் போல கட்சி கடந்த நாட்டு நலன் உடையவர் களும், தன்னலம், போட்டி மனப்பான்மை ஆகியவை கடந்த மனித நலன், திருவள்ளு வரின் அன்புக் குறிக்கோள் உடைய ஒரு தலைமையும் அமையா தது ஒரு குறைபாடு. தமிழினத் துக்கு ஒரு குறைபாடு தொன்று தொட்டே உண்டென்றால், அதில் இதுவே முக்கியமானதொன்று.

தமிழ் உயர் தனிச் செம்மொழி. இது எல்லாக் கட்சியினராலும், ஏன் நம் புலவர்களாலும் கூட, அடிக்கடி மறக்கப்பட்டு வரு கிறது. தற்போதைய பெரிய பழம் பொருள் ஆராய்ச்சி மூலம் உயர் தனிச் செம்மொழிகளிடையே கூடத் தமிழ், தமிழ் இலக்கியம், தமிழ்ப் பண்பாடு, ஆகியவை சம்ஸ்கிருதம், கிரேக்கம், இலத் தீனம் போன்ற மொழி இலக்கியப் பண்பாடுகளைக் காட்டிலும் பழமை யும் சிறப்பும் வருங்கால உல குக்கு முக்கியத்துவமும் உடையது என்பது தெளிவாகும். அயல் மொழிகள் எதுவானாலும், தேசி யக் கல்வியில் அவற்றுக்கு இடம் தாராமல், தனிப்பள்ளிக் கல்லூரி களிலோ, அல்லது தனிப் போதனை முறையிலோ (Diploma) அவற் றின் வளர்ச்சியை அரசாங்கம் கவனிப்பது பயன் தருவதாகும். உச்ச உயர் இடத்தில் இந்திய அரசாங்கம் இதைப் பின்பற்ற வேண்டும். அப்போது தான் சிறந்த பயன் தரும். ★

'உமா'விற்குப் பிரத்தியேகமாக 'பேட்டி' கொடுத்துத் தங்கள் கருத்துக்களை வழங்கிய மதிப்பிற்குரிய இலக்கிய அன்பர்கள்: **தி. ஜ. ர; கல்கி; ரா. பி. சேதுப் பிள்ளை; பெ. தூரன்; மாயாவி; ம. பொ. சி; அகிலன்; தேவன்; சோமு; எஸ். ஏ. பி; அண்ணாமலை; கோ. அருணசலம்; தமிழ்வாணன்.**

அழகுக்கு அழகு செய்யும்
அசோகா ராயல் டால்க் பௌடர் டீலக்ஸ்

சர்மத்தை மிருதுவாகவும் பிரகாசமாகவும் செய்யக் கூடிய வஸ்துக்கள், வாசனைத் திரவியங்கள் இதில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

அழகுள்ள 2 சைஸுகளுள்ள டப்பிகளில் கிடைக்கும்.

உங்கள் வியாபாரிகளிடம் விசாரிக்கவும்.

விஜயா கெமிகல்ஸ், மதராஸ்-7

'ராதாஸ்'

உயர்தர ரொட்டிகள், பன்கள், பிஸ்கட்கள், பேன்ஸி கேக்குகள், தினசரி தயாரிப்பவர்கள்.

உரிமையாளர்: டி.பி.ஜி.சாமி

ராதா பிஸ்கட் பாக்டரி

பேக்கர்ஸ் & கன்பெக்ஷனர்ஸ்

161, தங்கசாலை தெரு, மதராஸ்-1

மனதிற்கு மகிழ்ச்சியும், உற்சாகமும் கொடுக்கக்கூடிய

திரீ ரோஸ் பிராண்டு டீயை

உபயோகித்து

ஆனந்தமடையுங்கள்

Three Rose Brand TEA

★

குனீஸ் டீ ஸ்டோர்

தலைமை ஆபீஸ்: திருவனந்தபுரம்.

கிளை ஆபீஸ்கள்:

சென்னை, திருநெல்வேலி,

வேலூர், தஞ்சாவூர்.

கௌரி சுருட்டுகள்

19, பிடாரியார் கோவில் சந்து, சென்னை-1.

தமிழ் இங்கிலீஷ் போதினி

தமிழ் படிக்கத் தெரிந்தவர்கள் இந்தப் புஸ்தகத்தின் மூலம் பிறர் ஒத்தாசையில்லாமல், இங்கிலீஷ் சுலபமாகப் படிக்கவும், பேசவும், கடிதங்கள் எழுதவும்கற்றுக் கொள்ளலாம்.

ஒரு பெரிய பைண்டு புஸ்தகம்.

விலை ரூபாய் 5—0—0

தையல் கட்டிங் & மானுவல்!

இப்புத்தகத்தின் மூலம் யார் வேண்டுமானாலும், எவர் உதவியைக் கொண்டும் தையல் வேலையை சுலபமாகக் கற்றுக் கொள்ளலாம்.

விலை ரூபாய் 3—8—0

ஹிந்தி ஆசான்

தமிழைக் கொண்டு பிறர் உதவியின்றித் தானே சுலபமாகப் படிக்கவும் பேசவும் கற்றுக்கொள்ளலாம்.

விலை ரூபாய் 1–12–0

V. P. செலவு ரூ. 0–12–0.

VANI BOOK DEPOT (U)
Post Box No 239. MADRAS-I.

இ ஞ ம்

எங்கள் கருங் கூந்தல் தைலம் நெ. 501 உபயோகிப்பதன் மூலம் எல்லாவித மான கேசமும் நன்கு கருத்து, எப்பொழுதுமே கருமையாக வளரும். இது மயிர் உதிர்வதைத் தடுத்து, நீண்டு கருகருவென்று சுருண்டு வளரச் செய்கிறது. ஒரு சீசா விலை ரூ. 1|15. முழு உபயோகத்திற்கும் தேவையான 3 சீசாவின் விலை ரூ. 5|-. இந்த அற்புத தைலத்தை பிரபலப்படுத்துவதற்கென, அழகிற்கும் உறுதிக்கும் 15 வருஷ உத்தரவாதம் பெற்ற ஓர் அழகிய பான்ஸி கை கடியாரமும், ஒரு மோதிரமும் (நியூ கோல்ட்), 3 சீசா வாங்குபவர்களுக்கு 6 பான்ஸி கை கடியாரங்களும் மற்றும் 6 மோதிரங்களும் (நியூ கோல்ட்) முற்றிலும் இலவசமாக அளிக்கப்படும். திருப்தி இல்லையேல் பணம் வாபஸ்.

AMRIT PHARMACY, (U.M.) Nakodar. (Pb.)

எங்கும் புகழ்பெற்றது!

விஜயகர்

மணிலா சுருட்டுகள்

V. ஆறுமுக செட்டி

18. அண்ணா பிள்ளை தெரு, சென்னை-1.

மாய மோதிரம்! ரொக்கப் பரிசு ரூ. 1,000!

(அபூர்வ சக்தியுடையது)

இந்த மோதிரம் மாயா ஜாலத்தாலும், மெஸ்மரிஸ சக்தியாலும் தயாரிக்கப்பட்டது. யாராவதொருவர் இம்மோதிரத்தை அணிந்து கொள்ளுங்கள்; உங்கள் காரியங்களில் வெற்றியோ, அல்லது, உங்களிடம் பணிவோ ஏற்படச் செய்யும். உங்களை எல்லாவித ஆபத்துக்களிலிருந்தும் இது காப்பாற்றும். துர்தேவதைகள் உங்களிடம் அணுகாது. இந்த மாய மோதிரத்தை அணிந்து கொண்டவர்களிடம் ஆண், பெண் அடங்கி நடப்பார்கள். இவர் பெயரைக் கேட்டாலே நடுங்குவர். காணாமற் போனவர்களைக் கண்டறியலாம். நீங்கள் காதலில் வெற்றியும், கோர்ட்டு வழக்குகளிலும், உத்தியோக உயர்விலும், அதிகப் பணம் சம்பாதிப்பதிலும் வெற்றி யடைவீர்கள். சுருங்கச் சொன்னால் இம் மோதிரம் ஒரு பாதுகாப்பாளனைப் போன்றது. ஒரு முறை பரீக்ஷியுங்கள். முதல் இரவிலேயே பலன் காண்பீர்கள். இதன் விலை ரூ. 1-15-0. ஸ்பெஷல் ரூ. 3-0-0. ஸ்பெஷல் அதிக சக்தி வாய்ந்தது ரூ. 3-15-0. தபால் செலவு தனி. பலன் இல்லையென்றால் பணம் வாபஸ் செய்யப்படும்.

Principal: THE BENGAL MESMERISM HOUSE

(U M.) NAKODAR, (P. B)

அச்சிட்டு வெளியிடுபவர், ஆசிரியர்: ஜி. உமாபதி, உமா பிரிண்டர்ஸ், 4/32, தாதா முத்தியப்பன் தெரு, சென்னை-1 (தமிழ் நாடு) போன்: 2200.


அன்னையின் உற்ற தோழி
ஐயோ பாவம்! குழந்தைக்கு மறுபடி சளிப்பு.
அச்..ச் அச் அச் அச்..
நல்ல முடக்கு வாதம்! வலி தாங்கமுடியவில்லை இன்றைக்கு ஆபீஸுக்குப் போனாற்போல் தான்.
அம்மா! என் கால் சுளுக்கிண்டுடுத்தே. இன்னிக்கி எப்படி மாட்ச் ஆடுவேன்.
டாக்டரின் அறையில்
...ஆமாம். அம்மா! தலைவலிக்கு மட்டுமல்ல. லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம், சுளுக்கு, பிடிப்பு, வாதம் மற்றும் எல்லா வலிகளுக்கும் மிகச்சிறந்தது. சளிக்கும், இருமலுக்கும், இணையற்ற நிவாரணி. நீங்கள் எப்பொழுதும் கைவசம் வைத்திருக்க வேண்டும்.
சில நாழிகைக்குப் பின்
ஓரியண்டல் பாம் தான் உங்களை இவ்வளவு சீக்கிரம் குணப்படுத்தியது.
ஆமாம். நான் ஆபீஸுக்குக் கிளம்பியாச்சு! இலையைப்போடு
நானும் கூட இன்றைக்கு மாட்சில் சக்கை போடு போடப் போகிறேன் அப்பா!
ஒவ்வொரு வீட்டிலும் லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம் அவசியம் இருக்க வேண்டும்
ORIENTAL BALM
லிட்டில்ஸ்
ஓரியண்டல் பாம்
எல்லா சளி, வலி, நோவுகளுக்கும்

Regd. No. M 6309. UMA September 1956
Registered as a Newspaper in Ceylon.

20 31/8

Edited, Printed and Published by G. Umapathy, at Uma Printers,
"Uma House" 4/32, Thathamuthiappan Street, Madras-1. (Tamil Nadu.)